www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 1,50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

★ இதழ் எண் 29 ★ பிப்ரவரி, 1990 ★


**சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் பொதுக் கூட்டம்**

★ காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை பேணு!
★ இந்திய — பாகிஸ்தான் ராணுவங்களே காஷ்மீரிலிருந்து வாபஸ் வாங்க போராடு!
★ மத அடிப்படையிலான 1947 உபகண்ட பிரிவினையை நிராகரி!
★ உபகண்டத்தில் ஐக்கிய சோசலிசக் குடியரசுகள் அமைக்கப் போராடு!

**பாரதி திடல் (மார்க்கெட்) தாராபுரம்**
**புதன், 28 - 2 - 1990**
**மாலை, 6-30 மணிக்கு.**

## காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை பேணு!

# இந்தியா-பாகிஸ்தான் ராணுவங்களே காஷ்மீரில் இருந்து வாபஸ் வாங்கப் போராடு! இந்திய உபகண்டத்தில் ஒரு ஐக்கிய சோசலிச குடியரசுகளை அமைக்கப் போராடு!

இந்தியா, பாகிஸ்தானில் உள்ள சூடான பிரச்சனைகளான பலகோடிக்கணக்கான வேலையின்மை, லட்சக் கணக்கான ஆலைமூடல்கள், ஆட்குறைப்புகள், சம்பள வெட்டுகள், விலைவாசியேற்றம் போன்றவற்றினால் தொழிலாளர், வறிய விவசாயிகள், இளைஞர்களிடமிருந்து இந் நாட்டுதிவாலானமுதலாளித் துவ அரசாங்கங்களுக்கும் எதிராகவளர்ச்சியடையும்எதிர்ப்புகளை திசை திருப்பவும், வர்க்கப் போராட்டங்களை குரூரமாக நசுக்குவதற்காக போலீஸ்-ராணுவ ஒடுக்கு முறை அரசு இயந்திரங்களை பலப்படுத்தவும் இந்தியா, பாகிஸ்தான் ஆளும்வர்க்கங்கள் தட்டி எழுப்பும் யுத்த, தேசியவெறிக் கூச்சல்களை இந்தியா, பாகிஸ்தான் தொழிலாள வர்க்கம் பாட்டாளி வர்க்க சர்வதேசிய அடிப்படையில் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவுகிறது.


ஜம்மு-காஷ்மீர் சம்பந்தமாக இந்தியா, பாகிஸ்தான் ஆளும் வர்க்கங்களின் பொய் பித்தலாட்டங்கள் நிறைந்த உரிமை கோரல்களை தொழிலாள வர்க்கம் எதிர்க்கவேண்டும். ஜம்மு-காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை பேணி இந்திய உபகண்டத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தாலும்-இந்திய (இந்து-முஸ்லிம்) தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் கூட்டுச் சதியாலும் உருவாக்கப்பட்ட மதவாத அரசு அமைப்புகளை ஆக்கிவிீ் இந்திய உபகண்

★2ம் பக்கம் பார்க்க

## மகளிர் மேம்பாட்டு கழக தொழிலாளர் போராட்டம்

—S. ராம

கடந்த ஆறுவருட காலமாக குறைந்தசம்பளத்தைக் கொடுத்து தங்களது உழைப்பைச் சுரண்டியும், கழிவறை, குடிநீர் வசதி போன்ற எந்த அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்காமலும் விடுப்புகால் உரிமைகளை வழங்காமலும் தாங்கள் கொத்தடிமைத்தனமாக நடத்தப்படுவதற்கு எதிராகவும், ஊதிய உயர்வு கேட்டால் அச்சகங்களை தனியாருக்குத் தாரைவார்க்க சதித்திட்டமிடும்முயற்சிக்கு எதிராகவும், பெண்கள் முன்னேற்றம் பற்றி வாய் கிழியப் பேசும் முதலாளித்துவ அரசாங்கத்திற்கு எதிராக வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மகளிர் மேம்பாட்டுக் கழகத் தொழிலாளர்களுக்கு அனைத்துத் தொழிலாள வர்க்கமும் தங்களது ஒன்றுபட்ட வர்க்க ஆதரவினைத் தரவேண்டும்.



தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக தொழிலாளர்கள், சென்னை டா ஆலை தொழிலாளர்களுடன் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்

1984ஆம் ஆண்டு மத்திய அரசின் உதவியுடன் மாநில அரசால் தொடங்கப்பட்ட மகளிர் மேம்பாட்டுக்கழகம் கிண்டி தொழிற்பேட்டை, தாம்பரம் சானிட்டோரியம், சிவகாசி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது.

சென்னையில் 150 தொழிலாளர்களும் சிவகாசியில் 150 தொழிலாளர்களும் (உடல் ஊனமுற்றோர்) இதில் வேலை செய்து வருகின்றனர். சென்னை கிண்டியில் உள்ள அச்சகத்தில் ஐந்து ஆண் தொழிலாளர்களுடன் பெண் தொழிலாளர்களும், மின்னணுவியல் உபகரணங்கள் தயாரித்தலிலும், தாம்பரம் சானிட்டோரியத்தில் கல்வி உபகரணங்கள் தயாரித்தலிலும் பெண்தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றார்கள்.

ஆவடி தொழிற்சாலைக்கு வேண்டிய கேபிள்பார்ம், (Cableform), மற்றும் டி. வி. காயில் (T. V. Coil), Printed Circuit Board போன்றவற்றை செய்துகொடுக்கும்தொழிலாளர்கள் மிகவும் கோரமாகச் சுரண்டப்படுகின்றார்கள். அரசுத் துறைகளுக்கு வேண்டிய புத்தகங்கள், பற்றுச்சீட்டுகள், ஆவின் பால்வழங்கும் அட்டைகள், கோஆப் டெக்ஸ் கவர்கள் போன்றவற்றை அச்சிட்டுக்கொடுத்த போதிலும், இவர்கள் குறைந்தசம்பளம்கொடுக்கப்பட்டு வருவதுடன், கொத்தடிமைகளாகவும் நடத்தப்பட்டு வருகின்றனர். இவர்களும் மாறி மாறி வரும் முதலாளித்துவ அரசாங்கங்களும்தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்திற்குப் பின்னர் கன்சாலிடேட் சம்பளமாக மாதம் ரூ. 390- தான் கொடுத்து வருகின்றார்கள்.

ஆனால் மகளிர்மேம்பாட்டுக் கழகத் தொழிலாளர்களோ தங்களது ஊதிய உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து 11—12—1989 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள்.

இவ்வளவு பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலையில் கழிவறை வசதியே இல்லை. குடிதண்ணீர் வசதியும்கூடக் கிடையாது. இவர்களது உழைப்பை பட்டப்பகலில் கொள்ளையிட்டசுரண்டியும் மாறி மாறி வந்த முதலாளித்துவ அரசாங்கங்களும் நிர்வாகமும் இதுவரையில், குறைந்த பட்ச ஊதியத்தைக் கூட கொடுக்கவில்லை.

பயிற்சிக்காலம் ஒருவருடம் தான் என்று முதலில் அறிவித்த நிர்வாகம் 2½ ஆண்டுகள் வரை அதனை அப்படியே நீட்டித்தனர். பயிற்சிக்காலத்தில் உதவித்தொகை என்று ரூ. 200 மட்டுமே கொடுத்தனர். பயிற்சிக்காலத்தில் ஒரு நாள் லீவு எடுத்தாலும் போதும், அதற்குத்தண்டனையாக மேலும் 2 நாட்களையும் சேர்த்து மொத்தத்தில்மூன்று நாள் சம்பளத்தை அந்த உதவித் தொகையில் வெட்டி எடுத்துக்கொள்வார்கள். 5 நிமிடம் காலதாமதமாகிவிட்டாலும் போதும் அன்றைக்கு வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். பயிற்சியை முடித்தாலும் சரி பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் கூட கொடுப்பதும்கிடையாது அதிகாரிகளின் ஆணவம்.

இவர்களுக்கு வருகின்ற அரசு அதிகாரிகளும், மேலாளர்களும தங்களின் அதிகாரத்துவ நலன்களைப்பேணுவதில் குறியாய் இருக்கிறார்

★4ம் பக்கம் பார்க்க

**ஈழத்திலிருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை வாபஸ் வாங்கப் போராடும்படி ஸ்டாலினிச சி. பி. எம். சி. பி ஐ. தலைமைகளை நிர்ப்பந்தி!**

படிப்பகம்

www.padippakam.com



# காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையை பேணு!

★1ம் பக்கத்திலிருந்து

...டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வறிய விவசாயிகளின், ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் ஸ்தாபிக்க போராடவேண்டும். உபகண்டத்தில் உலக சோசலிசக் குடியரசின் ஒரு பகுதியாக ஐக்கிய சோசலிசக் குடியரசுகள் அமைக்க போராடவேண்டும்.

உண்மை என்னவென்றால் ஜம்மு காஷ்மீர் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை இந்தியா, பாகிஸ்தான் இரு நாட்டு முதலாளித்துவ ஆட்சிகளும் தமது ராணுவத்தினால் ஒடுக்கி வருகின்றன. காஷ்மீர் சம்பந்தமாக இந்தியா, பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் எழுப்பும் கோரிக்கைகள் மோசடியானவை என்பதை ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி என்ற பெயரில் செயற்படும் தேசியவாத இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான அமனுல்லாகானின் அறிக்கை மேலும் அம்பலப்படுத்தி உள்ளது. "போர் நிறுத்த எல்லைகளைத்தாண்டி செல்லவேண்டாம் என்று நான் நமது மக்களுக்கு ராணுவச்சட்ட ஆணை மாதிரியான ஒன்றை பிறப்பித்துள்ளேன் 1 400 [illegible] போர் நிறுத்த [illegible] குறுக்கே ஒரு தொடர் [illegible] காங்கே நடைபெற்றும் சிறு சண்டைகள் ஒரு தொடர்ச்சியான பதில் தாக்குதலை உண்டு பண்ணிபோராகவெடிக்கலாம். அது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நெருக்கடி நிலைமைகளை உண்டு பண்ணக்கூடும், அது எமக்கு சாதகமானதாக இருக்காது. ஒரு போர் மூளுமாயின் நாம் நடுவிலே நசுக்கப்பட்டு ஒரு பலிக்கடா ஆக்கப்படுவோம்". (இந்தியன் எக்ஸ்பிரஸ், பிப்ரவரி 8, 1990).

காஷ்மீர் மக்களுக்கு டில்லி ஆட்சியாளர்கள் மீதுள்ள வெறுப்பு நவம்பரில் நடந்த மக்களவைத் தேர்தலை பெருமளவில் பகிஷ்கரித்ததன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரில் வாக்குப்பதிவே நடைபெறவில்லை. பாரமுல்லா, ஆனந்தநாக் தொகுதிகளில் 3% பேர்தான் வாக்களித்தனர். டில்லி ஆட்சியாளர்கள் காஷ்மீரின் வளர்ச்சி சம்பந்தமாக காட்டி வந்த புறக்கணிப்பினால் அங்கு தொழிற்துறை வளர்ச்சி எதுவுமே இல்லாமல் இருந்து வருகிறது, அதிகரித்து வரும் வேலையில்லா எண்ணிக்கையும், விலைவாசி ஏற்றமும் அங்கு சமூக நெருக்கடியை மேலும் உக்கிரப்படுத்தி உள்ளது.

கடந்த பல மாதங்களாக போலிசாருக்கும் அங்குள்ள இளைஞர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டது. தேசிய முன்னணி அரசாங்கத்தின் உள்துறை அமைச்சரின் மகள் காஷ்மீர் தேசிய இயக்கத்தினரால் கடத்தப்பட்டு, அரசாங்கத்தினால் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமது அமைப்பை சேர்ந்த 5 பேரை விடுவிக்கக் கோரி பணயக்கைதியாக வைக்கப்பட்டார். அந்த 5 பேரும் அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்னரே உள்துறை அமைச்சரின் மகள் விடுவிக்கப்பட்டார்.

அதனை தொடர்ந்துஏற்பட்ட எழுச்சியை ஒடுக்க மேலதிகமான ராணுவம் அனுப்பப்பட்டது, பத்திரிகை தணிக்கையும் அவசர நிலையும் பிரகடனம் செய்யப்பட்டது. இந்திய அரசாங்கத்துக்கும், அரச படையினருக்கும் எதிரான காஷ்மீர் மக்களின் எழுச்சி பாகிஸ்தானால் தூண்டிவிடப்பட்டது என்றும், காஷ்மீர் இந்தியாவை சேர்ந்த பகுதி என்றும் காஷ்மீர் தொடர்பாக நேருக்குநேர் நின்றுசண்டையிட பாகிஸ்தான் விரும்பினால் தகுந்த வகையில் பதலடி கொடுக்க இந்திய மக்களும், இந்திய ராணுவ வீரர்களும் தயாராகவேஇருக்கின்றனர் என்று பிரதமர் வி.பி.சிங் முழக்கம் செய்துள்ளார்.

## காஷ்மீரின் சுயநிர்ணய உரிமை நிராகரிப்பு

பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை எப்படி அணுகுகிறார்கள் என்பதை லண்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரக மேலதிகாரி சர்யார்கான் பின் வருமாறு கூறியுள்ளார். "நாம் சுயநிர்ணய உரிமையை பற்றி பேசும்போது நாம் கருதுவது காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் அல்லது பாகிஸ்தானுடன் இணைய தீர்மானிக்கவேண்டும். காஷ்மீரின் சுதந்திரம் விளையாட்டின் ஒருபகுதி அல்ல' காஷ்மீர் மக்கள் சுதந்திரமாக இருக்க தீர்மானித்தால் அதை நீங்கள் ஏற்று கொள்வீர்களா என்று பத்திரிகையாளர் கேட்டபோது [illegible] வேண்டும். இந்த சட்ட ரீதியான நிலைப்பாட்டுக்கே இரு பகுதியினரும் ஒப்புக்கொண்டு உள்ளனர். காஷ்மீர் மக்கள் செய்யவேண்டியது என்னவெனில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒப்பந்தத்திற்கு பணிந்து செல்வதாகும். இந்த ஒப்பந்தத்திற்கு புறம்பாக நீங்கள் பேசும் ஒரு மூன்றாவது தெரிவின் சாத்தியத்தை என்னால் காண முடியவில்லை" (இந்து, பிப்ரவரி 18 1990, ப.9).

மேற்கூறிய இந்த அறிக்கை பாகிஸ்தான், இந்திய ஆளும் வர்க்கத்தினர் சுயநிர்ணய உரிமை பற்றியகோட்பாட்டை விபச்சாரம் செய்து காஷ்மீர் மக்களின் அடிப்படைய ஜனநாயக உரிமையான தேசிய சுயநிர்ணய உரிமையைஎப்படி தமது பூட்ஸின் கீழ் போட்டு நசுக்குகின்றனர் என்பதுதெளிவாகிறது. இந்தியாவின் அரசியலமைப்புசாசனத்தில் 370ம் பிரிவு சேர்க்கப்பட்டு சிறப்பு அந்தஸ்துகொண்ட இந்திய மாநிலங்களில் ஒன்று என அறிவிக்கப்பட்டது. இதன்படி தனிக்கொடி, தனி அரசியல் அமைப்பு தனி அரசியல் நிர்ணய சபை வைத்துக்கொள்ள காஷ்மீருக்கு உரிமை உண்டென்றும் உண்மையான காஷ்மீரிகள் தான் அங்கு சொத்து உடமையாளர்களாக இருக்க முடியுமென்றும் அறிவிக்கப்பட்டது. நேருவின் ஆட்சிகாலத்தில் காஷ்மீரின் பிரதமமந்திரியாக இருந்த ஷேக்அப்துல்லா காஷ்மீரின் சுதந்திரம் பற்றி பொதுஜனவாக்கெடுப்புநடத்த வேண்டுமென்று டில்லி அரசை நிர்ப்பந்தித்ததன் காரணமாக அவர் தேசத்துரோகி என குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். டில்லி ஆட்சியின் அடிவருடிகளான பக்ஷிகுலாம்முகமது, சாதிக் ஆகியோர் ஒருவரின் பின் ஒருவராக 1974 வரை காஷ்மீரின் முதன் மந்திரிகளாக இருந்தனர், டில்லியின் பொம்மையாக செயற்பட ஒப்புக்கொண்டதற்கு இணங்க ஷேக்அப்துல்லா சிறையில்விடுவிக்கப்பட்டு டில்லி ஆட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதாவது காஷ்மீர் இந்தியாவின்ஒருபகுதிஎன்பதை ஏற்றுக் கொண்டார். இவ்வாறே ஷேக் அப்துல்லாவின்பின் முதல்வரான பாருக்அப்துல்லாவும்,அதேபோல் ஷாவும் காஷ்மீர் மக்களின்-தேசிய சுயநிர்ணய உரிமையை காட்டிக்கொடுத்தனர்.

## பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சூழ்ச்சி

கிழக்கில் திபெத்தையும், வடகிழக்கில் சீனவின் சிங்கியாங் மாகாணத்தையும், வடமேற்கில் ஆப்கானிஸ்தானின்எல்லைகளையும் கொண்டு ஜம்மு-காஷ்மீர் ஒரு மூல உபாய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருக்கிறது. ஜம்மு-காஷ்மீரில் இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்கள் பெரும்பான்மையாக இருப்பினும், லடாக் பள்ளத்தாக்கில் பௌத்தமதத்தை சேர்ந்தவர்கள்பெரும்பான்மையாக உள்ளனர்.

1947ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இந்து, முஸ்லீம் முதலாளித்துவ வர்க்கமும் சேர்ந்து செய்தசதியின்விளைவாகதேசிய விடுதலைப்போராட்டத்தில் மிக இறுக்கமான புரட்சிகர ஐக்கியத்துடன் இணைந்து செயல்பட்ட இந்திய உபகண்டத் தொழிலாள வர்க்கம் மதவாத ரீதியில் பிரிக்கப்பட்டு இந்து இந்தியாவும், முஸ்லிம்பாகிஸ்தானும் உருவாக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக [illegible] நின்று போராடி [illegible] பஞ்சாபி வங்காளி தேசிய [illegible] பிரிவினையின் [illegible] அடிப்படையில் கூறு போடப்பட்டன. அந்த சமயத்தில் ஜம்மு காஷ்மீர் தனி ஒருஅரசாக ஹரிசிங்எனப்படும் மன்னரால் ஆட்சி செய்யபபட்டது. இந்திய உபகண்டத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களை மதவாத அடிப்படையில் பிரிவினை செய்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமான ஜம்மு-காஷ்மீர் தனது கட்டுப்பாட்டுக்கு அப்பால் ஒரு தனி அரசாக இருக்க அனுமதிக்கவில்லை. அதனால் 1947, ஜுன் 3ல் மவுன்பட்டன் (பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி) காஷ்மீருக்கு சென்று ஜம்மு-காஷ்மீர் ஒரு சுதந்திர நாடாகஇருப்பது நடைமுறை சாத்தியமில்லை என்றும், அப்படியான அரசு பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப் படமாட்டதென்றும் கூறினர். ஆகஸ்ட் 15, 1947க்குள் இந்தியா அல்லது பாகிஸ்தான் இரண்டில் ஒன்றுடன் இணைவது பற்றி தீர்மானிக்கவேண்டுமென்று மன்னர் ஹரிசிங்கிடம் கூறப்பட்டது. ஆனால் இது மன்னரால் நிராகரிக்கப்பட்டது.

காஷ்மீரை பாகிஸ்தானுடன் இணைப்பதற்கு பல்வேறுஅழுத்தங்களை பாகிஸ்தான் கொடுத்தது. நிலப்பாதை வழியாக காஷ்மீருக்கு செல்லும் உணவு பெட்ரல், மற்றும் அத்தியாவசியப்பொருட்கள் பாகிஸ்தானால் தடுத்து நிறுத்தப்பட்டன. பின்பு காஷ்மீர் மீது பழங்குடி மக்களின் ஆதரவுடன் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டது. ஹரிசிங் மன்னர் ஆட்சி ஆபத்தில் இருக்கையில் காஷ்மீரை ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து காப்பாற்றுவதற்காக காஷ்மீர் பிரதமமந்திரி மகாஜன் இந்தியாவிடம் உதவி கேட்டார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்துக்கொள்ள மன்னர் சம்மதிப்பாராயின் ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி ஸ்ரீநகரை பாதுகாக்க இந்தியா தயார் என்று கூறப்பட்டது. இந்த நிபந்தனைக்கு காஷ்மீர்பிரதமர் ஒப்புக்கொண்டதற்கு இணங்க இந்திய ராணுவம் காஷ்மீரை ஆக்கிரமித்தது. ஜம்மு-காஷ்மீர் அரசின் ஒரு பகுதியாக இருந்தஜில்சிட் பாகிஸ்தானினால் ஆக்கிரமிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஜம்மு-காஷ்மீர் யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பது சம்பந்தமாக 1965ல் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போர்மூண்டது. அதன்பின்னர் 1971ல் பங்களாதேசம் சம்பந்தமாக போர்மூண்டது 1972ல் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் சிம்லாவில்போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தப் போர்க்கால கட்டத்தின்போதும் அதைத் தொடர்ந்தும் தொழிலாளர்கள் மேல் வேலைப்பளுசுமத்தப்பட்டது. வேலை நிறுத்தங்கள் சட்ட விரோதமாக்கப்பட்டன அதிக வரிகள் விதிக்கப்பட்டன. இன்றைய உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பிரமாண்டமான உள்நாட்டு வெளிநாட்டு கடன்களுடன் உலக ஏகாதிபத்திய வங்கியாளர்களின்அடிவருடிகளாக செயற்படும் இந்தியா, பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அவர்களுடைய ஆட்சிக்குஎதிரான தொழிலாளர்களின், ஏழை விவசாயிகளின், ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டங்களை திசைதிருப்பவும் நசுக்கவும், இந்து இஸ்லாம் மதவெறிகளை தூண்டிவிட்டு வருகின்றனர். இந்தியாவில் இந்துவெறியை தூண்டி இனக்கலவரங்களை உண்டு பண்ணும் வேலையை தேசிய முன்னணி ஆட்சியை தக்க வைக்கும் ஒரு முக்கிய கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி, [illegible] பரிஷத், [illegible] செய்கிறது. அயோத்தியில பாபர் மசூதி பள்ளிவாசல் அருகில் ராமர் கோயில்கட்டவேண்டும்என்று அதற்கான தயாரிப்புகளை தேசிய முன்னணி ஆட்சியின் ஆதரவுடன் செய்துவருகிறது பிப்ரவரி 14ம் தேதி ராமர் கோயிலைகட்ட ஆரம்பிப்பதாக இருந்த திட்டத்தை, விசுவ ஹிந்து பரிஷத்தும், ராம ஜன்மபூமி முக்தி யக்ஞ சமிதியும் பிரதமருடன் நடத்திய விவாதத்தின் பின் 4 மாதங்கள் ஒத்தி வைக்க தீர்மானித்துள்ளன. இந்து மதவெறி அமைப்புகள் எதிர்பார்த்தது போல்இதுநெருக்கடியிலுள்ள டில்லி ஆட்சியாளர்களுக்கு மட்டும அல்லாமல் பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கும் உதவியாக இருந்தது. இஸ்லாம் மதவெறி அமைப்புகள் இதனையும், காஷ்மீரில் நடக்கும் இந்திய ராணுவத்தின் அட்டூழியத்தையும தமதுபிற்போக்குமதவெறி பிரச்சாரத்தை முன்னெடுக்க பயன்படுத்துகின்றனர்.

இந்நிலையில் காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பகுதி என்பதை மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஒப்புக்கொண்டுள்ளதாக டில்லி ஆட்சியாளர்கள் தம்பட்டம் அடிக்கின்றனர். இந்திய உபகண்டத்தில்தொழிலாளர்களின் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்கி உலக ஏகாதிபத்தியத்தின் தெற்கு ஆசியா போலீஸ்காரனாக செயற்படும் இந்திய அரசாங்கத்தின் காஷ்மீர் மீதான ஆக்கிரமிப்புபிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆலோசனையுடனும் உதவியுடனும் செய்யப்பட்டால் அது ஏகாதிபத்திய, முதலாளித்துவநலன்களுக்குஅனுகூலமாகசெய்யப்பட்டதுஒன்று என்பதை நன்கு அறியும்மாஸ்கோ ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அமெரிக்கஏகாதிபத்தியமும் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரிப்பது இயல்பானதே.

இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில், இரண்டாம் உலகப்போரின் பின்பு உருவான சம்பிரதாய 'சுதந்திர நாடுகளில்' ஜனநாயக சமத்துவத்தின் அடிப்படையில் வேறுபட்டமொழி பேசுவோரும் மத மற்றும்இனரீதியான பிரிவினரும் வாழும் ஒரு தனி தேசிய அரசை உருவாக்க ஏகாதிபத்தியம் அனுமதிக்கவில்லை, தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினர் ஒடுக்கப்படும் மக்களை விடுதலை செய்வோராக அல்லாமல அவர்களை ஒடுக்கும் ஏகாதிபத்தியத்தின் ஜூனியர் பங்காளிகளாகவே செயற்பட்டனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு இந்நிலை பற்றி பின்வருமாறு கூறியது. "இப்படியான முதலாளித்துவ நாடுகள் மீதான ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் விளைவுகள் பெயர் போனதாகும். உள்நாட்டில் பொருத்தமான தொழிற்துறையை வளர்க்க முடியாத நிலையில் அவற்றின் பொருளாதாரதலைவிதிகள ஒரு சிறு மூலவளங்களை ஏற்றுமதி செய்வதுடன்பிணைக்கப்பட்டு ஒரு பிரமாண்டமான கடன் சுமையின் கீழ் மூச்சுத் திணறுகின்றன. பின் தங்கிய நாடுகளில் உள்ள பரந்த கல்வி அறிவின்மை, நோய்பட்டினி போன்றன மூச்செடுக்க விடாமல் செய்யும் நிலைமையை உணடாககியுள்ளன. உள்நாட்டில் தொழிற்துறை வளர்ச்சி அரிதான சமபவங்களாகவே இருந்தது. அப்படி ஏதாவது இருந்தாலும் கூட அவை சாதாரணமாக ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் உள்ள [illegible] உற்பத்தியின் பகுதிகளாகவே இருந்தன. அவை சிறப்பாக ஏகாதிபத்தியத்தின் உயர்ந்த லாபத்திற்கான மூல வளங்களாகவே ஊக்குவிக்கப்பட்டன. அவ்வாறான போலியான பொருளாதாரவளர்ச்சி ஒடுக்கப்படும் மக்கள்தொகையின் தேசியநலன்களுக்கு எவ்விதத்திலும் உதவி செய்யவில்லை அத்தகைய நிலைமைகளில் முதலாளித்துவ வர்க்கத்தின் குதூகல அரவணைப்புடன் தோன்றுவது சமூகங்களுக்கு இடையிலான கோர யுத்தங்களாகும். இந்தப் பிரச்சனைகளை முதலாளித்துவ ஆட்சி தொடரும்வரைதீர்க்க முடியாது. சுதந்திர காலப் போராட்டங்களைதொடர்ந்து தோன்றிய இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ், பர்மா போன்ற உண்மையில்உலகில் உள்ளபழைய காலனித்துவ நாடுகளின் வரலாறும் தீர்க்கமாக நிரூபிப்பது முதலாளித்துவ வர்க்கம் உண்மையான தேசிய ஒன்றிணைப்பையும் அரசியல் சுதந்திரத்தையும் நிலைநாட்டமுடியாது என்பதாகும்".

1947ல் ஏகாதிபத்திய பிரிவினைக்கு ஆதரவளித்த ஒன்றுபட்ட ஸ்டாலினிச இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இன்று மூன்றாக பிளவுற்று இருப்பினும பிரிவினையைதொடர்ந்து ஆதரிப்பதுடன் காஷ்மீர் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை இந்தியராணுவம் ஒடுக்குவதை ஆதரவளிக்கின்றனர். இலங்கையில் ஈழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை இந்திய ராணுவம் நசுக்குவதற்கும் சி.பி.எம், சி. பி. ஐ ஸ்டாலினிசத் தலைமைகள் ஆதரவளித்து வருகின்றன.

ஜம்மு-காஷ்மீரிலிருந்து இந்திய, பாகிஸ்தான் துருப்புகளை வெளியேற்றவும், ஜம்மு-காஷ்மீர் மக்களின்தேசியசுயநிர்ணய உரிமையை பேணவும் இந்தியா, பாகிஸ்தானில் உள்ள தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு போராடவேண்டும என சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவுகிறது. ஜம்மு-காஷ்மீர் மக்களின் விடுதலை இந்திய உபகண்டத்திலுள்ளதொழிலாள வர்க்கமும், ஒடுக்கப்படும் மக்களும் 1947 பிரிவினைக்கு எதிராக இந்திய உபகண்டத்தை

★12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com




# கிழக்கு ஐரோப்பாவும், சி. பி. எம். அரசியல் தலைமைக்குழுவின் அறிக்கையும்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசம் பூத்துக் குலுங்குவதாக 40 வருடங்களாக அங்குள்ள ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சியாளர்களைப்போலவே, இந்தியாவிலும ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகளின் (சி பி எம, சி பி. ஐ) தலைமைகள் கூறி வந்த பொய்கள் அனைத்தையும், தவிடுபொடியாக்கும்படி அங்குள்ள தொழிலாள வர்க்கம பிரமாண்டமாக திரண்டெழுந்தனர். ஸ்டாலினிச ஆட்சியாளர்களை மாறி மாறி ஆட்சியிலிருந்து விரட்டும் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் போராட்டம் அங்கே 40 வருடங்களாக சோசலிச போர்வையில் ஆட்சி புரிந்து வந்த சலுகைகள் நிறைந்த, ஊழல் மலிந்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சோசலிச விரோத பொருளாதார கொள்கைளுக்கு எதிரான போராட்ம ஆகும்.

கிழக்கு ஐரோப்பிய நிகழ்ச்சிகள் ஏகாதிபத்திய வாதிகள் கொக்கரிப்பதைப்போல் சோசலிசத்தின், கம்யூனிசத்தின் வீழ்ச்சியைக் குறிக்கவில்லை. மாறாக சோசலிசம, கம்யூனிசத்தின் விரோதியான ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சியையே குறிக்கிறது. ஸ்டாலினிசத்திற்கு எதிராக 66 வருடங்களாக டிராட்ஸ்கிச இயக்கம் மார்க்சிசத்தை முன்னெடுக்க நடத்தி வந்த அரசியல் தத்துவார்த்த போராட்டங்களை மேலும் நுசுப்படுத்திஉள்ளது

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசப்புரட்சி ஏற்பட்டது சோசலிசம் வளர்ச்சி அடைகிறது என்றபொய்யை டிராட்ஸ்கிசஇயக்கம்தொடக்கத்திலிருந்தே அம்பலப்படுத்தி வந்துள்ளது. இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு ஏகாதிபத்தியங்களுடன் யால்டா, பொட்ஸ்டாம் ஆகிய இடங்களில் ஸ்டாலின் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி மேற்கு ஐரோப்பாவிலும், சர்வதேச ரீதியாகவும்ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை ஸ்டாலின் ஒப்புக்கொண்டதற்கு இணங்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளை மாஸ்கோவின் 'ஆதிக்க பிரதேசங்களாக' ஏகாதிபத்தியம் ஏற்றுக்கொண்டது. பின்னர் ஏகாதிபத்தியத்திற்கும், ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கும் இடையில ஏற்பட்ட கெடுபிடி யுத்தநிலைமைகளின் (Cold war) காலத்திலேயே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தனிச்சொத்துடமை ஒழிக்கப்பட்டு அரசு உடமையாக்கப்பட்ட சொத்துஉறவுகள் ஏற்படுத்தப்பட்டன. இப்படியாக சொத்து உறவுகளில் ஏற்பட்ட மாற்றம் அங்கே தொழிலாள வர்க்கம் புரட்சிகரமான முறையில் எழுச்சியுற்று செய்யப்பட்ட ஒன்றல்ல் மாறாகரஷ்ய செம்படையின், டாங்கிகளின் உதவியுடன் அதிகாரத்துவத்தினல் 'மேலே இருந்து' புகுத்தப்பட்ட ஒன்று ஆகும்.

மேற்கு ஜெர்மனியிலும் இதர மேற்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவம் பாதுகாக்கப்படும் என்று மாஸ்கோ அதிகாரத்துவம் வழங்கிய உத்தரவாதத்தின் ஒரு பிரிக்கமுடியாத பாகமாக கிழக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (DDR) அமைக்கப்பட்டது. இதனால் கிழக்கு ஜெர்மனியிலும் இதர கிழக்கு ஐரோப்பிய [illegible] நாடுகளிலும் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டதானது, சோசிலசத்தை நோக்கிய உண்மையான நடவடிக்கை என்று கூற முடியாது. ரஷ்ய செம்படையின் உதவியுடன், கிழக்குஐரோப்பிய நாடுகளில் உருவாக்கப்பட்ட மாஸ்கோவின் பொம்மை ஆட்சிகளின் பிரதான வேலை, அங்கே சுதந்திர மான தொழிலாள வர்க்க புரட்சிஎழுச்சிஏற்படவிடாது நசுக்குவதாகும் ஏனெனில் சலுகைகள் நிறைந்த ஸடாலினிச அதிகாரத்துவங்களுக்கு ஏகாதிபத்தியத்தின் மீதுள்ள பீதியைக் காட்டிலும் தொழிலாள வர்க்கத்தின் சுதந்திர மான புரட்சி நடவடிக்கை எங்கே தமது அதிகாரத்துவ ஜாதியின் நலன்களுக்கு சாவு மணிஅடித்துவிடப்போகிறது என்று அஞ்சினர்.



கிழக்கு ஜெர்மனியில் தொழிலாளர்கள்
அரசியல் புரட்சி இயக்கத்தில்

1953ல் கிழக்கு ஜெர்மனியிலும் 1956ல் ஹங்கேரியிலும், 1968ல் செக்கோ சிலாவாக்கியாவிலும், 1970, 1980-1981 களில் போலந்திலும் தொழிலாளர்களின் எழுச்சியை ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் குரூரமாக ஒடுக்கியது. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எதிர்புரட்சித்தன்மையை மேலும் அம்பலப்படுத்தியது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டசொத்து உறவு மாற்றத்தின் பின்னர் அந்த அரசுகளை ஊனமுற்று தோன்றிய தொழிலாளர் அரசு(deformed workers state என்று டிராட்ஸ்கிச இயக்கம் அந்த அரசுகளின் வர்க்கத் தன்மையை விபரித்தது. 'ஊனமுற்று தோன்றிய' என்பதில் வலியுறுத்தல் செய்தது. ஏனெனில் இந்நாடுகளில் முதலாளித்துவ சொத்துறவுகள் அழிக்கப்பட்டு உற்பத்தி சாதனங்கள் அரசு உடமையாக்கப்பட்டதானது அக்டோபர் புரட்சியைப் போல் 1917ல் சோவியத்யூனியனில் தொழிலாள வர்க்கத்தின் சோசலிச உணர்வுகளுடன் சுதந்திரமாக தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் படையினல் மார்க்சிச கட்சியின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்டதல்ல. முதலாளித்துவ சொத்துறவுகளை அழித்து உற்பத்தி சாதனங்களை அரசு உடமையாக்கி அதனை பாதுகாக்கின்ற அளவுக்கு அதனை தொழிலாளர் அரசு என்று டிராட்ஸ்கிச இயக்கம் வரையறுத்து செய்தது.

சி.பி எம் அரசியல் தலைமைக்குழுவின் அறிக்கை கூறுவது: 'கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அடிப்படையான சமுதாய மாற்றங்களைக் கொண்டு வந்தன. அந்த சமுதாய மாற்றங்கள் பழைய சுரண்டல் வர்க்கங்களின் ஆட்சிக்கு முடிவுகட்டி சோசலிச முன்னேற்றத்திற்கான அடிப்படையை உருவாக்கின. இருப்பினும் ருமேனியாவில் நடந்த குழப்பமான நிகழ்ச்சிகள் உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில அண்மையில் நடந்து உள்ள நிகழ்ச்சிகள் சோசலிசத்தைக் கட்டுவதிலும், அந்த சோசலிஸ்ட் அரசுகள் செயல்படுவதிலும்பல்வேறுதவறுகள் நடந்திருப்பதைக் காட்டுகின்றன. முதலாளித்துவ ஜனநாயகத்துடன் ஒப்பிடும் போது சோசலிஸ்ட் ஜனநாயகம். ஜனநாயகத்தின் மிக உயர்ந்த வடிவமாகும். இது மேலும் மேலும் பெரும் திரளான மக்கள் பகுதியினரை ஆகர்ஷித்து அவர்களை சமூகம் மற்றும் அரசியல்நடவடிக்கைகளின் அனைத்துக் துறைகளிலும் பங்கெடுக்கச் செய்ய வேண்டும், இதனைச் செய்ய தவறியதும். சோசலிஸ்ட் நெறிமுறைகளை பல ஆண்டுகளாகமீறி வந்ததும் மக்கள் அரசிடமிருந்து அன்னியப் பட்டு செல்வதற்கு இடடுச் சென்றது. உள்கட்சி ஜனநாயகத்தில் லெனினிச முறைகள் மீறப்பட்டன. இதன் விளைவாக அதிகார வர்க்கப் போக்கு வளர்ந்ததுடன் கூடவே தத்துவார்த்த ரீதியில் சிதைவும் ஏற்பட்டது. கட்சி அணிகளுக்குள் ஊழல் மலிந்த சந்தர்ப்பவாதிகள் செல்வாக்குச் செலுத்தி வந்தது. சில நாடுகளில் மக்கள் கட்சியிடமிருந்துஅன்னியப்படுவதற்கு வழிவகுத்தது'' (தீக்கதிர், 16—1—90).

சொத்து உறவுகளில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட்டாலும், அவை மட்டுமே சோசலிசத்திற்கான முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதை சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனாவின் அனுபவங்கள் அப்பட்டமாக நிரூபிக்கின்றன. சீரழிந்த தொழிலாள வர்க்க அரசான சோவியத்யூனியனிலும், ஊனமுற்று தோன்றிய தொழிலாளர் [illegible] அரசுகளாகக் கொண்ட [illegible] கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் உள்ள பெரும் பொருளாதார நெருக்கடியும் அதிகரித்து வரும் வேலையின்மையும், சமூக முரண்பாடுகளும் ஸ்டாலினிஸ்டுகளின் 'சோசலிச' நாடுகளின்நெருக்கடிகளை அம்பலப்படுத்துபவையாக தோற்றம் அளிக்கின்றன. சி பி.எம் தலைவர்கள் பல பத்தாண்டுகள் போற்றிப் புகழ்ந்த ''சோசலிச நாடுகளில்'' சோசலிசத்தைக் கட்டுவதிலும, 'சோசலிஸ்ட் அரசுகள் செயல்படுவதிலும் தவறுகள் நடந்திருப்பதாகவும், அங்கே சோசலிஸ்ட் ஜனநாயகம் இருக்கவில்லை. உள் கட்சி ஜனநாயகத்தில் லெனினிச நெறிமுறைகள் மீறப்பட்டன என்றும் ..... 'கட்சி அணிகளுக்குள் ஊழல் மலிந்த சந்தர்ப்பவாதிகள் செல்வாக்கு செலுத்தினர்' என்றும் பலவற்றை பல பத்தாண்டுகள் மூடி மறைத்து வைத்து இருந்து இப்போது சொல்லும் படி நிர்பபந்திக்கப்படடிருப்பினும் ஒரு அடிப்படை உண்மையை தொடர்ந்தும் மூடி மறைத்து வருவதற்கு காரணம் தமது சொந்த தேசியவாத கண்ணோட்டத்திற்கும, நலன்களுக்கும அவை ஆபத்தை ஏற்படுத்தும் என்பதினலாகும. அதுதான் விஞ்ஞான சோசலிசத்திற்கு எதிரான பிற்போக்கு கற்பனவாத கொள்கையான 'தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டுவது' என்பதாகும், இது சோவியத்யூனியனில் 1924ல் அங்கு வளர்ச்சி அடைந்து வந்த சலுகைகள் நிறைந்த அதிகாரத்துவ தட்டின் பேச்சாளர்களான ஸ்டாலின் புக்காரினல் முன்னெடுக்கப்பட்ட அரசியல் முன்நோக்கு ஆகும். முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து1917ல் அக்டோபரில் உருவாக்கப் பட்டமுதலாவதுதொழிலாள வர்க்க அரசும், சோவியத்மக்களும் மூன்று வருட உள் நாட்டு யுத்தத்தை (1918-1921) எதிர்கொள்ள வேண்டி இருந்தது. சோவியத் யூனியனின் பின்னடைந்த பொருளாதாரமும், ஏகாதிபத்தியத்தால் ராணுவ, பொருளாதார ரீதியாக கொண்டு வரப்பட்டபிரமாண்டமான அழுத்தங்களின் மத்தியிலும் சோவியத்யூனியனில் ஏறபட்ட பொருளாதார நெருக்கடி, பற்றாக்குறையான சூழ்நிலைமை அரசு அதிகாரத்துவம் வளர்ச்சி அடைவதற்கான புறநிலையான நிலைமைகளை தோற்றுவித்தது. சிறப்பு சலுகைகளைக் கொண்டஅரசு அதிகாரத்துவத்தின் அழுத்தமும் 1921ல்அறிமுகப்படுத்தப் பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையினல் பயனடைந்த குலாக்குகள் (செல்வந்த விவசாயிகள்) நெப்மன்கள் (இடைத்தரகர்கள் குட்டி முதலாளிகள்) ஆகியோரின் அழுத்தமும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒரு பிரிவினரின் மூலமாக தொடர்ந்து பிரதிபலித்தது. இப்பிரிவினருக்கு சோசலிசத்தில் (உலகசோசலிசப்புரட்சியின் வளர்ச்சிக்கு ஊடாக வர்க்கம் அற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதில்) அக்கறை இருக்கவில்லை. தமது சலுகைகளை மேலும் எவ்வாறு வளர்ப்பது, காப்பதுபற்றியே இப்பிரிவினர் அக்கறை கொண்டிருந்தனர். இவர்களுக்குபுக்காரின்முன்வைத்த 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' மிக விருப்பமுடையதாக இருந்தது. இந்த அரசியல் [illegible] ணம். அக்டோபர் புரட்சியின் சர்வதேச முன்நோக்குகளை, காட்டிக்கொடுத்ததை மூடி மறைக்க 'மார்க்சிச-லெனினிச லேபிள்களை பயன்படுத்தியது. சோவியத்யூனியனின் எல்லைகளுக்குள் உள்ள வளத்தை பயன்படுத்திக்கொண்டு, பின் தங்கிய ரஷ்ய தொழில் நுட்பத்தின் உதவியோடு 'ஆமை வேகத்தில்' சோவியத்யூனியனில் சோசலிசத்தைக் கட்ட முடியுமென்றுபுக்காரின் வைத்த வாதத்தை, அதிகாரத்துவத்தின் தலைவனான ஸ்டாலின் அழுங்குப்பிடியாக பிடித்துக் கொண்டார். இந்த ''ஆமை வேகசோசலிசக் கட்டுமானமே' இன்றைய சோவியத்யூனியனின், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின், சீனாவின் பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிப்படைக்காரணங்களாகும்.

தனி ஒரு நாட்டில் சோசலிசம் கட்டுவது, அதுவும் பின் தங்கிய தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியைக் கொண்ட ஒரு நாட்டில் கட்டுவது என்ற பிற்போக்குகற்பனவாதகொள்கைக்கு ஸ்டாலின்மேலும்மெருகூட்டினர், அதாவது ஏகாதிபத்திய (ராணுவ) தலையீடு இல்லாதிருப்பின் சோவியத் யூனியனுக்குள் அங்குள்ள பெரும் இயற்கை வளத்தை மட்டும் பயன்படுத்தி சோசலிசத்தை கட்ட முடியும் என்றார். இப்படியான மார்க்சிச திருத்தல்வாதத்திற்குஎதிராகவே டிராட்ஸ்கியும், இடது எதிர்ப்பு அணியினரும் போராடினர்கள். தனி ஒரு நாட்டில் சோசலிசம்கட்டுவதுஎன்ற கொள்கையின் தர்க்க ரீதியான சர்வதேச விளைவுகள் சர்வதேச பாட்டாளி வர்க்கப்புரட்சிக்கு பாதகமாக, அதனை காட்டிக் கொடுப்பதாக இருக்குமென்று டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தார். அவ்வாறே நடந்தது. ஜெர்மனியிலும், (1923), பிரிட்டனிலும் (1926), சீனவிலும் (1927) ஒன்றன்பின் ஒன்றாக வளர்ச்சி கண்ட புரட்சிகரப் போராட்டங்கள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தலைமையின் கீழ் செயல்பட்ட மூன்றும் அகிலத்தினல் காட்டிக்கொடுக்கப்படடன. இவ்வாறாக சர்வதேச ரீதியாக சந்தர்ப்பவாத தொழிற்சங்கவாதிகளுடனும் (பிரிட்டன்) முதலாளித்துவ தேசியவாதிகளுடனும் (சீன-சியாங்கே ஷேக்) ஸ்டாலினிச அதிகாரத்துவம்கூட்டுக்களை ஏற்படுத்தியதை எதிர்த்து 1923லிருந்து டிராட்ஸ்கியும் அவரது தலைமையில் இயங்கிய இடது எதிர்ப்பணியினரும்போராடினர். அதேபோல் உள்நாட்டில் சலுகை மிக்க அதிகாரத்துவ தட்டுக்களின்வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், உற்பத்தியை பெருக்கவும்,தொழித்துறை மயமாக்கல், படிப்படியாககூட்டுப்பண்ணைவிவசாயத்தை உருவாக்கல் போன்ற கொள்கைகளை வைத்து போராடினர்கள். செல்வந்த விவசாயிகளுக்கும், குட்டி முதலாளித்துவ பகுதியினருக்கும் அதிக சலுகைகளை வழங்கிய ஸ்டாலினிச அதிகாரத்துவம் 1923லிருந்து 1928 வரை டிராட்ஸ்கியின் மார்க்சிசஅடிப்படையிலான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை மூர்க்கமாக எதிர்த்து 1927ல் டிராட்ஸ்கியையும், இடது எதிர்ப்பணியினரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியது, மார்க்சிசத்தையும், போல்ஷெவிக் புரட்சிகர பாரம்பரியங்களையும் காட்டிக்கொடுத்த [illegible]

www.padippakam.com

## கிழக்கு ஐரோப்பா...

ஸ்டாலினிச துரோகிகள் உட்கட்சி ஜனநாயகத்தை கொன்றனர். சோவியத்துகளில்பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தை நசுக்கினர். அரசு இயந்திரத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம், ஜி.பி.யு.வின் (ரகசிய போலீஸ்) உதவியுடன் சோவியத்யூனியனிலும் சர்வதேசரீதியாகவும் (ஸ்பெயின்) புரட்சியாளர்களை கொன்று குவித்து, ஏகாதிபத்தியத்துடன்நெருங்கியஉறவை ஏற்படுத்தி தமது அதிகாரத்துவ பிரிவை பலப்படுத்திக் கொண்டது.

இப்படியே இரண்டாம் உலகப்போரின் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவிலும், வியட்நாமிலும், ஆட்சி செய்த ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் ' தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற மாஸ்கோவின் கொடியின் பின்னால், " சர்வ தேசவாதிகளாக " செயற்பட்டனர். ஸ்டாலினிச ஆட்சியுள்ள அனைத்து நாடுகளிலும் பாட்டாளி வர்க்க ஜனநாயகம் நசுக்கப்பட்டது. ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் உலக பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கத்தினதும் மார்க்சிசத்தினதும் விரோதிகளாக இருந்ததால் 'உள்கட்சி ஜனநாயகத்தில்' லெனினிச முறைகள் மீறப்பட்டன.

"கட்சி அணிகளுக்குள் சூழல் மலிந்த சந்தர்ப்பவாதிகள் செல்வாக்குச் செலுத்தி வந்தது, சில நாடுகளில் மக்கள் கட்சியிடமிருந்து அன்னியப்படுவதற்கு வழி வகுத்தது" என்று கூறும் சி.பி.எம்.இன் அரசியல் தலைமைக்குழுவினது அறிக்கை இந்த சூழல்மலிந்த சந்தர்ப்பவாதிகளைத்தான் இதுவரை காலமும் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகள் தான் எனப் போற்றிப்புகழ்ந்தனர். இவர்கள்தான் கிழக்கு ஜெர்மனி, ருமேனியா, பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கியா, பல்கேரியா ஆகிய நாடுகளில் ஆட்சிசெய்த உலகப் பொருளாதாரத்தில் இருந்து தம்மை தனிமைப்படுத்திக்கொண்டு 'ஆமைவேகத்தில்' தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை கட்டுகிறோம் என்று ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் பொய்யான புள்ளி விபரங்களைக் காட்டி அந்த நாடுகளில் சோசலிசத்தை முழுமையாக வெற்றி கண்டு விட்டோம் என்று கூட புளுகத்துணிந்தார்கள்! உலகத் தொழிற் பங்கீடு உலகப் பொருளாதாரத்தின் வளங்களில் இருந்துதனிமைப்பட்ட நிலைமையுடன் கூடவே குறிப்பாக கடந்த 15 வருடங்களாக ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப, மின்னணுவியல் புரட்சிகளின் தாக்கங்களுக்கு ஸ்டாலினிச ஆட்சியுள்ள நாடுகளின் 'ஆமைவேக' பொருளாதாரங்களினால் ஈடுகொடுக்க முடியவில்லை. சோவியத் யூனியன் சீனா, கிழக்கு ஐரோப்பா போன்ற அனைத்து நாடுகளிலும் மிக பிரமாண்டமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ' தனி ஒரு நாட்டில் சோசலிசம்" என்ற பிற்போக்கு சுலோகத்தை தொடக்கத்தில் எழுப்பியவர்கள்இன்று அதன் தர்க்கரீதியான முடிவுக்கு வந்துள்ளனர். அதாவது அனைத்து நாடுகளிலும் முதலாளித்துவம் என்ற முடிவுக்கு வந்துள்ளனர். அந்த நோக்கத்துடனேயே சோவியத் யூனியன் சீனா, கிழக்கு ஐரோப்பா, வியட்நாம் ஆகிய நாடுகளில் உள்ள ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியங்களுடன் பொருளாதார கூட்டுக்களை ஏற்படுத்துகின்றனர். அங்குள்ள அரசுடமையின் பலன்களில் ஒட்டுண்ணிகளாக இருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் இப்போது தம்மையே முதலாளிகளாக மாற்றிக்கொள்ளும் பாதையில் வேக நடை போடுகின்றனர்

சோசலிசத்தின் சாதனை என்னவாக இருக்கவேண்டும் என்

★11ம் பக்கம் பார்க்க

# மகளிர் மேம்பாட்டுக் கழக தொழிலாளர்களுக்கு ஆதரவாக...

★1ம் பக்கத்திலிருந்து

அனைவொழிய தொழிலாள வர்க்கத்தின் குறைகளை, தேவைகளை, அடிப்படைவசதிகளை நிறைவேற்ற இதுவரை துரும்படியாய் முயற்சிஎடுக்கவில்லை.

கழிவறை வசதி செய்து தரக்கேட்டதற்கு "மௌண்ட் ரோடிலுள்ள சித்தாளுகளையெல்லாம் போய் பாருங்க. அவர்களெல்லாம அப்படியா பயன் படுத்துகிறார்கள்?" என்று தலைக்கனம் பிடித்த ஐ.ஏ.எஸ். பெண் அதிகாரி செல்வி ரமேஷ் என்பவர் ஆணவத்தோடு கூறியிருக்கிறார்

### தன்னெழுச்சியான போராட்டங்கள்

2½ வருடமாகியும் பயிற்சிக்காலத்தை நீட்டிப்பதற்குஎதிரோகக்கிளர்ந்து எழுந்தனர் தொழிலாளர்கள். அவர்களை சமாதானம் செய்வதற்காக அப்போது (1986ல்) விழா ஒன்றுக்கு வருகை தரவிருந்த முன்னாள் மத்திய அமைச்சர் மார்கரெட் ஆல்வா விழா மேடையிலேயே உங்கள்பணி நியமனம் பற்றி அறிவிப்பார் என்று கூறினார்கள். விழாவிற்கு வருகை தந்த பெண் அமைச்சர் பெண் தொழிலாளர்களை அணுகி அவர்களைப் பற்றி அறிய அக்கறைகொள்ளவில்லை. அதிகாரிகளும் தொழிலாளர்களை அமைச்சர் அருகே செல்லவிடாமலும் பார்த்துக் கொண்டார்கள். 'அமைச்சரிடம்' இவர்களெல்லாம் அன் எஜுகேட்டட் (படிப்பறிவில்லாதவர்கள்) என்று கூறி விட்டார்கள். அதிகாரிகள் ஏமாற்றியது கண்டு கொதித்தெழுந்த தொழிலாளர்கள் அப்போதைய பொது மேலாளர் நாராயணனை அணுகிக் கேட்டு, உருப்படியாக,எதுவும் சொல்லாமல் மழுப்பியபோது விரக்தியுற்ற தொழிலாளர் ஒருவரில் சிலர் 'அப்ப வாங்கடி' என்று தங்கள்சகதோழர்களை அழைக்கையில், 'அப்ப போங்கடி' என்றார். அந்தத் திமிர்பிடித்த அதிகாரி.

### முதல் வேலைநிறுத்தம்

தாங்கள் தொடர்ந்து இழிவுபடுத்தப்படுவது கண்டும் ஏமாற்றப்படுவது கண்டும் வெகுண்ட தொழிலாளர்கள் அடுத்த நாளே வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். நிர்வாகம் பணிந்து வந்து 150 தொழிலாளர்களுக்கு பணி [illegible] (Worker order)களைக் கொடுத்து, அடிப்படைச் சம்பளம் ரூ. 225 என் [illegible] ஒன்றும் [illegible] ரூ. 150ஐ மாதச் சம்பளமாகக் கொடுக்க முன் வந்தது.

தொடர்ச்சியாகத் தொழிலாளர்கள் போராடியதால் ரூ. 259லிருந்து 285 ஆகவும் 300ஆக பின்னர் உயர்த்தப்பட்டது.

தொழிலாளர்களுக்கு சம்பளம் பற்றி எழுதுவது, உறையில் போடுவது ஆகிய எல்லா வேலைகளையும் இந்தத் தொழிலாளர்களே செய்துவருகிறார்கள். அதற்கென்று எழுத்தர் எவரும் அமர்த்தப்படவேயில்லை. ஸ்வீப்பரும்கூட நிச்சயிக்கப்படவில்லை.

(Exgratia) எக்ஸ் கிராசியா பெற்று வந்த தொழிலாளர்களுக்கு அதுவும் நிறுத்தப்பட்டது: மகளிர் மேம்பாட்டுக் கழகம் லாபம் நடத்தும்நிறுவனம் ஆகிவிட்டபடியால் இனி மேல் போனஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டார்கள். அரசு ஆணையின்படி கிடைக்கவேண்டிய ரூ. 25 இடைக்கால நிவாரண தொகையை. ஏற்கனவே தொழிலாளர்கள் பெற்று வந்த ரூ. 300உடன் சேர்த்து, 325ஆக கன்சாலிடேட் சம்பளமாக (CONSOLIDATED PAY) போட்டுக்கொடுத்தது. ஆனால் தொழிலாளர்கள்அந்த இருபத்தைந்து ரூபாயையும் ஒன்று சம்பளத்துடனோ அல்லது பஞ்சப்படியுடனோ சேர்த்தாலன்றி தாங்கள்வாங்கமாட்டோம் என்று மறுத்து விட்டனர்.

1 கிலோ அரிசி ரூபாய் ஐந்துக்கு விற்கும் வேளையில், பஸ், ரயில் பயணத்திற்கே மாதம் ரூ. 75 செலவழித்து, வந்து வேலை செய்யும் தொழிலாளர்கள் வீட்டு வாடகை தான் கொடுக்க முடியுமா? ஒருவேளைச் சாப்பாடு தான் நிறைவாகசாப்பிடமுடியுமா?

ஏனைய அரசுத்துறைகளில பணியாற்றும் தொழிலாளர்களோடு ஒப்பிடுகையில், 'மகளிர் மேம்பாட்டுக் கழகத் தொழிலாளர்கள் எந்த அளவுக்கு சுரண்டப்படுகிறார்கள் என்பது தெரியும். ஒருஅரசு கடைநிலை ஊழியரின் அடிப்படை சம்பளம் ரூ. 750, மொத்த சமபளம் ரூ.1672-56 ஆனால் மகளிர் மேம்பாட்டுக் கழகத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளமோ ரூ 235 தான் மொத்தச் சம்பளமோ ரூ.300 தான்.

### தொழிற்சங்கம் அமைத்திடும் போராட்டமும்

[illegible] சுரண்டப்படுவதிலிருந்தும் [illegible] வாழ்க்கைத்தரத்தைப் ப[illegible] காக்கவும் தொழிலாளர்கள் 1988ல் தொழிற்சங்கத்தை அமைத்தனர். இச் சங்கம் சி. ஐ. டி யுவின் கீழுள்ள இண்டஸ்டிரியல் எஸ்டேட்ஸ் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியனுடன் இணைக்கப்பெற்றுள்ளது டன், தொழிலாளர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். தொழிற் சங்கத் தலைவர் சென்று பேசும் பொழுதும்கூட அலட்சியப்படுத்தி வருகின்றனர் அதிகாரிகள்.

தங்கள் கோரிக்கைகளான குறைந்தபட்ச ஊதியசட்டத்தை அமல்படுத்தவும், அடிப்படை வசதிகளான குடி தண்ணீர், கழிவறை வசதிகளை, விடுப்புகால அனுமதி ஆகியவற்றை நிறைவேற்றவும் கோரி 1989 ஜுன் மாதம்ஒரு அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். பின்னர் தொடர்ந்து ஊர்வலம், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் எவ்வித பலனும் ஏற்படாததால் 1989 டிசம்பர் 11 முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

### தொழிலாளர் நல (?) ஆணையகமும் தொழிலாளர் போராட்டமும்

பின்னி பீச் என்ஜினியரிங், ஸ்டாண்டர்ட் மோட்டார் போல முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சாதகமாகவே ஆலோசனைகளும்தீர்ப்புகளும் வழங்கி வரும ஆணையகம், தொழிற்சங்கம் போட்ட வழக்கில்—பேச்சு வார்த்தையின்போது 'சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ளவர்களுக்காக பயிற்சி கொடுப்பதற்காக நடத்தப்பட்டது என்றும், லாபநோக்கிற்காக நடத்தப்படவில்லை என்றும் எனவே (வறுமைக் கோட்டுக்கு கீழேயே அழுந்திக்கிடக்க வேண்டும்) ஒன்றும் செய்ய முடியாது. நீங்களே கூட்டுறவு முறையில் நடத்துங்கள், என்று கையை விரித்து விட்டது.

உண்மையில் இங்கு ஆவின், கோஆப்டெக்ஸ், டாய்கோ, சமூகநலத்துறை போன்றவற்றுக்காக அச்சு வேலைகள் மின், [illegible] பொருட்கள் ஆகிய அனைத்தும் ஒப்பந்தத்திற்காக செய்யப்படுகையில், மகளிர் மேம்பாட்டுக் கழகத் தொழிலாளர்களின் உழைப்பு [illegible] கறந்து [illegible] மகளிர் மேம்பாட்டுக்கழகத் தொழிலாளர் [illegible] தொழிலாளர்களுக்கு [illegible] அனுமதியோ வேண்டு[illegible]மாம்.

### முதலாளித்துவ அரசின் கபட நாடகம்

லாபநோக்கிற்கான முதலாளித்துவ உற்பத்தியில் போட்டாபோட்டியில், கூட்டுறவு முறையில் நடத்தமுடியாது என்பது நன்கு தெரிந்தே 'கூட்டுறவு முறையில் நீங்களே நடத்துங்கள்'என்று அமைச்சர் சுப்புலட்சுமியும் தொழிலாளர் நல(?) ஆணையகமும் கூறிவருகின்ற அதே வேளையில் கிண்டியில் உள்ள அச்சகத்தையும், சிவகாசியில் உள்ள அச்சகத்தையும் தனியாருக்கு தாரைவார்ப்பதற்கான சதித்திட்டத்தைமுதலாளித்துவ தி.மு.க. அரசாங்கம் தீட்டி வருகிறது.

### முதலாளித்துவ அரசாங்கமும் ஸ்டாலினிச தொழிற் சங்கமும்

ஸ்டாலினிச சி. ஐ. டி.யு தொழிற்சங்கத்தலைமைகளும் தர்ணாக்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்று கோட்டை முன்பும், தொழிலாளர் நல(?) ஆணையகம் முன்பும் நடத்தி முதலாளித்துவ தி.மு.க. அரசின் மனம் நோகாதவாறு போராடி வருகிறார்கள்:

வாயில் பந்தல் போடக்கூடாது, நான்கு பேருக்கு மேல் கூடக்கூடாது, தொழிற்பேட்டைக்குள்பந்தல்போடக்கூடாது என்றும் தொழிலாளர்கள்ஆலைவாயில்களின்முன் ஊர்வலம், உண்ணாவிரதம் நடத்தத் தடைவிதித்துஅவற்றை, 'எழிலகம்' முன் நடத்தக்கூறிவரும் தொழிலாளர் விரோத தி.மு.க அரசாங்கத்தோடு ஒரு பக்கம் நட்புறவு கொண்டாடி வரும் சி.பி ஐ. (எம்) ஸ்டாலினிசத் தலைமைகள் புதுவை, பழனி, தேர்தல்களிலும் தி.மு.க. ஜனதா தளம் போன்ற முதலாளித்துவக் கட்சிகளையே மீண்டும் அரியணையில் ஏற்றுவதற்கு தலைகீழாக நின்று உழைத்து வருகிறார்கள்.

ஏதோ அரசு அதிகாரிகள் தவறுகள் செய்வதுபோலவும் முதலாளித்துவ அரசாங்கம் ஏதும் அறியாத அரசாங்கம் போலவுமான ஒருபிரமையை ஸ்டாலினிசத் தொழிற்சங்கத் தலைமைகள் தொழிலாளர்களிடையே விதைத்து வருகிறார்கள். தொழிலாளர் நல (?) ஆணையரோ அல்லது காவல்துறை அதிகாரியோ எவராக இருப்பினும் முதலாளித்துவ அரசாங்கத்தின் அரசு எந்திரத்தின் [illegible] என்பதுதான் கண்முன் நிற்கும் உண்மை.

கொத்தடிமைத்தனத்திற்கும் கோரச்சுரண்டலுக்கும் எதிரான போராட்டத்தில் இறங்கியுள்ள தொழிலாளவர்க்கத்தைத் தனிமைப்படுத்தி, ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ், பின்னிபீச் என்ஜினியரிங் மெட்டல் பாக்ஸ், பிஅண்டுசி மில போன்ற நிலைக்கு ஆளாக விடாமல், வேலைநிறுத்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தொழிலாளர்கள் பின்வரும வேலைத்திட்டத்தில் தங்களது போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.

∴ அடிப்படை வசதிகளை நிறைவேற்றவும், அரசு குறைந்தபட்ச ஊதியத் திட்டத்தை நிறைவேற்றவும், அச்சகங்களை தனியாருக்கு தாரைவார்ப்பதைத் தடுக்கவும் போராடிவரும் மகளிர் மேம்பாட்டுக்கழகத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அனைத்துத் தொழிலாளவர்க்கத்தையும் ஒருபொதுவேலை நிறுத்தத்தில் இறக்கிப் போராடுமாறு (CITU) சி. ஐ. டி.யு (AITUC)ஏ.ஐ டி.யு சி. தலைமைகளை நிர்ப்பந்தி !

∴ வேலைநிறுத்தப் போராட்டத்தை மேலும் முன்னெடுக்க தொழிலாளர்களுக்கான பொருளாதார நிதி உதவிகளைத் திரட்டித் தருமாறு சி ஐ.டி யு, ஏ.ஐ டி யு. சி தலைமைகளை நிர்ப்பந்தி!

∴ இந்தியா முழுவதும் கதவடைப்பு செய்யப்பட்டு உள்ள 800க்கும் மேற்பட்ட ஆலைகளைத்திறக்கவும், ஆட்குறைப்பு, ஆலைகள் மூடல் இவற்றை முறியடிக்கவும், குறைந்தபட்ச ஊதியத்தை நடைமுறைப் படுத்தவும், தமிழ்நாடுமகளிர்மேம்பாட்டு கழகத்தையும் அனைத்து ஆலைகளையும் வங்கிகளையும் ஒரு பைசா கூட நஷ்டஈடு கொடுக்காமல், தொழிலாள வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்அரசுடமையாக்க அகில இந்திய அளவில் ஒரு கால வரையற்ற பொது வேலை நிறுத்தத்தில் இறங்குமாறு சி.ஐ.டி.யு., ஏ. ஐ டி. யு.சி. தலைமைகளை நிர்ப்பந்தி !

∴ சி.பி.ஐ.(எம்), சி பி.ஐ. ஸ்டாலினிசத் தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான தமது உறவினைத் துண்டித்துகொண்டு சோசலிச வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் ஒரு தொழிலாளர் விவசாய அரசாங்கம் அமைக்கப்போராடுமாறு நிர்ப்பந்தி !

∴ [illegible] அனைத்துலக [illegible] இணை[illegible] சோசலிசத் [illegible] இருந்து தொழிலாளர் ஆட்சி [illegible] போராட்டத்தை முன்னெடுங்கள்!

www.padippakam.com



# சோசலிசத்தின் எதிர்காலம் : டிராட்ஸ்கிச முன்நோக்கு

அமெரிக்க டிராட்ஸ்கிச வொர்க்கர்ஸ் லீக்கின் தேசிய செயலாளர் டேவிட் நாத் சோவியத் யூனியனில் இரண்டு வார விஜயத்திற்குப் பின் திரும்பி வந்துள்ளார். 1983-ல் நான்காம் அகிலம் அமைக்கப்பட்ட பிறகு, உலகடிராட்ஸ்கிச தலைவர் சோவியத் யூனியனுக்கு முதன்முதலாக விஜயம் செய்தது இதுதான் முதல்தடவையாகும்.

அந்த விஜயகாலத்தில் தோழர் நார்த்துக்சமவர்கள், சோசலிச ஸ்தாபனங்கள், தொழிற்சங்க ஊழியர்கள் முன்னால் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அவரால் எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயங்களில் இடது எதிர்ப்பின் வரலாறு, ஸ்டாலினிசவாத திரிபுவாதத்திற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலக்குழு நடத்திய போராட்டம் நான்காம் அகிலத்திற்குள் GPU—KGB (ரஷ்ய உளவு ஸ்தாபனம்) ஏஜெண்டுகளின் கொலைபாதகப் பங்கு ஆகியவையும் அடங்கும்.

நவம்பர் 13-ல் நார்த் வரலாற்று ஆவணக்காப்பகத்தில் (மாஸ்கோ) உரையாற்றுமாறு அழைக்கப்பட்டார். அந்த உரையின் தலைப்பு: “சோசலிசத்தின் எதிர்காலம் டிராட்ஸ்கிய முன்நோக்கு” என்பது. அதன் மொழி பெயர்ப்பினை இங்கு தருகிறோம்.

தலைவர் தோழர் அவர்களே! தோழர்களே! நண்பர்களே! ஐக்கிய அமெரிக்காவின் வொர்க்கர்ஸ்லீக், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு ஆகியவற்றினின்றும் முதற்கண் எனது அன்புகலந்த வாழ்த்துக்களை உங்கள் எல்லோருக்கும் கொண்டு வருகின்றேன். ‘வொர்க்கர்ஸ் லீக்’ என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கம். அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்டுள்ளது. நாங்கள் அரசியல் ஐக்கியம் தான் கொண்டுள்ளோம். முறையான அங்கத்தினர் அல்ல ஏனென்றால் பிற்போக்கான அமெரிக்கச் சட்டங்கள் டிராட்ஸ்கிஸ்டுகள் சர்வதேசிய ஸ்தாபனத்துடன் ஐக்கியம் கொள்வதை அனுமதிக்கவில்லை. இச்சட்டம் ஐக்கிய அமெரிக்காவில் வூரிஸ் சட்டம் என்று கூறப்படுகின்றது.

இப்படி இருந்தாலும் நாங்கள் நான்காம் அகிலத்தில் உள்ள சக சிந்தனையாளர்களுடன் மிக நெருக்கமாக ஒத்துழைக்கின்றோம். இன்று நான் அவர்கள் சார்பாகவும் பேசுகின்றேன். இந்த ஸ்தாபனத்திற்கும், இந்த சொற்பொழிவை சாத்தியமாக்கியவர்கட்கும் என்னுடைய தோழர்கள் சார்பாகவும் என் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சொற்பொழிவின் தலைப்பு, “சோசலிசத்தின் வருங்காலம், டிராட்ஸ்கிய முன்னோக்கு” என்பதாகும். வருங்காலத்தைப்பற்றி விவாதிப்பதற்கு கடந்த காலத்தைப்பற்றி ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் பேசுவது மிக அவசியம் என்பதை நீங்கள் உணர்வீர்கள். ஏனென்றால் சோசலிச இயக்கத்தை எதிர்நோக்கும் சச்சரவுகளை பற்றி விவரிக்காமல் இன்று ஒருவர் சோசலிசத்தைப்பற்றி எப்படிப் பேசமுடியும்? நாம் சோசலிசத்தின் வருங்காலத்தைப்பற்றி பேசும்போது, நாம நிச்சயமாக அக்டோபர் புரட்சியின் தலைவிதியைப் பற்றிப்பேசுகிறோம். இது ஒரு உலக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் அது ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிலாளவர்க்கத்தின்மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சோவியத் யூனியனின் கடந்த கால வரலாற்றின் பெரும்பகுதி மாயத்திலும் பொய்மையிலும் சூழப்பட்டு உள்ளது. இன்று நான் உங்கள் மத்தியில் உள்ளேன் என்ற உண்மை பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை விளக்குகின்றது. டிராட்ஸ்கிக்கு விரோதமாக கூறிய பழைய பொய்கள் எல்லாம் இப்பொழுது யாராலும் நம்பப்படவில்லை. டிராட்ஸ்கி ஒரு பாசிஸ்டு ஏஜென்ட், லெனினின் விரோதி, அக்டோபர்ப்புரட்சியின் எதிர்ப்பாளர் என்று அவருக்கு விரோதமாகக் கூறப்பட்ட (ஜகஜாலப்புரட்டுகள்) அவதூறுகள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. அவைகள் வெடித்துத் தூள் தூளாகி விட்டன. எந்த நேர்மையான மனிதனும் இப்பொழுது அந்தப்பொய்களை நம்புவதில்லை.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக பழைய பொய்கள் வாபஸ் ஆனபொழுதே புதிய பொய்கள் உருவாகின்றன. அவை பொய் இல்லை என்றால் உண்மையை விகாரப்படுத்துபவையாகவும் அரை உண்மைகளாகவும் உள்ளன. இவையும் ஒரு பயங்கரமான பங்கை ஆற்றுகின்றன. இந்த தப்பெண்ணமை முறைகளின் இனம் என்ன? இந்தப் பொய்மை கூறுகிறது, அக்டோபர் புரட்சியிலடிராட்ஸ்கிமுக்கிய பங்கு ஆற்றினார் என்பது உண்மை. அவர் செஞ்சேனையின் மிகச்சிறந்த தலைவர்களுள் ஒருவர், அவர் மிகச் சிறந்த எழுத்தாளர் மாபெரும் பேச்சாளர் ஆயினும் டிராட்ஸ்கி ஸ்டாலின் இவர்களிடையே எந்த அடிப்படை வேறுபாடும்கிடையாது. அது அவர்களது நிலையானது இப்பொழுது நான் விவரித்த நிலைமைக்கு நெருக்கமானது. ஸ்டாலினிசம் என்பது அக்டோபர் புரட்சியின் இன்றியமையாத விளைவு என்று எடுத்துரைப்பதுதான் அது. மறைமுகமாக இந்நிலைமை ஸ்டாலினிசத்திற்கு வக்காலத்து வாங்கும் வேலையே. அது பிரதிநிதித்துவப் படுத்திய அதிகாரத்துவத்துக்கு வக்காலத்து வாங்கும் வேலையே. அக்டோபர் புரட்சியைநன்கு அறிந்தவர்களும் அக்டோபர் புரட்சியின் பின் விளைவாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினுள் நடைபெற்ற போராட்டங்களை நன்கு உணர்ந்தவர்களும், இடது எதிர்ப்பு நடத்திய போராட்டத்திலும் லெனின் தன் வாழ்நாளின் கடைசி நாட்களில் நடத்திய போராட்டத்திலும் அக்டோபர்பாரம்பரியம் உள்ளடங்கியுள்ளதாகக் காண்கின்றார்கள்



மாஸ்கோ வரலாற்று ஆவணகாப்பகத்தில் தோழர் டேவிட்நாத் உரையாற்றுகிறார்

அதிகாரத்தைக் குறித்த சண்டை. தான் டிராட்ஸ்கி வெற்றி பெற்று இருந்தால் சோவியத்யூனியன் வளர்ச்சியில் வேறுபாடாக இருந்திருக்காது. எப்படியிருந்தாலும் டிராட்ஸ்கி, ஸ்டாலின் இருவரும் மார்க்சிஸ்டுகள் சோசலிஸ்டுகள்தான்.

இந்த நிலையின் சாராம்சம் என்னவென்றால் அது கொலை செய்தவர்களையும் படுகொலைக்கு ஆளானவர்களையும் ஒன்றாக வைத்துப் பார்க்கின்றது இந்நிலையின் தர்க்க ரீதியான விளைவு அக்டோபர் புரட்சியைமறுதளிப்பதுதான் அதாவது அக்டோபர்புரட்சி ஒரு ரத்தக்களரியில் கொண்டுவிட்டது போல்ஷெவிக்குகள் நாட்டை அவலநிலையில் ஆழ்த்திவிட்டனர் போல்ஷெவிசம் என்ற பாரம்பரியத்தில் கூர்வாக மதிப்பிடக்கூடியது எதுவும் இல்லை என்று கூறுவதுதான்.

டிசிப்கோ என்ற இளைய கட்டுரையாளர் ஒருவர் தமது கட்டுரையில் மொழி பெயர்ப்பைப்படிக்க நேர்ந்தது

ஸ்டாலினையும் அவனுக்கு இரையானவர்களையும் ஒன்றிணைக்க முயல்பவர்கள் அதாவது அதிகாரத்துவத்தையும் அதை எதிர்த்தவர்களையும் ஒன்று சேர்க்க முயல்பவர்கள் கீழ்க்கண்ட அடிப்படையான கேள்விக்குப் பதிலளிக்கத் தவறுகின்றனர். ஏன் அந்த அதிகாரத்துவம் லெனினுக்கு மிக நெருக்கமான தோழர்கள் எண்ணற்ற ஆயிரக்கணக்கானோரை கொலை செய்வது அவசியம் என்று கண்டது. (ஒரு கோடிப்பேர் —மொழி...ர்) இத்தகையவர்கள் இடது எழுத்தாளர்களை ஸ்டாலினிஸ்டுகளிடமிருந்து பிரித்து அரசியல் பிரச்சனைகள் என்ன என்பதை ஆய்வு செய்ய முன்வரவில்லை, இந்த விதத்தில் தற்காலதலைமுறை சோசலிஸ்டுகள் அக்டோபர் புரட்சியின் தங்கள் உண்மையான தொடர்பைக் காணமுடியாமல் தடுக்கப்படுகின்றனர். இடது எதிர்ப்புப்போராட்டத்தில் உள்ளடங்கிய பிரதான பிரச்சனைகள்குறித்து சுருக்கமான முறையில் எடுத்துரைக்க விரும்புகின்றேன், இதைச்செய்ய அக்டோபர் புரட்சியின்கண்ணோட்டத்தில் உள்ள மிக மிக முக்கியமான அம்சத்தைக்குறிப்பிட வேண்டும். 1917 அக்டோபரில் அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் ரஷ்யப்புரட்சியை பரிசுத்தமான ரஷ்ய சம்பவமாக கருதவில்லை அக்டோபர் புரட்சியானது உலக சோசலிசப் புரட்சியின் முதல் வெடிப்பு என்றுதான் அவர்கள் கருதினார்கள் சோவியத்ருஷ்யாவில் சோசலிச வளர்ச்சியானது, சர்வதேசிய வர்க்கப்போராட்டத்துடனும் சர்வதேசிய தொழிலாளவர்க்கத்தின் வெற்றியுடனும் கட்டுண்டு உள்ளது என்று கருதினார்கள். மார்க்சை கவனத்துடன் கற்றறிந்தவர்கள் அவர் சோசலிசப்புரட்சி வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் முதலில் துவங்கும் என எதிர்பார்த்தார் என்பதை அறிவார்கள். அவர் கூறிய சூத்திரப்படி முதலில் ஆங்கிலப்புரட்சி அதன்பின் பிரான்சுப் புரட்சி அதன்பின் ஜெர்மன் புரட்சி நடக்கும். ஆனால் வரலாற்று வளர்ச்சியின் தர்க்கவியல் அதிக சிக்கலானது, உண்மையில் டிராட்ஸ்கி, கெலபான்டுபார்வஸ் என்பவர்கள் தான்முதன் முதலில் பின் தங்கிய நாட்டில் தொழிலாள வர்க்கம் ஆட்சிக்கு வரும் என்ற சாத்தியக்கூறு உள்ளது என்று முன்னறிவித்தவர்கள், ஏன் இவ்வாறு ஏற்பட்டது?

1905 ஆண்டுப் புரட்சியின் படிப்பினைகளின் ஆய்வின் அடிப்படையில் டிராட்ஸ்கி தனது நிரந்தரப்புரட்சித் தத்துவத்தில் விளக்கியவாறு, காலம் தாமதித்துமுதலாளித்துவ வளர்ச்சி பெற்ற நாடுகளில் அதாவது ரஷ்யா போன்ற நாடுகளில் ஏகாதிபத்திய உலக வளர்ச்சி என்பதன் அடிப்படையிலும் சர்வதேசிய அளவில் வர்க்கப்போராட்டத்தின் அடிப்படையிலும் ஜனநாயகப் புரட்சியின் கடமைகள் (ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்தின் அனுபவத்தின் அடிப்படையில் அவை வரையறுக்கப்பட்டுள்ளன அவை நிலப்பிரபுத்துவ உறவுமுறைகளை ஒழித்துக் கட்டுதல் தேசிய ஐக்கியப்படுதல் எனபவை) புரட்சிகரமான தொழிலாள வர்க்கத்தினுடைய நிறைவேற்றப்பட வேண்டியிருக்கும். உண்மையில் இந்தப் புரட்சிகரமான கடமைகளை நிறைவேற்றும் போக்கும்சோசலிச முறையில் பொருளாதார வளர்ச்சிக் கடமைகளையும் மேற்கொள்ளவேண்டிவற்புறுத்தப்படும், இப்படிஇருந்தாலும் வளர்ச்சி குன்றிய பொருளாதார அடிப்படையில்தான் சோசலிச வளர்ச்சி ஏற்படமுடியும் என்ற உண்மையை எதிர்நோக்கவேண்டியுள்ளது. ஆகையால் ரஷ்யாவில் உள்ள புரட்சிசர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவை நாட வேண்டி இருக்கும்,

1917க்கு முன் லெனின் டிராட்ஸ்கி ஆகியவர்களிடையே பலவிதப் பிரச்சினைகள் ஏற்பட்டபோதிலும் லெனினுடைய “ஏப்ரல் ஆய்வுரைகளின்” கண்ணோட்டம் இந்த நிரந்தரப்புரட்சிதான் இதன் அடிப்படையில்தான் அக்டோபரில் போல்ஷெவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்தப்புரட்சியை சர்வதேச சோசலிசப்புரட்சியின் ஆரம்பம் என்று கண்டார்கள். இந்த சர்வதேசிய புரட்சிக்கு அவர்கள் எல்லாவிதமான ஆதரவும் ஊக்கமும்கொடுக்க வேண்டும் என்று உணர்ந்தார்கள். இதை நான் உங்களுக்கு எல்லாரும் அறிந்திருக்கும் ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கிக்காட்ட விரும்புகிறேன், அதுதான் பிரெஸ்ட்-லிடாவ்ஸ்கின் புகழ் வாய்ந்த கருத்து வேறுபாடு. லெனினுக்கும் டிராட்ஸ்கிக்கும் இடையே நிச்சயமாக கருத்து வேறுபாடு இருந்தது பிரெஸ்ட்-லிடாவ்ஸ்க்பிரச்சினையில் அவர்களிடையே நிலவிய ஒரு குறிப்பிட்ட கருத்தொற்றுமையைப்புரிந்துகொள்ளுவது மிக அவசியம்.

ஆனால் கொள்கை அடிப்படையில் ஒற்றுமை நிலவியது ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யவும் ஜெர்மன் தொழிலாள வர்க்கத்துக்கு வேண்டுகோள் விடுக்கவும் ‘பிரெஸ்ட்-லிடாவஸ்டோக்’ பேச்சு வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும் என்று டிராட்ஸ்கி கூறினார். சோவியத்துக்கள் ஜெர்மன் ராணுவத்திடமிருந்து உடனடியான யுத்த அபாயத்தில் இருந்ததால், லெனின் இந்த செயல் தந்திரத்தின் சாத்தியக்கூறுகள் பற்றி சந்தேகமாக இருந்தார். டிராட்ஸ்கியினால் ஆலோசனை கூறப்பட்ட இந்த செயல் தந்திரத்தின் அடிப்படைக்கொள்கையை எதிர்க்கவில்லை. அதாவது ஜெர்மன் புரட்சியை ஊக்குவிக்க சாத்தியமானதை எல்லாம் செய்யவேண்டும் என்பதுதான் அந்த செயல்தந்திரம். ஜெர்மன புரட்சியின் நலன்களுக்காக ரஷ்யப்புரட்சியை தியாகம்செய்யததயார் என்று கூறியது உண்மையில் லெனினின்தான்.

1918 அக்டோபர் நவம்பரில் ஜெர்மனியில் ஒரு புரட்சி வெடித்தெழுந்தது. இந்தப் புரட்சியானது சமூக ஜனநாயகத்தினால் காட்டிக் கொடுக்கப்பட்டது. 1917 ஆம் ஆண்டு பாடத்தைக் கற்றுக்கொண்டபின் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கம் ஸ்பார்டாகஸ் எழுச்சித்தலைவர்களாகிய ரோசாலக்சம்பர்க் கார்ல்லீப்னெக்ட் ஆகியவர்களைக் கொன்றது, அவர்கள் தொழிலாளர் புரட்சியை எதிர்நோக்கும்போது சமூக ஜனநாயகத்தலைவர்களுக்கு ஜனநாயக சமாதானப்பண்புகள் உண்டா எனபது பற்றி இங்குள்ள எவருக்காவது ஐயப்பாடுகள் இருக்குமாயின் அவர்கள் ஸ்பார்டாகஸ் எழுச்சியின் வரலாற்றைப்படிப்பது மிக நன்று.

ஜெர்மன்புரட்சியின்தோல்வியானது சோவியத்ருஷ்யாவின் மீது தனித்துஒதுங்கியிருக்கும் தன்மையை ஏற்படுத்தியது, அதனுடன்கூட உள்நாட்டுப் போரின் நாச விளைவுகள் ஏற்பட்டன, அமெரிக்கா உட்பட

★மேம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிசத்தின் எதிர்காலம்

பிரதான ஏகாதிபத்திய நாடுகள் தலையிட்டதை எதிர்த்து இறுதியில் போல்ஷேவிக் வெற்றி பெற்ருலும் கூட பொருளாதாரநிலை பயங்கரமாக இருந்தது, இதுபோல் ஷேவிக் கட்சியை சிறிதுகாலம் 'போர்க்கம்யூனிசம்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்த பிறகு (NEP) புதிய பொருளாதாரக்கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தியது. இந்த NEP அவசியமான பின்வாங்குதலாகக் கருதப்பட்டது. சர்வதேசத் தொழிலாளி வர்க்கம் வளர்ச்சியடையும்பொழுது, சோசலிச நிர்மாணப்பணியில் நேரடியாக முன்னேறமுடியும் என்று கருதப்பட்டது, புதிய பொருளாதாரக்கொள்கையானது கட்சி கொள்கையின் நிரந்தர அம்சமாகக் கருதப்படவில்லை

இப்பொழுது அக்டோபர் புரட்சிக்கு பின் தோன்றிய அரசின் குணத்தைப் பரிசீலிப்பது முக்கியமாகும். போல்ஷேவிக் ஆட்சியை இறுதியில அழித்துவிட்ட அதிகாரத்துவத்தின் ஆரம்பத்தையும் காணவேண்டியது முக்கியமாகும். அக்டோபரிலிருந்து உருவாகிய அரசு இரட்டைக் குணம்படைத்தாக இருந்தது 1917புரட்சியின்பலனுகஸ்தாபிக்கப்பட்ட சொத்து உறவு முறைகளை அது பாதுகாத்ததால் அது அந்த அளவிற்குச் சோசலிசத்தன்மைவாய்ந்தது. அந்த அரசை சோசலிஸ்டு என்று கூறுவது பிரச்சனையை மிக்க எளிமைப்படுத்துவதாகும். அந்த அரசு முரண்பாடானதன்மையைக் கொண்டு இருந்தது. பகிர்வு அல்லது விநியோகத்தில் அது வேறுமையைப் பாதுகாத்ததால் அது அந்த அளவிற்கு முதலாளித்துவத்தன்மை வாய்ந்ததாக இருந்தது. வேறு விதமாகக் கூறினால் சமுதாய உற்பத்தி முறை நிலவியது, ஆனால் முதலாளித்துவ பகிர்வு முறைகள்தான் நீடித்தன. முதலாளித்துவ அளவுமுறையான மதிப்பு என்பதன்படி 'விநியோகம்' நடை பெற்றபடியால், இதனால் சமத்துவமின்மை நிலவியபடியால் இது முதலாளித்துவதன்மை பெற்றதாகும். பயங்கரமான பற்றுக்குறையினால் பாதிக்கப்படும் ஒரு நாட்டில் இது தவிர்க்க முடியாததாகும்.

அதிகாரத்துவத்தின் தோற்றம் பற்றிய புரிதலில் இங்கே ஒரு தீர்க்கமான ஒன்றுக்கு வருவோம்: எங்கேதேவைகள்பொதுவானதாகவும் பற்ருக குறையும் உள்ளதோ, அங்கு பற்ருக்குறை பொருட்களை விநியோகிப்பதற்கு ஒரு தனி சாதனத்தை உருவாக்கவேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. வேறு வகையில் சொல்வதென்றால் அதிகாரத்துவம் இந்த வகையில் இன்றியமையாத ''சமூகக் காவலாளி''யாக 'சமத்துவமின்மையின்போலீஸ்காரனுக' தோன்றுகிறது. அதுதான் யார் என்ன பெறுவது என்பதைத் தீர்மானிக்கிறது. ஆனால் நீங்கள் அறிந்தவாறே, ரேஷனில் பங்கீட்டுக் கொடுப்பதற்கு யார் பொறுப்பானவர்களாக இருக்கிருர்களோ அவர்கள் தங்கள்சொந்தப்பங்கை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். நாளின் இறுதியில் மற்றவர்களுக்கு கிடைப்பதைக்காட்டிலும் தங்களுக்கு அதிகம் கிடைப்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்வார்கள்.

பற்ருக்குறையினால்பாதிக்கப்பட்ட சோவியத்சமுதாயத்தின் பயங்கரமான பின்தங்கிய நிலையை ஒருவர்கருதினால்—ஆடம்பரப்பொருட்களின் பற்ருக்குறையமட்டுமல்ல அத்தியாவசியப்பொருட்களின் பற்ருக்குறையையும் சேர்த்து—அதிகாரத்துவம் வளர்வதற்கான பொருளாயத அடிப்படையைப் புரிந்து கொள்ளமுடியும். ஜெர்மன் தத்துவஞானம் என்னும் நூலில் மார்க்ஸ் கூறியபடியும் டிராட்ஸ்கி அதை மேற்கோள காட்டியபடியும் பொதுமைப் படுத்தப்பட்ட தேவை என்ற ஒன்று இருக்கும் பொழுது பழைய சாட்டை அல்லது கசை (அடக்கும் கருவி) தோன்றும். அதிகாரத்துவத்தின் சமுதாய இன்றியமையாமையை ஒத்துக்கொள்ளுவது ஒரு விஷயம். ஆனல் இந்த அதிகாரத்துவம் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்த வேண்டியது அவசியம் என்று கூறுவது மற்ெருரு விஷயம். இதில் உள்ளடங்கி இருப்பது வேறு ஒரு பிரச்சனை. அதுதான்கட்சிக்கும அதிகாரத்துவத்துக்கும் இடையில் உள்ள உறவுமுறைகள் அதிகாரத்துவம்கட்சியையும தொழிலாள வர்க்கத்தையும் ஆளுவதா? அல்லது கட்சியும் தொழிலாள வர்க்கமும் அதிகாரத்துவத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதா? யார்யாரை அடக்கி ஆளுவது? இதுதான் பிரச்சனை.

அதிகரித்த அளவிற்குப் புறவயநிலைமைகள் தொழிலாள வர்க்கத்திற்குப் பாதகமாகவே இருந்தது அதிகாரத்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட அபாயம் அதிகரித்த அளவிற்கு புறவய நிலைமைகள் தொழிலாள வர்க்கத்திற்குப் பாதகமாகவே இருந்தன. அதிகாரத்துவத்தினால தோற்றுவிக்கப்பட்ட '' அபாயத்தை உணர்ந்த போல்ஷேவிக் கட்சியின் மிக்க உணர்வு கொண்டபகுதியினருக்கும்இது மிக்க பாதகமாகவே இருந்தது 1921 1922 1923ல் வாழ்ந்த தொழிலாள வர்க்கம் 1917ல் இருந்த தொழிலாள வர்க்கத்திடமிருந்து வேறுபட்டது. உள்நாட்டு யுத்தத்தில் தொழிலாள வர்க்கம் சிதைக்கப்பட்டு விட்டது பெரும்பாலான வர்க்க பிரிவினர் இறந்து போயினர். தொழில் நாசகார முறையில் இருந்து தொழிற்சாலைகளுக்குள் சேர்க்கப்பட்ட தொழிலாளர்களில் பலர் அரசியல் அனுபவம் இல்லாதவர்களாக இருந்தனர். பசியினால் வருந்திய நிலையில் இருந்தனர். ஆகவே விரக்தியடைந்த நிலையில் இருந்தனர் மேலும் தீவிரப்பங்காற்றிய பல போலஷேவிக் தொழிலாளர்கள் பலர் வளர்ந்துகொண்டிருந்தஅதிகாரத்துவத்துக்குள் இழுக்கப்பட்டனர். 1917ன் புரட்சிகரத் தொழிலாளர்கள் அரசு அதிகாரிகளாக மாறினர்கள். இதற்கும் மேலாக புதியபொருளாதாரக் கொள்கை அமல் நடத்தப்பட்ட காலத்தில் அரசு அமைப்பில், அதிகாரத்துவத்தில், பழையசாரிச அதிகாரிகள், சிறு முதலாளித்துவத்திற்காகவேலை செய்வோர், வலதுசாரி மென்ஷேவிககுகள் நுழைந்து விட்டனர். 1922ல் லெனின் இந்த நிகழ்ச்சிப்போக்கை, அதிகப்படியாக உணர்ந்து கொண்டார். 1923ல் டிராட்ஸ்கிதனது ''புதிய போக்கு'' என்ற புகழ் வாய்ந்த கட்டுரையில் கட்சி, அரசு இரண்டிலும் வளர்ந்த அதிகாரத்துவத்தின் அபாயத்தைப்பற்றி எடுத்துரைத்தார். ஸ்டாலினின் அதிகார வளர்ச்சியின் ஜடரீதியான அத்திவாரம் இந்த அதிகாரத்துவம் தான்.

**அதிகாரத்துவத்தின் வளர்ச்சிக்கும், சர்வதேசிய நிலைமைகளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பிடவேண்டியது அவசியம் 1923 பின்வசந்தகாலம், கோடை. இவ்யுதிர்காலத்தில் ஒரு புரட்சிகரநிலைமை ஜெர்மனியில் தோன்றியது. இது சோவியத் தொழிலாளவர்க்கத்திடையே மிகப்பிரம்மாண்டமான உற்சாகத்தை ஏற்படுத்தியது கடைசியில் ஜெர்மன் தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்திற்கு வரும் என்று நம்பினர், ஆயினும் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியில் சீர்குலைவும் குழப்பமும் ஏற்பட்டது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஆழமாகப் போய் கொண்டிருந்த நெருக்கடி இதற்கு ஓரளவிற்குக் காரணமாகும். இது 1923ல் ஜெர்மன் புரட்சியின் தோல்வியில் முடிந்தது. இந்தத் தோல்வி சோவியத் தொழிலாள வர்க்கம் மீதும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வருங்கால வளர்ச்சியின் மீதும் ஆழமான பாதிப்பைஏற்படுத்தியது



லெனினும், டிராட்ஸ்கியும் தொழிலாளர், செம்படையினர் மத்தியில்

இது ஸ்டாலின். புகாரின் இவர்களால் முற்றிலும் புதிய தத்துவம் ஒன்றை வெளியிட்டதில் தெரிந்தது. அதுதான் தனி ஒரு ''நாட்டில்சோசலிசம் எனும் தத்துவம்'' அக்டோபர் 1924ல் இத்தத்துவத்தை முன்வைத்ததானது, சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சியின் சரித்திரத்திலும் சர்வதேசியகம்யூனிஸ்டு இயக்கத்திலும் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது மார்க்சிசம், போல்ஷெவிசம் இதுவரை எந்தகோட்பாடுகளுக்காக நின்றதோ அவற்றை அடிப்படையிலேயே மாற்றி அமைப்பதாகும் இது. சோவியத் சமுதாயத்தில் பின்தங்கிய பொருளாயத நிலை இருப்பினும், முதல் முறையாக ரஷ்யாவிற்குள்ளேயே சோசலிசத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று வாதிடப்பட்டது. இதுவரை ஒவ்வொரு மார்க்சிஸ்டும் கற்றுக்கொண்ட அடிப்படைப்பாடம் தொழிற்சாலை முறையும் விவசாயமும் மிக உன்னதமான முறையில் வளர்ச்சி அடைந்தால்தான் சோசலிச சமுதாயத்தை வளர்த்து அமைத்திடமுடியும் என்பதாகும். ரஷ்யாவின் இயற்கை வளங்களின் அடிப்படையிலேயே சோசலிசத்தை வளர்த்திடமுடியும்என்றுஸ்டாலினும் புகாரினும் வாதாடினர்கள். இந்தத் தத்துவம் அதிகாரத்துவத்திற்கு கவர்ச்சிகரமாகஇருந்தது. அதனுடைய

பொருளாதாயச் சலுகைகளைப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தஅதிகாரத்துவத்துக்கு இந்த தேசியக் கண்ணோட்டம் மிக மிகப் பொருத்தமாகவே இருந்தது. டிராட்ஸ்கி கூறியதுபோல அதிகாரத்துவத்தின் கண்ணோட்டம், 'உலகப்புரட்சிக்கு எல்லாம் போய்விடக்கூடாது. எனக்கு என்னபங்கு''! என்பது தான் இதனால்தான் '' தனி ஒரு நாட்டில் சோசலிசம்எனும் தத்துவம் அதிகாரத்துவத்தின் இதய வீணைநரம்புகளைத் தட்டி இதமாக்கியது.

இந்த நிலையின் தீர்க்கமான சர்வதேசிய உள்ளடக்கங்கள் ஸ்டாலினால் வெளியிடப்பட்டது. வெளியிலிருந்து ஏகாதிபத்தியத் தலையீடு இல்லாத வரை சோவியத்யூனியனில் சோசலிசத்தை அமைத்துவிட முடியும் என்று ஸ்டாலின் கூறினார். இந்த நிலைமையின் அர்த்தம் என்னவென்ருல் கம்யூனிஸ்ட் அகிலம் சோவியத் அயல்துறைக் கொள்கையின் கைப்பாவையாக மாறிவிடும் என்று டிராட்ஸ்கி எச்சரிக்கை விடுத்தார். அதாவது சர்வதேசிய புரட்சிக்கட்சிகளை வளர்ப்பது என்ற நிலைமையிலிருந்து கம்யூனிஸ்டு அகிலம் சோவியத் ஆட்சியின் உடனடியான ராஜ தந்திரத் தேவைகளைப்பூர்த்தி செய்யும் கருவியாக மாறிவிடும் என்பதுதான் அந்த எச்சரிக்கை.

இந்நிலைமை உடனடியாக சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் தோல்விக்கு இட்டுச் சென்றது. நான் உங்களுக்கு இரண்டு முக்கிய உதாரணங்களைக்கூற விரும்புகிறேன். 1926ல் பிரிட்டிஷ் தொழிலாள வர்க்கத்தின் போர்க்குணஇயக்கம் தோன்றியது. இது பிரிட்டிஷ் பொது வேலைநிறுத்தத்துக்கு கொண்டு சென்றது. பிரிட்டிஷ் தொழிலாள இயக்கத்தில் இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம். ஆயினும் ஸ்டாலின் ஆங்கிலோ-ருஷ்யன் கமிட்டியைப் போற்றி வளர்த்தார் ஏனெனில் பிரிட்டிஷ் தொழிலாளர் அதிகாரத்துவத்தின் தலைமையில் சில ''நண்பர்கள்'' கிடைத்துள்ளனர் என்று அவர் கூறினர். வெளிப்படையாகக் கூருவிட்டாலும் ஸ்டாலின் எண்ணம் என்னவென்ருல் இந்த செல்வாக்கு மிகுந்த அதிகாரத்துவத்தினர்ஏகாதிபத்திய இங்கிலாந்திற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே அபிவிருத்தி அடைந்த நட்புறவை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பர் என்பதுதான். இந்த செல்வாக்கு மிகுந்த அதிகாரத்துவத்தினரை ஆதரித்து வளர்க்கவேண்டும் என்றுஸ்டாலின் மயமாக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலம் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக்கட்சிக்கு உத்தரவிட்டது. இந்தக் கொள்கையின் விளைவுஎன்ன? மே1926ல் பிரிட்டிஷ் பொதுவேலை நிறுத்தம் ஏற்பட்டபொழுது பிரிட்டிஸ்கம்யூனிஸ்டுக்கட்சிஇந்தத் துரோகத்தன்மைவாய்ந்ததலைவர்களை ஆதரித்தனர். அதாவது 1917ல் மென்ஷேவிக்குகள் குறித்து போல்ஷேவிக்குகள் என்ன கொள்கையைக் கையாண்டார்களோ அதற்கு எதிர் மாருன கொள்கையைக் கையாண்டார்கள். வலது சாரித்தலைவர்கள் பொதுவேலை நிறுத்தத்தைவாபஸ்பெற்றனர் அது தோற்கடிக்கப்பட்டது இவ்விதமாக பிரிட்டிஷ், ஐரோப்பிய தொழிலாளர்இயக்கத்திற்கு அது ஒரு நாசகாரமான அடியைக் கொடுத்தது.

அதே சமயம் சீனவில் மிகப் பெரிய புரட்சிகர இயக்கம் தோன்றியது. கோமிண்டாங் தலைவர் சியாங்கேஷேக்குடன் ஸ்டாலின்உறவுகளைவளர்த்துக் கொண்டார் கோமிண்டாங் கட்சி என்பது முதலாளித்துவ தேசிய இயக்கம் ஆகும். இவ்விதம் முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு அடிபணிவதை இடதுஎதிர்ப்புஅணி எதிர்த்தது இந்தக்கொள்கை தொழிலாள வர்க்கத்தை நாசகாரமான அழிவிற்கு இட்டுச்செல்லும் என்று எச்சரித்தது ஏனெனில் சியாங்கேஷேக் சீனத்தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக திருப்புவது நிச்சயம் என்றும் கூறியது இவ்விதம் தான் நடந்தது. சியாங்கேஷேக் தொழிலாள வர்க்கத்தின் மீது தாக்குதலை ஆரம்பித்தான். கம்யூனிஸ்டுகளைப் படுகொலை செய்தான், சீனப்புரட்சிக்கு பல வருடங்கள் பின்னடைவு ஏற்பட்டது. (உதாரணம் : ஸ்டாலின கோமின்டாங் முதலாளித்துவ அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கு பணியும்படியும், சோவியத்துகள் அமைக்கக் கூடாதென்றும், கட்டளையிட்டார். ஏனெனில் சியாங்கேஷேக்கின் 'புரட்சிகரதிறனும்' ஏற்கனவே அங்கு

படிப்பகம்

www.padippakam.com



# : டிராட்ஸ்கிச முன்நோக்கு

உள்ளது என்றூர். 1927ல் ஷங்காய் நகரில் சியாங்கே ஷேக் துருப்புகள், சீனக் கம்யூனிஸ்டுகளை தொழிலாளர்களை பல்லாயிரக்கணக்கில் ஈவு இரக்கம் இல்லாமல் கொன்று குவித்தன. உலகத் தொழிலாளர் இயக்கத்தில் நடைபெற்ற இந்தக் கோரசம்பவம் ஸ்டாலினது மார்க்சிச விரோதத் தன்மையையும் சோசலிசப்புரட்சிக்கு விரோதமான காட்டிக்கொடுத்த தன்மையையும் அம்பலப்படுத்தியது. விஷயம் இதுதான் தொழிலாளவர்க்கத்தின் சர்வதேசியத்தோல்விகள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை பலப்படுத்தியது. இந்தப் போக்கு ஜெர்மன் தொழிலாள வர்க்கம் ஹிட்லரிடம் தோல்வி அடைந்ததில் முடிந்தது. இந்தத்தோல்விதான் இரண்டாம் உலகப்போருக்கு அடித்தளமிட்டது. இந்தத் தோல்விக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட்கட்சியும் ஸ்டாலினிச அகிலமும் தான் காரணம். (ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் அகிலத்தின் 6வது மாநாடு 1928 மாஸ்கோவில் கூடியது, 3வது காலப்பிரிவு எனக் கூறப்பட்டு அதிதீவிர இடதுசாரிவாதம் கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சி சமூக பாசிசம் என வர்ணிக்கப்பட்டு முதல் எதிரி எனக் கூறப்பட்டது. இவ்விதம் ஸ்டாலினிச துரோகத்திற்கு ஜெர்மன் தொழிலாள வர்க்கம் பிளவுபட்டது. முதலாளித்துவத்திற்கு எதிராகவும் நாஜிசத்திற்கு எதிராகவும் கூட்டுப் போராட்டம்நடத்தப்படலெனினால் வகுக்கப்பட்ட புரட்சிகரமான இடது சாரிஐக்கிய முன்னணி என்ற தந்திரம்கைவிடப்பட்டது, இவ்விதம் ஸ்டாலினிச அதிதீவிர இடதுசாரி துரோகத்தனமையினால் ஜெர்மன்தொழிலாள வர்க்கம்பிளவுபட்டு இருக்க, ஹிட்லர் சுலபமாக ஓட்டுப்பெட்டிமூலம் ஆட்சியை கைப்பற்றினான். (மொழிபெயர்ப்பாளரின் சேர்க்கை).

1930-33க்கு இடையில்ஜெர்மனியில் பாசிச அபாயம் குறித்து டிராட்ஸ்கி எழுதிய நூல்களை நீங்கள் சீக்கிரம்படிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். லியான் டிராட்ஸ்கியினால் முன் வைக்கப்பட்ட கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டு இருக்குமேயானால் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டு இருப்பான். ஆனால் அந்த சமயம் டிராட்ஸ்கி இஸ்தான்புல் கடற்கரைக்கு அருகில் பிரின்கிபோவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் வசித்துவந்தார்.

ஹிட்லரால் ஜெர்மன்தொழிலாள வர்க்கம் தோற்கடிக்கப்பட்டதன் பின் விளைவாக சோவியத் அயல்நாட்டுக் கொள்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. 1933க்குப்பின்சோவியத் அதிகாரத்துவம் நனவு பூர்வமாக சர்வதேசியப் புரட்சிக்கு எதிரானகொள்கையைக் கடைப்பிடித்தது. அதுவெளிப்படையாகவே ஏகாதிபதியத்துடன் சர்வதேசியஒத்துழைப்பு என்ற கொள்கையைக் கடைப்பிடித்தது. 1933க்கு முன்னால் சர்வதேசத் தொழிலாள வர்க்கத்தின் தோல்விகள் ஸ்டாலினிசக்கொள்கையின் பிழைகள், தப்பிதங்களால் ஏற்பட்டவை எனக் கூறலாம், 1933க்குப் பின்னால் சர்வதேசப்பாட்டாளி வர்க்க சோசலிசப்புரட்சியைக் காட்டிக் கொடுப்பது என்பது அதன் நனவு பூர்வமானகொள்கையாகி விட்டது, மிகப் பயங்கரமான உதாரணம் ஸ்பானியப்புரட்சி. அதில் GPU வின் ஸ்டாலினிச ஏஜன்டுகள் பூர்ஷ்வா பொது மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் ஒத்துழைத்துக் கூட்டுறவு கொள்வது என்ற ஸ்டாலினிச கொள்கையை எதிர்த்து, தொழிலாள வர்க்க புரட்சிகரமான கொள்கையைக் கடைப்பிடித்தவர்களைக் கொன்று குவித்தது. ஸ்டாலின் ஸ்பெயினில் சோசலிசப்புரட்சியை எதிர்த்தார். ஏனெனில் அத்தகைய புரட்சியானது பிரான்ஸ், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுடன் அரசியல் கூட்டுறவு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற அவருடைய முயற்சிகளுக்குகுந்தகமாக அமையும் மேற்கு நாடுகளில் இது நன்குகத் தெரியும் மாஸ்கோ சதி வழக்கு, சினோவீவ், காமனேவ் போன்றவர்களை கொலை செய்தது எதற்காக? சோவியத்யூனியன் புரட்சிகரமான கடந்தகாலத்துடன் முற்றிலும் முறித்துக்கொண்டு விட்டது என்பதை சர்வதேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்கு உறுதிமொழி கொடுத்தார் ஸ்டாலின். மாஸ்கோ விசாரணைகள் மேற்கு நாடுகள் பத்திரிக்கைகளில் சாதகமாகவே வரவேற்கப்பட்டன என்பதை நீங்கள்தெரிந்துகொள்ள வேண்டும்

இந்த சரித்திர புனராய்வை முடிவுக்குக் கொண்டு வர சோவியத் ஸ்டாலினிச ஆட்சியின் தன்மைப்பற்றி டிராட்ஸ்கியின் ஆய்வுரையை நான் விளக்க விரும்புகிறேன். டிராட்ஸ்கிசோவியத்அதிகாரத்துவத்தை ஏகாதிபத்தியத்தின் எதிர்பபுரட்சித்தன்மைவாய்ந்த ஏஜண்ட் என்று கூறினார். அதே சமயம் அது ஒரு ஆளும் வர்க்கம் இல்லை என்பதை வற்புறுத்தினார். அது ஒரு 'ஜாதி' போன்றது. மார்க்சியக் கருத்தில் வர்க்கம் என்பது ஒரு சமூகப்பிரிவு அமைப்பு, ஒரு வர்க்கம் என்பது சொத்துரிமையின் பால் சரித்திரரீதியான அவசிய உறவு உண்டு. வர்க்கம் என்பது குறிப்பிட்ட சொத்து வடிவங்களுடன் ஒரு குறிப்பிட்ட நிச்சயமான உறவுமுறை உண்டு, நாகரீகம் அப்படிப்பட்ட வர்க்கங்களை அறிந்து இருக்கின்றது. அவை தாம் அடிமைச் சொந்தக்காரர்கள், படைமானியப்பிரபுக்கள்நவீன பூர்ஷ்வாக்கள் ஆவார்கள். இப்படி இருக்க சோவியத் அதிகாரத்துவம் இந்தக்குறிப்பிட்ட பொருளில் ஒரு புதிய வர்க்கத்தைப பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. சரித்திரத்தில் வர்க்க பேத அமைப்புகள் கொண்ட சமுதாய அமைப்புகளில் அதிகாரதுவங்கள் இருந்தது உண்டு. சோவியத் ரஷ்யாவில் அதிகாரத்துவம் தீய விஷத்தன்மை வாய்ந்த அமைப்பாகும். அது ஒரு குறிப்பிட்ட நிலைமைகளில் வளர்ந்தது. அதாவது உலகப்புரட்சியின் காலதாமதத்தினால்அதுதொழிலாளி வர்க்கத்தினரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றியது. சோவியத் அரசின் வர்க்கத்தன்மையை வரையறை செய்யும்பொழுது தொழிலாளர் சர்வாதிகாரத்தன்மை நிலவியது என்று உறுதியான நிலையை கொண்டார், ஆனால் அந்த தொழிலாளர் சர்வாதிகாரம் பெரும் அளவிற்குசீரழிந்துவிட்டது என்றும் தொடர்ந்து வலியுறுத்தினார். 1917ல் ஸ்தாபிக்கப்பட்டசொத்துறவு முறைகள் தூக்கிஎறியப்படவில்லை அரசுடமையாக்கப்பட்ட சொத்துறவு முறைகள் தூக்கி எறியப்படவில்லை என்பதால் சோவியத் யூனியன் சோசலிச நாடு என கூறுவது பொருந்தாது. டிராட்ஸ்கி சோவியத் ரஷ்யாவை இடைமருவும் (ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குமாறும்)சமுதாயம் என்று கூறினார். அது முதலாளித்துவமும் இல்லை, சோசலிசமும் இல்லை. முதலாளித்துவத்திற்குதிரும்புவது முற்றிலும் சாத்தியமே என்று அவர் கூறினார். அதாவது அதிகாரத்துவ ஆட்சி மிகவும் படுகேவலமான நிலைமைக்குச் சீரழிந்து விடமுதலாளித்துவம் சோவியத் ரஷ்யாவில் மீண்டும் ஏற்பட்டுவிடும். மேற்கொண்டு இந்த முதலாளித்துவ மீட்சிப் பாதையில் அதிகாரத்துவமே தீர்மானமான கிரிமினல் குற்றத்தன்மை வாய்ந்த பங்கு எடுக்கும். இந்த அதிகாரத்துவம் ஒரு வர்க்கம் அல்ல என்பதால் அது சோவியத் சமுதாயத்தில் ஒருசங்கடமானபங்கை வகித்தது. இவ்விதமாக அதிகாரத்துவம் தனது சலுகைகள் பெற்ற நிலையைபலத்த அஸ்திவாரமிட்டு ஆழமாக வேரூன்ற வேண்டும் என்று முயற்சி செய்கின்றது. இது தான் புதிய சொத்துறவுகள்.

இவ்விதம் அதிகாரத்துவத்திற்கு எதிராக அரசியல்புரட்சி செய்து அதிகாரத்தை தூக்கி எறியாவிட்டால் சோசஷலிசத்தை நோக்கி முன்னேறுவது அசாத்தியம் என்று டிராட்ஸ்கி வற்புறுத்தினார். தொழிலாளி வர்க்கம் இந்தஅதிகாரத்துவத்தை ஒழித்துக்கட்டி விட்டு அரசியல் அதிகாரத்தை மீண்டும் கையில் எடுக்கவேண்டும் என்று அவர் கூறினார். உண்மையான சோவியத் ஜனநாயகம் மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும்' இந்த அடிப்படையில் உண்மையான சோசலிசம் வளர்வதற்கான நிலைமைகளை ஏற்படுத்தவேண்டும், அதிகாரத்துவம் சோவியத்துகளிலிருந்து விரட்டி அடிக்கப்பட வேண்டும். தொழிற்சங்கங்கள் அதிகாரத்துவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். உற்பத்தி அமைப்பில் ஜனநாயக முறையில் தீர்மானங்கள் போடுவது தொழிலாள வர்க்கமாகவே இருக்க வேண்டும் அதிகாரத்துவமாக இருக்கக்கூடாது

ஆனால்இந்த அரசியல்புரட்சி சர்வதேசிய நிலைமையுடன் கட்டுண்டு கிடக்கிறது. ஏனெனில் சோவியத்யூனியன் தலைவிதி உலகளாவிய முறையில் தான் தீர்மானிக்கப்படமுடியும் சோவியத்பொருளாதாரத்தின் வளர்ச்சியை தேசிய அடிப்படையில் மதிப்பிட முடியாது. தொழில் உற்பத்தி நிலையை ஸ்டாலினிஸ்டுகள் விரும்புவது போல வருடத்திற்கு வருடம் மதிப்பிட முடியாது. மேலை நாடுகளில் கூறப்படுவதுபோல 3 வகையாகபொய்கள் உள்ளன அவையாவன பொய்கள், சபிக்கப்பட்ட பொய்கள், புள்ளி விபரங்கள் என்பனவாம் ஸ்டாலினிஸ்டுகள் தாங்கள் பொருளாதாரத்தை தப்பிதமான முறையில் மேலாண்மை செய்வதை மூடி மறைக்க பொய்யான புள்ளி விபரங்களைக் கொடுப்பதில் தனித்திறமை வாய்ந்தவர்கள்.

தேசிய வளர்ச்சியின் விகிதங்களைவிட அதிக முக்கியமானது முதலாளித்துவ, சோவியத் வளர்ச்சியின் விகிதங்களை ஒப்பிட்டுப்பார்த்தல தான். மிகமிக முக்கியமான விஷயம் என்ன வென்றால் தொழிலாளியின் உற்பத்தித்திறன். ஏகாதிபத்திய ராணுவம் சோவியத்யூனியனுக்கு ஒரு பயமுறுத்தல் தான். ஆனால் அதைவிட அபாயகரமானது மலிவான மேற்கத்தியப்பொருள்கள் இந்தக்காரணத்திற்காகத் தான், உலக மார்க்கட், சர்வதேசிய தொழில் பாகுபாடு, மிக மிக முன்னேறிய தொழில் நுட்பம் இவற்றின் பயன் கிடைக்காத வரை சோசலிசத்தை நோக்கி சோவியத்யூனியன் முன்னேறுவது என்பது நினைக்க முடியாது. இது எவ்வாறு அடையப்படும். சோவியத் தொழிலாள வர்க்கத்தின் கண்ணோட்டத்தின் அடிப்படையில்னாலும் பொழுது சர்வதேசியப்புரட்சிக் கொள்கை ஒன்றுதான் சாத்தியமானது.

சோவியத்யூனியனை இன்று எதிர்நோக்கி உள்ள அடிப்படைப்பிரச்சினைகள் இவை தான். இன்றுநாம் சோவியத் யூனியனில் காண்பது என்னவென்றால் 'தனி ஒருநாட்டில்' சோசலிசம் என்ற திவாலான கொள்கை முற்றிலும் தகர்ந்து போனதுதான். சோவியத் யூனியனின் எல்லைகளுக்குள் சோஷலிசத்தைக்கட்டிவிடமுடியும் என்ற உரிமைக்குரல் இப்பொழுது முற்றிலும்நம்பிக்கை இழந்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் உலகப்பொருளாதாரத்தில் பரந்த தொழில் நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஸ்டாலினிஸ்டுகளுடைய தேசியப்போர்த்தந்திரம் தகர்ந்து போவது துரிதமாக்கப்பட்டது. சோவியத் அபிவிருத்தியின் விகிதம் குறைந்துகொண்டே போக சோவியத் யூனியனுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளி பெரிதாய் போய்க்கொண்டுஇருக்கிறது இப்பொழுதுயாராவதுதேசிய சுயதேவைப்பூர்த்தி என்பதனை ஆதரித்துப்பேசினால்அவர் எள்ளி நகையாடப்பட்டு வெளியேற்றப்படுவார்.

சோவியத்யூனியன் உலக மார்க்கட்டுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளுவது என்பதுதான் பிரச்சனை. சர்வதேசியத் தொழில் பாகுபாடு, முன்னேற்றம் அடைந்த தொழில் நுட்பம் இவற்றுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளுவது? இவ்விதம் செய்தால் இரண்டு வழிகளில் ஒன்றே ஒன்றுதான் சாத்தியம். ஒன்று சோவியத்யூனியன் உலக ஏகாதிபத்தியக் கட்டமைப்புக்குள் தன்னை இணைத்துக்கொள்வது உலகநிதிமையம் (IMF) வர்த்தகம் சுங்கவரி இவற்றிற்கான பொது ஒப்பந்தம், ஏகாதிபத்தியப்பொருளாதார ஆதிக்க ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டுக்குள் சோவியத் யூனியனை வைத்து விடுவதாகும். சுருக்கமாக சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்சி ஏற்பட்டால் இந்தத் தொடர்பு சாத்தியமாகும். அல்லது தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியப்படுத்தப்பட்ட சர்வதேசியப் புரட்சிப் போராட்டத்தினால்தான அது முடியும்,

இந்தப்பிரச்சனை. எழுப்பப்பட்ட 65 ஆண்டுகட்குப் பின்னரும் இது இன்னும் தீர்மானமான பிரச்சனையாக இருக்கின்றது. ''தனி ஒரு நாட்டில் சோசலிசம்'' என்பதன் பொருள் முதலாளித்துவ மீட்சி என்பதேயாகும். மேலும் அது சோவியத்யூனியனுடையகலாச்சார சமுதாய நிலையைபயங்கரமாகத் தாழ்த்திவிட்டதுஇதற்கு ஒரு மாற்றுசர்வதேசியப்புரட்சி தான்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் கருத்துப்படி சோவியத் அரசாங்கம் இன்று கடைப்பிடித்து வரும் கொள்கைகள் சோவியத்யூனியனை உலக ஏகாதிபத்தியக் கூட்டமைப்புக்குள் இணைத்துக் கொள்வதை இலக்காகக் கொண்டவையாகும். அது முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வரும் கொள்கையை பின்பற்றுகிறது. கோர்பச்சேவின் கொள்கைகள் இந்த ஆட்சி எதிர்நோக்கும் நெருக்கடியில் அரசியல் ரீதியாக உணர்வு பெற்ற அதிகாரத்துவத்தின் பகுதிகளுக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் அமைந்துள்ளன சோவியத்பொருளாதாரத்தின் நெருக்கடி தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இயக்கத்தைத் தோற்றுவிக்கும் நிலைமைகளை உருவாக்கின்றன என்று அதிகாரத்துவத்திற்கு நன்குகத்தெரியும்.

இதை ஒரு வினாடிசிந்தித்துப் பாருங்கள். ஆன்ட்ரபோவ் பதவிக்கு வருவதற்கு முன்னால் போலந்து தொழிலாளிவர்க்கம் சால்டாரிட்டி என்னும் அமைப்பில் பேரெழுச்சி அலை மோதியது அன்ட்ரப்பாவ் பதவி ஏற்பது சோவியத் ஆட்சியில் சீர்திருத்த இயக்கத்தின் துவக்கம் என்று கருதப்படுகின்றது. போலந்து எழுச்சியைக்கண்ட அதிகாரத்துவம்சோவியத்யூனியனிலும் என்னவரும் என்று கண்டுகொண்டது, 1980-81ல். போலிஷ்அதிகாரத்துவம்எந்த மக்கள் சமுதாய ஆதரவும் இல்லாமல் இருந்தது ஆகையினால் சோவியத் அதிகாரத்துவத்தின் மிக மிக புத்திசாலித்தனமான தீர்க்கதரிசனம்உள்ள பிரிவினர் பிரஷ்நேவ் கும்பல் வெளியேற்றப்படவேண்டும் என்று கண்டனர் அதுஅவ்வளவு கடினமான காரியமாக இருக்கவில்லை. பிரஷ்நேவின் உயிர் ஆதரவு முறையை நிறுத்தி விடுவது தான் அது. சோவியத் அதிகாரத்துவத்திற்கு மற்றொரு கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியதுஅவசியமாக இருந்தது. சோவியத் அதிகாரத்துவம் ஏகாதியபத்தியத்தைக் கண்டு பயப்படுவதைக் காட்டிலும் அதிகமாக தொழிலாள வர்க்கத்தைககண்டு பயப்படுகின்றது, இந்தக் காரணத்தினால்தான் தொழிலாளி வர்க்கத்துககு எதிராக ஏகாதிபத்தியங்களுடன் அதிகமான நெருக்கமான பொருளாதார அரசியல கூட்டுறவைஏற்படுத்திக்கொள்வது சோவியத் அதிகாரத்துவத்தின்குறிக்கோளாக இருக்கின்றது, சோவியத் தொழிலின் சொத்துரிமையில் அதன வருங்கால ஏஜண்டுகளாகவும் மானேஜர்களாகவும் பங்குதாரர்களாகவும் இருந்து சேவை செய்ய முற்படுகின்றது அதனால்தான் தற்சமயம் சொத்துரிமை அமைப்புகளில் மாற்றங்கள் கொண்டு வருவதன் அவசியம் பற்றி விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இதனுடன் முதலாளித்துவம் பெருமைப்படுத்தப்படுகின்றது. முதலாளித்துவத்தை மீண்டும் கொண்டு வருவதன் உண்மையான உள்ளடக்கங்களும் விளைவுகளும் சோவியத் தொழிலாள வர்க்கத்திடம் இருந்து மூடிமறைக்கப்படுகின்றது.

ஒரு தீர்மானமான கேள்வியைக் கேட்டு என்னுடைய அறிக்கையை முடிவுக்கு கொண்டுவர விரும்புகின்றேன் சர்வதேசிய புரட்சிக்கொள்கையின் வருங்கால வாய்ப்புகள் என்ன? சர்வதேசியப்புரட்சிகரமான திட்டத்தின் அடிப்படையில் சோவியத்யூனியன்உலகப் பொருளாதாரத்தின் வசதிகளுடன் இணக்கம் ஏற்படுவதன் சாத்தியபபாடுதான என்ன ? இந்தத்திட்டம் அடையக் கூடியதுதானு?

தற்காலத்திய சர்வதேசிய முதலாளித்துவத்தின் நெருக்கடியைப்பற்றி சுருக்கமாக உங்களுக்கு விளக்கி, இந்தக் கேள்விகட்குப்பதில்கூறவிரும்புகின்றன, கடந்த 15 ஆண்டுகளுக்குள்ளாக பிரமிக்க வைக்குமபடியான தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதில் ஐயம் இல்லை, நுண்ணியல்

★8ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிசத்தின் எதிர்காலம்..

துகள் (Micro chip) தொழில் நுட்ப வளர்ச்சியானது உலக ளாதிய முக்கியத்துவபகொண்டது. சந்தேகத்திற்கு இடமின்றி உலக அளவில் உற்பத்தியில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தின் பலனாக செய்திகள் பரப்பும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உலகின் சரித்திரத்தில் இதற்கு முன் கண்டிராத அளவில்லைகளவில் பொருளாதார ஒருங்கிணைப்பு ஏற்பட்டுள்ளது கார்ப்பரேஷன்கள் (பிரமாண்டமான பெரிய கம்பனிகள்) உலக அளவில் இயங்குகின்றன. அவைகள் உலகத்தின் வளங்களை இதற்கு முன் கண்டிராத அளவில் கொள்ளையடித்து சுரண்டுகின்றன. இதற்குமுன் கண்டிராத அளவு மூலதனம் எங்கு வேலை டுமானாலும் சென்று இயங்குகின்றது. இந்தகைய உலகளாவிய உற்பத்தியில் ஒருமித்த இணக்கம் இருந்தபோதிலும் தேசிய அரசு என்ற அமைப்பில் சண்டைச்சச்சரவுகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யுத்த பிற்காலத்தில் ஐக்கிய அமெரிக்கா தலைமைப்பீடம் வகித்து ஆதிக்கம் செலுத்திய நிலை அழிந்துபோன இக்காலத்தில் ஏகாதிபத்தியங்களுக்குள் சச்சரவு முன்னணிக்கு வந்து கொண்டு இருக்கின்றது. உண்மையைக் கூறுமிடத்து அண்மையில் ஒரு பிரதான முதலாளித்துவ பொருளாதாரவாதி கீழ்க்கண்ட கேள்வியை முன்வைத்தார். ஏகாதிபத்தியங்களுக்குள் உள்ள சச்சரவுகள் யுத்தங்களை உற்பத்தி செய்யும் என்பது தவிர்க்க முடியாதது என்று லெனின் கூறியது உண்மை ஆகுமா? இல்லையா? என்பது தான் அந்தக் கேள்வி

இந்தப் போக்கானது சர்வ தேசியத் தொழிலாள வர்க்கத்தின் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது ஒவ்வொரு நாட்டிலும் தொழிலாள வர்க்கம் முற்றிலும் தேசியக் கொள்கை என்பதன் அடிப்படையில் தங்களுடைய வாழ்க்கை நிலைமைகளைப் பாதுகாக்க முடியாது என்று காண்கின்றனர். உற்பத்தியை வெகு துரிதமாக நாட்டுக்கு நாடு மாற்றிவிடக்கூடிய பெரிய கார்ப்பரேஷன்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பதைத் தொழிலாளர்கள் காண்கின்றனர். சர்வதேச அளவில் போராட்டங்களை நடத்துவது என்பது தொழிலாள வர்க்கத்திற்கு ஜீவமரணப் பிரச்சனையாகிவிட்டது. உதாரணத்திற்கு சோவியத் யூனியனில் இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டு இருக்கும் மாற்றங்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். ஜெர்மன் முதலாளிகள் சோவியத்யூனியனை மலிவான கூலிஉழைப்பு, மலிவான கச்சாப்பொருட்கள் கிடைக்கும் இடம் என்று கூறுகின்றனர். இது ஜெர்மன் தொழிலாள வர்க்கத்திற்கு என்ன அர்த்தம் ஆகின்றது. ஜெர்மன் தொழிலாள வர்க்கமும் சோவியத் தொழிலாள வர்க்கமும் பொதுவான போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்திற்கு தள்ளப்படுகின்றனர்கள். அதனால் தான் சர்வதேசியப்புரட்சியானது தொழிலாளவர்க்கத்திற்கு ஜீவனுள்ள புரட்சியாகும். இந்த நிலைமைகளில் சர்வதேசிய புரட்சிக்கட்சியைக் கட்டுவது மிக மிக முக்கியமானது ஆகவே இந்தக் காலப்பிரிவை அந்தவகைய உலகப்புரட்சிக் கொள்கையைக் கடைபபிடிக்கும் நான்காம் அகிலத்தின காலம் என்கிறோம்.

எனது உரையை செவிமடுத்தமைக்கு மிக்க நன்றியைத தெரிவித்துக் கொள்கிறேன்.

'வொர்க்கர்ஸ்லீக்' தேசிய செயலர்டேவிட் நார்த்சோவியத் யூனியனில் விஜயம் செய்த காலத்தில் மாணவர்களுடன் பேச வாய்ப்புக் கிடைத்தது. நவம்பர் 14ல் மாஸ்கோவில் விஞ்ஞான கம்யூனிசம் குறித்து மாஸ்கோ அரசு பல்கலைக்கழக செமினரில் தோழர் டேவிட் நார்த்நடத்தியஉரைபின்வருமாறு டேவிட் நாத் பேராசிரியர் பழேநோவ் என்பவரால் செமினருக்கு வரவழைக்கப்பட்டார். இதே பேராசிரியர்தான் முதல் நாளில் வரலாற்று ஆவணக்கழகத்தில் சோசலிசத்தின் வருங்காலம், டிராட்ஸ்கிய கண்ணோட்டர்' எனும் பொருள் குறித்துப்பேசுவதைக் கேட்டார். பேராசிரியர் பழேநோவ் தோழர் நார்த்தை மாணவர்கட்கு அறிமுகப் படுத்தினர். பின்னாவிரிவான விவாதம் தொடங்கியது,

டேவிட் நார்த் :

அறிமுகம் செய்து வைத்த உரைக்கு சுருக்கமான விடை அளிக்கவிரும்புகின்றேன். எங்களுடைய இயக்கப் நான்காம்அகிலம் ஸ்டாலினிசத்திற்குசமரசம் அற்ற எதிரியாகும். ஆகவே ஸ்டாலினிசம் அதன் பாரம் பரியம்ஆகியவற்றை அழிக்கும் எந்த நடவடிக்கையையும்நாம் ஆதரிக்கின்றோம். சோவியத் மக்களுக்கு எதிராக ஸ்டாலினிசம் செய்த பூதாகரமான கிரிமினல் குற்றங்களை நாம் அறிவோம் பல லட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு அதுவே காரணம். இந்தக் கிரிமினல் குற்றங்கள் சோசலிசம், மார்க்சிசம் ஆகியவற்றின் பேரால் நடத்தப்பட்டன. ஸ்டாலின் தன்னையே மிகப்பெரிய மார்க்சியவாதியாகக் காட்டிக் கொண்டார். போல்ஷேவிக் கட்சியின் தலைமைப்பீடத்தில் இருந்தவர்களை கொலை செய்தார்; பல்வேறு துறைகளில் இயங்கி வந்த ஆயிரக்கணக்கான மார்க்சிய சிந்தனையாளர்களையும் புரட்சியாளர்களையும் கொடுமைப் படுத்திக்கொன்று குவித்தார். மார்கசியம் புரட்சிகரக் கருத்துக்கு ஒரு சாதனமாக இருப்பதற்குப்பதிலாக ஒரு அரசு மதமாக்கப்பட்டது லெனினின் பூதவுடல் புடம் போடப்பட்டதிலிருந்து துவங்குகின்றது அதிலிருந்து ஸ்டாலினிசம் மார்க்சிசத்தை உண்மையான விமர்சனச் சிந்தனையிலிருந்து பிரித்து விட்டது

ஆகவே உங்களில் பலர் மார்க்சிசத்தை எதிர்மறையாகவே காண்கின்றனர் என்பதை என்னால் கற்பனை செய்ய முடியும் பிற்போக்கான கோட்பாட்டு வாதம், பொய்கள் இவற்றிற்கு நீங்கள் எதிரிகளாகவே இருக்கவேண்டும். ஆனால் மக்கள் இவற்றை எல்லாம் எதிர்த்துப் போராடவேண்டு. உண்மையை நாடவேண்டும்.

சோவியத்யூனியனின் எதிர்காலத்தைப் பற்றி ஆராயும் பொழுது ஸ்டாலினிசமதொழிலாள வர்க்கத்தினுல் தூக்கி எறியப்படாவிட்டால் முதலாளிததுவம் மீண்டும் ஏற்படுத்தப்படுவதில போய் முடியும் என்று டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தார். ஸ்டாலினிசத்தின் வெற்றியை முதலாளித்துவ எதிர்ப்புரட்சி வெற்றியின் முதல் கட்டம் என்று அவர் வருணித்தார். ஸ்டாலினிசத்தின் வெற்றி அதிகாரத்துவம் மக்கள் மீது கொண்ட வெற்றியை குறிக்கின்றது ஸ்டாலினிசம் மார்க்சிய விரோத தேசிய சோசலிசம் எனும் கருத்தமைப்பை அடிப்படையாகக்கொண்டுள்ளது. ஒரு தொழிலாளர் அரசியல் புரட்சியினுல் ஸ்டாலனிசம் தூக்கி எறியப்படாவிட்டால் தேசிய் சுயசார்பு என்று கூறிக்கொள்ளும் ஸ்டாலினிசம் பாசிசத்திற்குத்தான் இணக்கமாக இருக்குமே தவிர மார்க்சிசத்திற்கு இணக்கமாக இராது என்று டிராட்ஸ்கி எச்சரித்தார். தவிர்க்க முடியாதபடி ஸ்டாலினிசம் ஒரு நெருக்கடியை உருவாக்கும் இந்த நெருக்கடியை முதலாளித்துவ மீட்சியின்மூலம் தீர்க்க அதுமுயற்சிக்கும் என்றும் டிராட்ஸ்கி எச்சரித்தார்.



டிராட்ஸ்கி

அதிகாரத்துவத்திற்கு சோசலிசத்தின் மீதுஎவ்விதஅக்கறையும் இல்லை. அதன் அக்கறை முழுவதும் அதன் சலுகைகளில் தான். அது ஏகாதிபத்தியத்தைக்கண்டு பயப்படுவதைவிட தொழிலாள வர்க்கத்தைக் கண்டுதான் அதிகம் பயப்படுகின்றது. பொருளாதாரத்தை நாசகாரமான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்ட ஏராளமான அதிகாரத்துவ ஆட்கள் இருக்கின்றனர்கள். சோவியத் பொருளாதாரப்பகுதிகளை சர்வதேச முதலாளிகளுக்கு விற்றுவிட்டு தங்கள் நிலைமையைப் பாதுகாத்துக்கொள்ள விரும்புகின்றனர்கள். சோவியத்யூனியனில் தங்களை சர்வதேசிய முதலாளிகளின் தரகர்களாகவும், ஏஜெண்டுகளாகவும்மானேஜர்களாகவும் மாற்றிக்கொண்டு தங்கள் சலுகைகளை உறுதிப்படுத்திக் கொண்டு விடலாம் என்று அவர்கள் நம்புகின்றனர்கள் ஆனல்சோவியத் மக்களுக்கு இதன் விளைவு பேரழிவினதாகவே இருக்கும். அதிகாரத்துவத்திற்குஎதிராக சோவியத் மக்களை ஒன்று திரட்டுவதே சோவியத் யூனியனின் நெருக்கடிக்கு உண்மையான பதில் ஆகும். தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தின் சலுகைகள் எல்லாம் ஒழித்துக்கட்டப் படுவதற்குபோராடவேண்டும். மக்களின் நலன்கள் காக்கப் படும் வகையில் பொருளாதாரத்தை ஜனநாயகமுறையில் மாற்றி அமைக்க வேண்டும் தொழிற்சங்கங்கள் அதிகாரத்துவ தளைகளிலிருந்து விடுவிக்கபபடவேண்டும். அதிகாரத்துவத்தின் எல்லா சலுகைகளும் உரிமைகளும் பறிக்கப்படவேண்டும். அவர்களுக்குக் கிடைக்கும் வருவாய் ஆதாரங்கள் எல்லாம் வெளியிடப்படவேண்டும் விநியோகம் (பண்ட அளிப்பு) ஜனநாயக முறையில் மாற்றி அமைக்கப்படவேண்டும். இதனுடன் தொடர்பு கொண்டுள்ளது தான் உலகத்தொழிலாள வர்க்கம். உலகத் தொழிலாள வர்க்கத்துடன் உறவு வைத்து கொள்ளுதல மிக அவசியம். ஏனென்றல் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் தலைவிதி சர்வதேசியப்புரட்சியால்தான் தீர்மானிக்கப் டும்.

கேள்வி : நீங்கள் மார்க்சியத்தைஒருவழி முறையாகவா அல்லது உலகக்கணுேட்டமாகவா அல்லது கருத்தமைப்பாகவா கருதுகின்றீர்கள்?

பதில் : இயங்கியல் ஜட வாதம் என்பது தத்துவஞானச் சிந்தனையில் ஏற்பட்ட புரட்சியின் விளைவே. அது ஜெர்மன் தொன்மைத்தத்துவ வளர்ச்சியின் விளைவாகும். அது ஒரு விமர்சனக்கருத்தின் சிந்தனைப் பகுப்பாய்வின் விளைவாகும், முன்கூட்டியே தயாரான பதில்களுக்கு ஒரு சூத்திரமோ, தீவிரமான அனுபவரீதியான ஆராய்ச்சிக்குப் பதிலாகவோ அது இல்லை. அது சிந்தனையை ஒரு விதத்தில் செலுத்தும் கண்ணேட்டம், எந்த மேற்கோளும் ஒரு விவாதத்தைத் தீர்க்க முடியாது. ஒரு மேற்கோள்மூலம் ஒரு பிரச்சனையைத் தீர்த்து விடலாம் என்று நினைப்பது மார்க்சியத்தை ஸ்டாலினிச விகாரப்படுத்தல் ஆகும். நாம் புரிந்து கொள்கின்ற இயங்கியல் முறை என்பதுஉண்மையை சிந்தனையிலும் சிக்கலாகிகொண்டிருக்கின்ற கருத்தமைப்பிலும், மறு உற்பததி செய்வதாகும்,

கேள்வி : டிராட்ஸ்கிசம் மார்க்சிசத்தை எவ்வாறு வளர்த்தது ? டிராட்ஸ்கிஸ்டுகள் இருக்கின்றனர்கள் என்று ஏன் நீங்கள் நம்புகிறீர்கள் ? டிராட்ஸ்கிசம் என்றல் என்ன ? அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் ?

பதில் : டிராட்ஸ்கிசம் தான் மார்க்சிசம். ரஷ்யப் புரட்சியைக் காட்டிக் காடுத்ததை எதிர்த்துப் போராடிய போராட்டத்தில் வளர்ந்த மார்க்சியம், டிராட்ஸ்கிசம்.

கேள்வி : ஸ்டாலின் டிராட்ஸ்கியிடமிருந்து அதிகாரத்தைப்பறித்ததால்தான் டிராட்ஸ்கிஸ்டுகள் ஸ்டாலினிஸ்டுகளை எதிர்த்துப் போராடுகிறர்களென்று சிலர் நினைக்கின்றனர்கள். டிராட்ஸகிசம் என்பது எதற்குச் சார்பாகவும் எதற்கு எதிராகவும் உள்ளது?

பதில் : டிராட்ஸ்கிசம்என்பது சோசலிசத்திற்காக உள்ளது. சாவதேசிய அளவில் தொழிலாள வர்க்கம் அதிகாரத்தைத தன் கையில் எடுத்துக் கொள்வதற்காக அது உள்ளது. அது முதலாளித்துவ சுரண்டலை ஒழித்துக்கட்டவும திட்டமிட்ட விஞ்ஞான முறையில் சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்காகவும் உள்ளது.

கேள்வி : அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் உலகம் எவ்வாறு மாற்றி அமைக்கப் படும் ?

பதில் : இது சம்பந்தமாக மிகத் துல்லியமான திட்டத்தைக் கொடுக்க இயலாது, ஆனல் பொதுவாக தொழிலாள வர்க்கம அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்ட பின், ஒரு சிலரின் லாபததற்காக அல்லாமல் மக்களின் நலன்களின் அடிப்படையில உற்பத்தியை மாற்றி அமைக்கும்.

கேள்வி : அது வெறும் கற்பனைதான். நாங்கள்முனனதாகவே சோசலிசத்தைப பெற்று விட்டோம்.

பதில் : இல்லை நீஙகள் சோசலிசம் பெறவில்லை ஸ்டாலினிசத்துடன முறிவு ஏற்படுததிக் கொள்வதானல அதன் முதல்படி. சோசலிசம் என்றுமே இந்த நாட்டில இருந்தது இல்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும். சோவியத்யூனியன் சோசலிச சமுதாயத்தைப் பெற்ற நாடு இல்லை. காட்டிக் கொடுக்கப் பட்ட புரட்சி' என்ற தன்னுடைய நூலில் லியான் டிராட்ஸ்கி சோவியத் ருஷ்யாவை முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கும்இடையிலான இடைமருவும் சமுதாயம் என்று வர்ணித்தார். இந்த சமுதாயத்தின் இறுதித் தலைவிதி தீர்மானிக்கப்படவில்லை என்றும் கூறினர் சோவியத் ருஷ்யாவில் ''வளர்ச்சி அடைந்த சோசலிசம்'' இருப்பதாக அதிகாரத்துவம் உரிமை கொண்டாடுவதை நான்காம அகிலம் தொடர்ச்சியாக அம்பலப் படுத்தி வந்துள்ளது. குருஷ்சேவ் அமெரிக்கா வந்து, ''நாங்கள்உங்களை புதைத்து விடுவோம்,' என்று கூறினர். இதற்கு டிராட்ஸ்கிஸ்டுகள் கூறயது 'இது பெரும் அர்த்த மற்ற அதிகாரத்துவத் தற்புகழ்ச்சியே, என்றுதான், சோவியத் யூனியனில் உள்ள தொழிலாளர் உற்பததித் திறன் அமெரிக்காவில் உளள தைவிட அன்றும் குறைவாக இருந்தது. இன்றும் குறைவாகத்தான் இருக்கின்றது. சோசலிச சமுதாயத்திற்கு உற்பத்திசக்திகள் மிக உன்னதமான நிலைமைக்கு வளர்ச்சியடைந்து இருக்கவேண்டும். அபபடி இருக்க சோசலிசம் சோவியத்யூனியனில் இருப்பதாக எபபடி நீங்கள் கூற முடியும்?

மார்க்சிய அடிப்படைக் கோட்பாடுகட்கு எதிராகத் தோன்றியதே ஸ்டாலினிசம். 1917ல் போல்ஷேவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றியது அந்ததனிமைப்படுத்தப்பட்ட பின்தங்கிய நாட்டில் சோசலிசத்தைக் கட்டிவிட முடியும் என்றகருத்தின் அடிப்படையில் ஒருபோதும அல்ல வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில் புரட்சி விஸ்தரிக்கப்படுவதன் மூலமே சோசலிசத்தை வளர்ப்பது சாத்தியமாகும்.

இடைமறிப்பவர் : இது ஒரு தனி மேடைப்பேச்சு ! நீங்கள் கூறுவதிலிருந்து இது தெளிவாகின்றது.

டேவிட் நார்த் : அது அவ்வளவு தெளிவானல்சோசலிசம் பெற்றிருப்பதாக நீங்கள்ஏன் கூறுகிறீர்கள்?

இடைமறிப்பவர் : நாங்கள் முனனதாகவே புரட்சியைப் பெற்று விட்டோம். தொழிலாள வர்க்கஅதிகாரத்தையும் பெற்றுவிட்டோம். ஆனல் அது வெல்லவில்லை

டேவிட் நார்த் : அந்தப் புரட்சி சீரழந்தது, ரஷ்யத் தொழிலாள வர்க்கப பின்தங்கிய, மிகப்பெரும்பான்மையான விவசாய நாட்டில் ஆட்சியை எடுத்துக்கொண்டது. மேற்கு ஐரோப்பாவில் புரட்சிப் போராட்டங்கள் தோல்வி அடைந்ததால், ரஷ்யாவின் மீது தனிமைப் பட்டிருக்கும் தன்மை திணிக்கப்பட்டது. இந்த தனிமைப் படும் தன்மையின் அரசியல் விளைதான ஸ்டாலினிச வளர்ச்சி. பூதாகரமாக அதிகாரத்துவம் வளர்ச்சிஅடைந்தது. இந்த அதிகாரத்துவம் தான் அதிகாரத்தைத் தொழிலாளர்களிடமிருந்து கைப்பற்றியது டிராட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்கும்இடைப்பட்ட போராட்டம் தொழிலாள வர்க்கத்திற்கும் அதகாரத்துவததிற்கும இடைப்பட்ட போராட்டமாகும். டிராட்ஸ்கி தோல்வி அடைந்து இடது எதிர்ப்பை சட்ட விரோதமாக்கியது ஆகிய இவை தொழிலாள வர்க்கத்திடமிருந்து ஆட்சி அதிகாரத்தை அதிகாரததுவம் கைப்பற்றியதைக் குறிக்கின்றது.

★9ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சோவியத் மாணவர்களுடன்

கேள்வி: ஸ்டாலினிசத்திற்கு மாற்றாக டிராட்ஸ்கி ஏதாவது வைத்திருந்தாரா? அவர் விவசாயிகளுக்குவிரோதமாக இல்லையா? அவருடைய எண்ணங்கள் நடைமுறைக்குச் சாத்தியப்பட்டனவையா?

டேவிட் நார்த்: 1923ல் சோவியத் காங்கிரசில் டிராட்ஸ்கி சமர்ப்பித்த அறிக்கையை நீங்கள் படித்து இருக்கின்றீர்களா என நான் ஐயுறுகின்றேன். 1923ல் நீண்ட அறிக்கையைக் கட்சிக்காங்கிரசில் டிராட்ஸ்கி சமர்ப்பித்தார். சோவியத் யூனியனை எதிர்நோக்கிய அடிப்படைப் பிரச்சினைகளை விளக்க முயன்றார். அவர் ஒரு வரைபடம் வரைந்தார். (graph) அது உலகப் புகழ் பெற்றது அதில் அவர் விவசாய, தொழில் துறை உற்பத்திப் பொருட்களின் விலைவாசிகளை ஒப்பிட்டுக் காட்டினார். மேலே செல்லும் கோடு தொழிற் துறை பொருட்களின் விலையைக் காட்டியது. கீழே இறங்கிய கோடு விவசாயப் பொருட்களின் வீழ்ச்சியைக்காட்டியது வேறுவிதமாகக் கூறினால் தொழில்துறை உற்பத்திப் பொருட்கள், தொழில் உற்பத்தித்திறன் குறைவின் காரணமாக அதிக செலவினமானதாக இருந்தது. விவசாயப் பொருட்கள் மலிவாகவும் அதிக அளவிலும் கிடைத்தன. அந்த வரைபடத்தில் உள்ள கோடுகள் திறந்த கத்திரிக்கோலைப்போல் இருந்தன டிராட்ஸ்கி இந்த இரண்டு கோடுகளின் முக்கியத்துவத்தை விளக்கினார். தொழில் துறை உற்பத்திப்பொருட்கள் விவசாயத்துறை உற்பத்திப் பொருட்கள்ஆகியவற்றின் விலைகளுக்கு இடையிலான இடைவெளியைக்காட்டி அதனைக் "கத்திரிக்கோல்நெருக்கடி" என்று கூறினார் தொழில் துறை உற்பத்திப் பொருட்களின் விலைக்கும் விவசாயப் பண்டங்களின் விலைக்கும் இடையே உள்ள இடைவெளி இன்னும் அதிகமானபோது, சோவியத்யூனியனின் ஸ்திரத் தன்மையும் அக்டோபர் புரட்சி நீடித்து இருப்பதும் பிரச்சனையாகி விட்டதுஎன்று அவர் கூறினார். ஏனெனில் அக்டோபர் புரட்சியானது, தொழிலாள வர்க்கம் விவசாயிகள் இவர்களிடையே ஏற்பட்ட ஒரு கூட்டுறவை அடிப்படையாக கொண்டது. விவசாயிகளுக்கு மலிவான தொழில்துறை உற்பத்திப் பொருட்களை அளிக்க முடியவில்லையானால் தொழிலாள வர்க்கம் விவசாயிகள் இவர்களிடையே பிளவுஏற்படுவது தவிர்க்க முடியாதது. இவ்விதம் ஒரு நாசகாரமான விளைவு ஏற்படும் என்று டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தார்.

இதன்காரணமாகநாட்டுப்புறத்திற்கும் நகர்ப்புறத்திற்கும் இடையில் பகுத்தறிவு பூர்வமான பொருளாதார உறவை உண்டுபண்ணுவதற்கான தொழில் துறை உற்பத்திப்பொருட்களின்விலைகளைக் குறையச் செய்யும் வண்ணம் தொழில் துறையில் திட்டமிட்ட வளர்ச்சிக்கு அரசு அதிக கவனம் எடுக்க வேண்டும் என்று டிராட்ஸ்கி முன்மொழிந்தார். அரசின் வருவாயை உயர்த்துவதற்கு வரிவிதிப்புக் கொள்கையைப் பின்படுத்த வேண்டுமென்றும் கூறினார். செல்வந்தவிவசாயிகளின் மேல்வரிவிதிப்புக் கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் என்று டிராட்ஸ்கி கூறினார். அந்த வரிவிதிப்புக் கொள்கை [illegible] கின்றதன் அடிப்படையில் அமைக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

டிராட்ஸ்கி இந்த அறிக்கையைச் சமர்ப்பித்த பிறகு, அப்பொழுதுதான் உருவாகிக் கொண்டிருந்த ஸ்டாலினிசக் குழு- 'விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும்இடையே' பிளவு ஏற்படும் என்ற பீதியைக் கிளப்பிவிடுகின்றார் டிராட்ஸ்கி, என்று டிராட்ஸ்கிக்கு விரோதமாகப் பிரச்சாரத்தை துவக்கியது. அவர் "விவசாயிகளைக் குறைவாக மதிப்பிட்டதாககுற்றம் சாட்டினார்கள். அதுதான் ஸ்டாலினுடைய முதல் பெரிய பொய் ஆகும்.

விவசாயிகளுக்குத் தேவையானது குறைந்த புகழ்ச்சியும் அதிக டிராக்டர்களும்தான் என்று டிராட்ஸ்கி கூறினார். ஏனெனில் அந்த அடிப்படையில்தான் விவசாயம் புரட்சிகரமாக வளர்ச்சி அடையும்- மேலும்புத்திசாலித்தனமான பகுத்தறிவுக்குப் பொருத்தமான முறையில் சோவியத் பொருளாதாரத்தை நவீனமயப்படுத்தமுடியும் என்றார்.

இதனுடன் கூடடிராட்ஸ்கி கீழ்க்கண்ட ஒன்றையும்விளக்கினார். பொருளாதார வளர்ச்சிக்கு சோவியத் அரசாங்கம் இரண்டு முக்கியமான நெம்புகோல்களைப் பெற்றுள்ளது என்று கூறினார் குறுகிய நெம்புகோல் உள்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை. பெரிய நெம்புகோல் நீண்டகாலசர்வ தேச சோசலிசப் புரட்சிஎன்ற கொள்கை, அதாவது வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளில்உள்ளதொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்தவுடன் சோவியத் தொழிற்சாலை வளரவதற்காக அவசியமான வசதிகளை அளிக்கும். முதன் முதலில் டிராட்ஸ்கி திட்டமிடல், தொழில் வளர்ச்சி இவற்றைப் பற்றிப் பேசும்பொழுது மிகவும் எச்சரிக்கையாகவே வளர்ச்சி விகிதங்களைப்பற்றிக்கூறினார். தொழிலாள வர்க்கம் விவசாயிகள் இடையே உள்ள பிளவைத் தவிர்ப்பதற்கு இவ்விதம் செல்வது முக்கியமானது என்று கூறினார். 1923ல் பிரசுரம்செய்யப்பட்டஇடது எதிர்ப்பின் திட்டத்தை நீங்கள்படிக்கும்பொழுது,இதனை எல்லாம் தெரிந்து கொள்வீர்கள். இந்தத்திட்டம் தள்ளுபடி செய்யப்பட்டது. பிரியே பிரஜின்ஸ்கி, பயடகோவ் இன்னும் பலருடன் வியாஸ் டிராடஸ்கி நாடு கடத்தப்பட்டார்.

டிராட்ஸ்கியையும் இடது எதிர்ப்பையும் நாடு கடத்திய பின் நிகழ்ந்தது என்ன?

1920ஆம் வருடங்களில் அவர்கள் என்ன நடக்கும் என்று எச்சரிக்கை செய்தார்களோ அதுவே நடந்தது. தொழில்துறை உற்பத்திப் பொருட்கள் கிடைக்காததனால் விவசாயிகள் அதிருப்தி அடைந்து, நகரங்களுக்குத் தானியங்களைக்கொடுக்காமல் பதுக்கி வைத்தனர். 1928 [illegible] தானிய நெருக்கடி தோன்றியது அவர்களுக்கு மிக இயற்கையான முறையில் ஸ்டாலினிஸ்டுகள் பீதியுடனும், தீர்க்கமாக [illegible] இன்றியும் திடீர் 'இடது'சாரிப் பக்கம் திரும்பினார்கள் தான். "இடது" என்னும்சொல்லை மேற்கோள் குறிகளுக்குள் [illegible] விவசாயிகளின் [illegible] இயக்கத்தின் ஆரம்பம். இது [illegible] நடத்தப்பட்டது. இதற்கும் சோவியத் பொருளாதாரத்தை பகுத்தறிவு முறையில் வளர்ப்பதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது.

"இடது எதிர்ப்பின் அறிக்கை" உங்களுக்குக் கிடைக்கும் பொழுது 1930, 1931, 1932. டிராட்ஸ்கி எழுதிய கடிதங்களைப் படியுங்கள் சோவியத் பொருளாதாரத்திற்கு இந்த கூட்டுப்பண்ணை அமைப்பு இயக்கம் எவ்வளவு நாசகார அபாயங்களை ஏற்படுத்தியது என்பதை அவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம். நிச்சயமாக நாசகரமான பொருளாதாரக்கொள்கையின் விளைவாக மக்கள் மீது பயங்கர ஆட்சி திணிக்கப்பட்டது. விவசாயிகள், தொழிலாளர்கள், ஸ்டாலினின் கொள்கையை எதிர்த்தகட்சி ஊழியர்கள்எல்லோரும் பயங்கரமான முறையில் ஒடுக்கப்பட்டனர்.

கேள்வி: நீங்கள் சொல்வது எல்லாம் சரியாக இருந்தாலும் நாங்கள் இப்போது என்னசெய்யவேண்டும்? நாங்கள் இப்போது உள்ளநிலைமையில் உலகப் புரட்சி தோன்றும் வரைகாத்திருக்கவேண்டுமா?

டேவிட் நார்த்: வேறு இடங்களில் உலகப்புரட்சி தோன்றும்வரையில் சோவியத்யூனியன் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது எனபது பிரச்சனை அல்ல, இப்படி நான் நம்பவில்லை. சோவியத் யூனியனுக்கு உலக வர்த்தகத்தை விஸ்தரிப்பது அவசியம்ஆகின்றது வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளுடன் அதிகப்படியான பொருளாதாரத் தொடர்பு அவசியம் ஆகின்றது. எந்த மார்க்சிய வாதியும் இதை எதிர்க்க மாட்டான். சோவியத்யூனியன் மேற்கு நாடுகளுடன தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது புரட்சிக் கொள்கைக்குப் பொருந்தாதுஎன்று நாங்கள் கூறுவதாகச் சொல்வது தவறு. சோவியத்யூனியனது ஆரம்ப வருடங்களைத் திரும்பிப் பார்ப்போம். அந்த சமயம் லெனின் தலைமையில் சோவியத்யூனியன் பரந்த அளவில் ராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டது கணிசமான அளவிற்கு வெற்றியும் பெற்றது. இந்த வெற்றிகளுக்கு சர்வதேசிய ரீதியில் தொழிலாள வர்க்கம் சோவியத் யூனியன்பால் செலுத்தியபெருமளவினதான அனுதாபமும் ஒரு காரணமாகும். இந்த ராஜதந்திர நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட விதமும் வெற்றியைத் தந்தது. ஒவ்வொரு முதலாளித்துவ அரசாங்கமும் தொழிலாளர் மக்கள் திரள்கள் கொண்டுள்ள உணர்வுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அப்படிப்பட்ட பொருளாதாரத் தொடர்புகளுக்கு வழி வகுக்கக்கூடிய ஒட்டுமொத்தமான முல உபாயம்(STRATEGY) என்ன என்பதுதான் தீர்மானமான கேள்வி ஆகும். இந்தபொருளாதாரத் தொடர்புகள் சோவியத் பொருளாதாரத்தை முன்னேற்றும் அதே வேளையில் சோவியத்யூனியன் புரட்சிகர சர்வதேசியக் கொள்கையை முன்னெடுக்கக் கூடிய வகையில் அமைந்திருக்கிறதா? அல்லது இருக்கப் போகிறதா?

இது [illegible]

பலரிடமிருந்தும் கேட்டிருக்கின்றோம். [illegible] ஆண்டுகளின் ஆரம்ப வருடங்களில் நிக்சன் கிரெம்ளினுக்கு வரவேற்கப்பட்டார். அந்த சமயம் ஐக்கிய அமெரிக்கா வியட்நாம் மீது குண்டுகளைப் பொழிந்து கொண்டுதான் இருந்தது. இவ்விதம் வரவேற்பதானது. சோவியத் யூனியனின் வழக்கமானஸ்டாலினிச கபட நாடகம் என்றே கருதப்பட்டது. பல பத்து ஆண்டுகளாக சோவியத்ராஜதந்திரம் இத்தகைய கபட நாடகத்தன்மைவாய்ந்ததாக இருந்தது. இத்தகைய கபட நாடக ராஜதந்திர முறையில் சர்வதேசத்தொழிலாள வர்க்கத்தின் நலன்கள், சோவியத் அதிகாரத்துவத்தின் உடனடி நலன்களுக்குஉட்படுத்தப்பட்டது. இக்கொள்கை அதன் முழுத்தன்மையையும் பெற்றுவிட்டது. இந்த சர்வதேசக் கொள்கையானது சோவியத் யூனியனை உலக முதலாளித்துவக் கட்டமைப்புக்குள் இணைத்துகொள்ள வேண்டும் என்பதுதான். இதன் பலன் நாசகாரமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விதம்முதலாளித்துவத்திற்குள் இணைத்துக் கொள்வதானது மக்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு உயர்த்தும்? போலந்தில் நடந்தவற்றைப்பின்பற்றிக்கொண்டு வந்து இருக்கின்றீர்களா? போலந்து அரசாங்கம்ஜெப்ரி சாக்ஸ் என்பவரைக்கொண்டு வந்து இருக்கின்றது. அவரது வேலை போலந்து பொருளாதாரத்தை முதலாளித்துவ முறையில் மாற்றி அமைப்பது தான், இக்கொள்கையானது உடனடியாக உண்மையான பொருளாதாரப் பேரழிவைக் கொண்டு வந்திருக்கின்றது.

சோவியத்யூனியனில் இக்கொள்கையின விளைவு என்னவாக இருக்கும்? உங்களில் யாராவது முதலாளித்துவ மீட்சியினால் ஏற்படும் ஆதாயங்களைப் பற்றி விளக்க முடியுமானால் அவ்விதமே செய்யுங்கள். ஆனால் இது முழுவதும் திவாலான கொள்கை என்றே நான் கருதுகின்றேன்

நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நாங்கள் வேறுவிதமான நடவடிக்கைகளை ஆதரிக்கிறோம். அதிகாரத்துவத்திற்கு எதிரான புரட்சிகரப் போராட்டமே இந்த நடவடிக்கைகளின் துவக்கம் ஆகும். முதலாவதாக விதியோக முறைகளில் அதிகாரத்துவத்தின் அதிகாரத்தை உடைத்து எறியுங்கள். சோவியத் ஜனநாயகத்தை மீண்டும் கொண்டு வாருங்கள். தேவைக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்யும்படி மாற்றி அமையுங்கள். இந்தநாட்டில் உள்ள உண்மை இயற்கை வளங்களை விஞ்ஞான ரீதியாகக் கணக்கு எடுப்பதற்கும் அத்துடன்கூட புத்திசாலித்தனமான, தீர்க்கதரிசனம் வாய்ந்த திட்டமுறைப்படி பொருளாதார உறவுகளைமுதலாளித்துவ நாடுகளுடன் வளர்த்துக்கொள்ள. சோவியத்ஜனநாயகம்அரசியல்முன் நிபந்தனை ஆகும். புதியமுதலாளித்துவ வர்த்தக நலன்களுக்கு அல்லாமல்தொழிலாளவர்க்க நலன்களுக்காக இத்தகைய உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

கேள்வி: இவ்விதம் செய்வதானால் அது வன்முறையான புரட்சிகரமாகத்தில் கொண்டு போய்விடும். அதிகாரத்துவத்தை [illegible] கமிசார்களை அதிகாரத்தில் அமர்த்துவதாகாதா?

டேவிட் நார்த்: அப்படி நடப்பதானால் புரட்சி செய்வதில் அர்த்தமே இல்லை. நிச்சயமாக அதிகாரத்துவத்தைத் தூக்கி எறிந்த பின் தொழிலாள வர்க்கம் சரித்திரத்தின் பாடங்களைக் கற்றுக் கொண்டு சலுகைமிக்க புதிய அதிகாரத்துவ பிரிவு ஏற்படுவதைத் தடுத்துவிடும்.

மக்கள் பலாத்காரத்தை விரும்பவில்லை, ஆனால்பிரச்சனை இதுதான். அதிகாரத்துவத்தின் ஆதிக்கம் நீக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டால் அதற்கு அதிகாரத்துவத்தின் பதில் எவ்வாறு இருக்கும். சமாதானமான முறையில் அவர்கள் ஆதிக்கத்தைவிட்டுவிடத் தயாரா? சீனாவில் என்ன நடந்தது என்று கண்டோம், அங்கே நிராயுதபாணிகளாகிய இளைஞர்களும் தொழிலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். படுமோசமான முறையில் பலாத்காரம் கையாளப்பட்டு இருக்கின்றது, உதாரணமாக டிப்லிசி நகரில் விஷவாயுவும் பயன் படுத்தப் பட்டிருக்கின்றது. இந்த அதிகாரத்துவம் தொழிலாளரது ரத்தத்தில் நனைந்து சொட்டிக் கொண்டிருக்கிறது. அதிகாரத்துவத்தின அமைதித்தன்மையின் மீதும் அவர்கள் அமைதியானமுறையில் சரணாகதி அடைவர் என்பதில் ஒருவர் நம்பிக்கை வைக்க முடியும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது, இந்த நாட்டில்தொழிலாள வர்க்கம் மற்றும் சுரங்கத் தொழிலாளர்கள் இவர்களின் சக்திவாய்ந்த இயக்கத்தைக் கண்டோம் தொழிலாள வர்க்கத்தின் சக்திவாய்ந்த இயக்கம் அதிகாரத்துவத்தைத் தனிமைப்படுத்திவிட்டது. மக்கள் இயக்கம் எவ்வளவுக்கெவ்வளவு சக்திவாய்ந்ததாக இருக்குமோ அவ்வளவுக்கவ்வளவு குறைந்த பலாத்காரம் போதுமானது.

கேள்வி: அதிகாரத்துவம் அதிகாரத்தை விட்டுவிடாது. புதிய சுப்ரீம் சோவியத்தில் 'கிளாஸ்நோஸ்தை' தவிர்த்து பெரிய மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. 'கிளாஸ் நோஸ்த்' என்பது பத்திரிக்கைச் சுதந்திரமும் இலலை, வார்த்தைச் சுதந்திரமும் இல்லை.

டேவிட் நார்த்: இல்லை, இது இன்றும் ஒரு போலீஸ் அரசுதான். சட்டங்களுக்கு இடையே உள்ள இடைவெளி சற்று விசாலமாகியிருக்கிறது அவ்வளவுதான்.

கேள்வி: நான் ஒரு அடிப்படைக் கேள்வியைக் கேட்கிறேன். முதலாளித்துவ மிதவாதி என்றமுறையில் தொழிலாள வர்க்கம அரசியல் அரங்கிற்கு வெளிவருவதனால்தான் எல்லாப் பிரச்சினைகளும் தோன்றுகின்றன என்றுநான் நினைக்கின்றேன். அதனால் தான் இந்நாட்டில் நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன தொழிலாள வர்க்கம் புரட்சிகர ஆற்றல்பெற்று இருக்கிறது என்று ஏன் நீங்கள் நம்புகின்றீர்கள், தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கையிலெடுத்தால் அதிகாரத்துவம் மீண்டும் ஏற்படாது என்று உங்களால் உறுதிமொழி கொடுக்க முடியுமா? மற்றொரு கேள்வி, தொழிலாள வர்க்கம் என்பதில் நீங்கள் தொழிலாளர்களும் உள்ளடங்குவார்களா?

டேவிட் நார்த்: தொழிலாள வர்க்கத்தின் [illegible]

[illegible] பக்கம் பார்க்க

www.padippakam.com

# சோவியத் மாணவர்களுடன

தட்டுக்கள் உள்ளன. முதலாளித்துவ தாராளவாதம் இவற்றை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்ளும் நீங்கள் இருபதாம் நூற்றாண்டில் முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் பாசிசம் இவற்றை மறக்கக்கூடாது. பின் தங்கிய நாட்டு மக்கள் மீது முதலாளித்துவமும் ஏகாதிபத்தியமும் ஏற்படுத்திய நாசகார விளைவுகளை நீங்கள் மறந்துவிடக்கூடாது. உலகின்பல்வேறுபகுதிகளுக்கு நான் பயணம் செய்திருக்கிறேன். முதலாளித்துவத்துவத்தின் உண்மைத்தன்மை நீங்கள் நினைப்பதைவிடவேறு விதமாக இருக்கின்றது. முதலாளித்துவ ஜனநாயகத்தைப் பொருத்தவரை — நாம் முதலாளித்துவ ஜனநாயக நாட்டில் வசிப்பதால் இது ஒரு சுவையான பொருள் தான் ஐக்கிய அமெரிக்காவில் புரட்சிகர செய்தித்தாள்களை விற்க முயன்றால் எப்படி இருக்கும் என்பதையும் போர்க்குணம் படைத்த தொழிலாளர்கள் நடவடிக்கைஎடுத்தால்என்ன நிகழும் என்பதையும் கூட நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் அமெரிக்காவில் ஒரு பத்திரிக்கையை விற்கிறோம். நாங்கள் பெயரளவிற்குத்தான் சுதந்திரம் பெற்றுள்ளோம். ஒரு தொழிற்சாலைக்கு வெளியே பத்திரிக்கையை எடுத்துச் சென்றால் நாங்கள் பாதுகாப்புப்படையினரை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நாங்கள் தொடர்ந்துஅங்குபத்திரிகைவிற்றால்போலீஸ்காரர்களிடம் ஒப்படைக்கப்படுவோம் என்று அச்சுறுத்தப்படுகின்றோம். நாங்கள் சட்ட அளவில் ஒரு பத்திரிகையை விற்க ஜனநாயக உரிமை பெற்று இருக்கின்றோம். ஆனால் பத்திரிகை விற்கும்போது போலீசார் வந்து எங்களைக் கைது செய்வார்கள். ஏனென்றால் சிறையிலிருந்து வெளிவர வரவும், இந்தத் துன்புறுத்தலைஎதிர்த்துப் போராட ஒரு வழக்குரைஞரை அமர்த்தவும் ஏராளமாகப் பணம்செலவழியும் என்று அவர்களுக்குத் தெரியும். அல்லது நாங்கள் கடைப்பகுதிகளில் விற்றுக் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். போலீசார் எங்களை அந்த இடத்தைவிட்டு அகலுமாறு கூறுவார்கள். ஏனென்றால் கடைப்பகுதி முதலாளித்துவ ரியல் எஸ்டேட் பெருந்தனக்காரருக்குச் சொந்தமான தனிச்சொத்து ஆகும். ஆகவே அங்கு பத்திரிக்கை விற்க உரிமை கிடையாது என்பர் கடந்த சில ஆண்டுகளில் பத்திரிக்கை விற்றதற்காக கைது செய்யப்பட்டவர்களை வெளியேகொண்டு வர மட்டும் எங்களதுகட்சிஆயிரக்கணக்கான டாலர்களைச் செலவழித்து இருக்கிறது.

எங்கள் கட்சியின் நடவடிக்கைகள் முதலாளித்துவப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுவதில்லை. பொதுத்தேர்தலில் நாங்கள் வேட்பாளராகஇருக்கும் பொழுதுகூட இருட்டடிப்பு செய்யப்படுகின்றோம் அமெரிக்கப்பத்திரிக்கைகளில் நீங்கள் இருவிதக் கொள்கைகளைப் பார்க்கலாம். அவை தாம் ஜனநாயகக்கட்சி, குடியரசுக்கட்சியின் கொள்கைகள். இரண்டும் முதலாளித்துவக் கட்சிகளே. தொழிலாளர்வர்க்கம் தனது வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாக்க வேலை நிறுத்தத்தில் ஈடுபடவிழையும்பொழுது முதலாளிகள் வேலை நிறுத்தத்தை உடைக்க கருங்காலிகளை நியமிக்க உரிமை பெற்று இருக்கிறார்கள். கருங்காலிகள் தொழிற்சாலைக்குள் [illegible]

தைத் தடுக்க தொழிலாளர்கள் முயன்றால், அது சட்ட விரோதமானது என்று கோர்ட்டார் உத்தரவு வருகின்றது.

நியூயார்க் நகரத்தில் தற்போது டெலிபோன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னால் தொழிலாளர்களில் ஒருவர் 'மறியல் கோட்டில்' (picket line) நின்று கொண்டு இருந்தார். ஒரு கருங்காலி வேண்டும் என்றே அவர் மீது காரை ஏற்றிக்கொன்று விட்டான். இந்த கருங்காலி போக்குவரத்து விதிகளை மீறினான் என்றுகூட குற்றம்சாட்டப்படவில்லை. இச்சம்பவத்தை ஒரு முதலாளித்துவ பத்திரிகைகூட பிரசுரிக்கவில்லை.

தற்சமயம் மேற்கு வர்ஜீனியாவில் நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடந்துகொண்டு இருக்கிறது. பதினோரு தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டனர். அதிகாலைக்கு முன் அவர்கள் படுக்கையிலிருந்து வெளியே இழுத்துக்கொண்டு வரப்பட்டனர். 80 வருட சிறைத்தண்டனைக்குரிய குற்றச்சாட்டுகளையும் போலி வழக்குகளையும் எதிர்நோக்குகின்றனர். முதலாளித்துவ ஜனநாயகம்என்பதுமுதலாளிகளுக்குத்தான் ஜனநாயகம். தொழிலாள வர்க்கத்திற்கு அல்ல. நம்முடைய பத்திரிக்கைகள்எல்லாம்கோடீசுவரர்களுக்கும், முதலாளிகளுக்கும் கார்ப்பரேஷன்களுக்கும் சொந்தம். உங்களுக்கு இது தெரியாது. இது எளிய பிரச்சாரம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். முதலாளித்துவ ஜனநாயகம்என்பது அமெரிக்காவில் வேசித்தன்மை வாய்ந்தது இந்தப் பிரச்சினைகளை நாம் அணுகும்போது தொழிலாளி வர்க்க நலன் அடிப்படையில் அணுகுகின்றோம்.

கேள்வி : டிராட்ஸ்கிசம் இப்பொழுது நெருக்கடியில் உள்ளதா? ஸ்டாலினை விமரிசிப்பதில்நீங்கள்இப்பொழுது மட்டிலும் தனிமையாக இல்லை. டிராட்ஸ்கிஸ்டுகள் இந்நாட்டில் ஒதுக்கப்பட்டனர் ஆனால் இன்று நாம் இங்கே எதிர்நோக்கும் அலாதியான நிலைமையைப் பார்க்கின்றோம் டிராட்ஸ்கிசம் நெருக்கடியில் உள்ளதா? நீங்கள் எப்படி எங்களை அக்கறை கொள்ள வைக்க முடியும்? உங்களையே நீங்கள் எப்படிப் பிரித்துக்காட்ட முடியும்? நீங்கள் எங்களுக்கு என்ன வழி வகைகளைக்கொடுக்கமுடியும்?

டேவிட் நார்த் : இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு இருக்கும்சம்பவங்கள் டிராட்ஸ்கிசம்தான் உண்மையானது என்று திருபித்து விட்டன. டிராட்ஸ்கி சோவியத் யூனியனிலிருந்து நாடு கடத்தப்பட்டு 60 வருடங்கள் கழிந்துவிட்டன ஸ்டாலினிசஏஜண்டினால்அவர் கொலைசெய்யப்பட்டதிலிருந்து 50 ஆண்டுகள்கடந்து விட்டன. நாங்கள் எவ்வளவோ ஒடுக்கப்பட்டாலும் டிராட்ஸ்கிசக் கருத்துக்கள் சோவியத் மக்களுக்கு மீண்டும் ஒருமுறை கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. டிராட்ஸ்கி எழுதியதுபோல் வரலாற்றின்விதிகள்அதிகாரத்துவ இயந்திரத்தைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தவை அரசியல் குழப்பம் ஏப்பட்டிருந்தபோதிலும் டிராட்ஸ்கியின் நூல்களை படித்துதெரிந்து கொள்ளும் வாய்ப்புக்கிடைப்ப [illegible] [illegible]

தோன்றி வளரும் என்பதில் ஐயம் இல்லை. ஏனென்றால் இன்று சோவியத்யூனியனில் நடைபெறும் சம்பவங்களின் பரீட்சையில் டிராட்ஸ்கி கூறிய அரசியல் கருத்துக்கள்உண்மை என்று மெய்ப்பிக்கப்படும். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று நீங்கள் எங்களைக் கேட்டால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சியைக் கட்ட முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. நாங்கள் இயங்கும் எல்லா நாடுகளிலும்உலக அளவில் தொழிலாள வர்க்கத்தை ஒரே அரசியல் கட்சியில் ஐக்கியப்படுத்த முயற்சி செய்கின்றோம், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, லத்தின் அமெரிக்கா நாடுகளில் இயங்குகின்றது. உலக முதலாளித்துவத்தின் கட்டமைப்பில் ஆழ்ந்த மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன, இம்மாற்றங்கள் ஒரு சர்வதேசியப் பாட்டாளி வர்க்கப்புரட்சி ஸ்தாபனத்தை அன்றாடஅவசியமாக்கி விட்டது. சர்வதேசியரீதியில் அமைக்கப்பட்ட மூலதனம் ஒவ்வொரு நாட்டிலும்தொழிலாள வர்க்கத்தை எதிர் நோக்குகிறது. அமெரிக்கா, ஜெர்மனி அல்லது வேறு எந்த நாட்டிலும் உள்ள தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவத்தை எதிர்த்து தேசிய அளவுக்குள் மட்டுமே போராடுவது என்பது அசாத்தியமானது என்பதை உணர்கின்றனர் வருகின்ற காலப்பகுதியில் நீங்கள் நீண்ட காலம் காத்திருக்கத் தேவை இல்லாமல், சீக்கிரந்திலேயே

சர்வதேசியத் தொழிலாளவர்க்கம் என்ற ஒன்று உண்டு. அமெரிக்காவில் உள்ள தொழிலாளவர்க்கம்சோவியத் தொழிலாள வர்க்கம் மீது ஆழ்ந்த அனுதாபம் கொண்டுள்ளது. இந்தத் தொழிலாள வர்க்கத்தில்தான் சோவியத் மக்கள் தமது ஆழ்ந்த வலுவான நண்பர்களை காண்கின்றார்கள். அமெரிக்கத் தொழிலாளியோ ஜெர்மன் தொழிலாளியோ சோவியத் சந்தை, மலிவான உழைப்பு ஆகியவற்றில் அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் விரும்புவது சமுதாயத்தை மாற்றி அமைக்க தொழிலாள வர்க்கத்தின் சர்வதேசிய ஐக்கியம்தான் கடைசியாக உலகம் பூராவிலும் உள்ள தொழிலாள வர்க்கத்திற்கு கடைசியாக உலகம் பூராவிலும் உள்ள தொழிலாள வர்க்கத்திற்கு இடையில் அரசியல்ஒத்துழைப் பிற்கான நிலைமைகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இந்நிலை நீடிக்கும் என்று நம்புகிறேன் நீங்கள் சோவியத் யூனியனுக்கு அப்பால் பயணம் செய்து முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளவர்க்கத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளை பகுத்தாய்ந்து தெரிந்து கொள்ளுவீர்கள் என்று நம்புகிறேன்.

கேள்வி : முற்போக்குசக்திகள் ஐக்கியம் பற்றிய உங்கள் கருத்து என்ன ? நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து வேலை செய்கின்றீர்களா ?

டேவிட் நார்த் : நீங்கள் புரிந்து கொள்ள வேண்டிய முதல் பிரச்சனை என்னவென்



லெனின்

சோவியத் மக்களுக்குஒருவிஷயம்தெளிவாகிவிடும். அதாவது சோவியத் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்றால் அதற்குசோவியத்யூனியனின் எல்லைகளுக்கு அப்பால் உள்ள தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தை ஏற்படுத்துவது அவசியமானது என்பது.

ஒரு விமரிசனம் செய்ய என்னை அனுமதியுங்கள், உங்கள் கேள்விகள், விமரிசனங்களை நான் வரவேற்கிறேன். ஒரு சிறிய சந்திப்பில் நான் கூறுவது எல்லாம் சரி என்று உங்களை ஒப்புக்கொள்ளவைக்க முடியாது. நீங்கள் கேள்வி கேட்க ஆரம்பித்துள்ளீர்கள், யாரும் அதை நிறுத்த அனுமதிக்காதீர்கள். என்னால்விமரிசனம்செய்யமுடியும் அது நீங்கள் தேசிய கட்டமைப்பு என்பதற்குள்ளாகவே விஷயங்களைப் பார்க்கின்றீர்கள் என்பதுதான். இதுபுரிந்துக்கொள்ளக்கூடியது தான். ஏனென்றால் பல பத்தாண்டுகளாக அரசாங்கம்உங்கள் மீது தனித்திருக்கும் தன்மையை புகுத்தி இருக்கின்றது ஆனால் வளர்ச்சிப் போக்குகளை சர்வதேசியக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளவேண்டியது அவசியம். சோவியத்யூனியனில் நடப்பவற்றை உலக நெருக்கடியின் ஒரு பாகமாக கருதவேண்டும். வெறும்சோவியத் நெருக்கடியாகவே மட்டிலும் காண முடியாது. நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்க்க இந்[illegible]தேசியக் கண்[illegible]

முல ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ''கம்யூனிஸ்ட்கட்சிகள்'' முதலாளித்துவ அரசியல் வாதிகளை ஆதரிக்கின்றனர் தொழிலாள வர்க்கம் ஜனநாயகக் கட்சிக்கு உட்படுத்தப்படுவதை கம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்கின்றது. ஆகையினால் கம்யூனிஸ்டு கட்சியுடன் கூட்டு உறவு என்றால்ஐக்கிய அமெரிக்காவில் வர்க்க சமாதானத்தை ஏற்று கொள்வதாக இருக்கும் கட்சியின் வேலை திட்டம் தான் முக்கிய பிரச்சனை. எங்கள் கட்சி தொழிலாள வர்க்கம் முதலாளி வர்க்கத்திலிருந்து பிரிந்து அரசியல் சுதந்திரத்தைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகப் போராடுகின்றது. நாங்கள் ஒரு பெரிய தொழிலாளர் கட்சியை அமைக்கவேண்டும் என்கிறோம். அது தொழிற்சங்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் ஆளும் சுரண்டும் வர்க்கங்களிலிருந்து சுதந்திரத்தன்மையை பாதுகாக்கவேண்டும். இந்தக்

கொள்கையை கம்யூனிஸ்ட் கட்சி முற்றிலும்எதிர்க்கின்றது கம்யூனிஸ்ட் கட்சி செயற்கையில் பல கூறுகளை ஏற்படுத்துகின்றது. அவர்கள் அரசியல் வாதிகளை யுத்தவெறியர்கள் என்றும்,சமாதானப்பிரியர்கள் என்றும் பிரிக்கின்றனர். இது அடிப்படையில் சோவியத் அதிகாரத்துவத்தின் ராஜதந்திர ஏஜண்டாகச்செயல்பட்டகாலத்திய நிலையிலிருந்து வருகிறது. கம்யூனிஸட் கட்சியுடன் ஐக்கியத்துக்கு எவ்வித அடிப்படையும் கிடையாது எங்களுடைய கட்சி தொழிலாள வர்க்கம் அதன் நலன்களுக்காக அரசியல் ரீதியானபோதனை பெறுவதற்கவே போராடுகின்றது. சோவியத் யூனியனுக்கு வெளியில் ஸ்டாலினிஸ்டுகள் கையாண்டகொள்கையை புறநிலையாகஆய்வுசெய்தால் அது ஒரு அழிவிலிருந்து மற்றொரு அழிவிற்கு இட்டுச்சென்றுள்ளது.

கேள்வி : நீங்கள் எங்கே வாழ்கின்றீர்கள்? உழைக்கின்றீர்கள்?

டேவிட் நார்த்: டெட்ராயிட். டெட்ராயிட்தான் நான் ஒரு. ஒரு உறுப்பினராக இருக்கும் கட்சியின் அரசியல் நிலையமாகும்.

கேள்வி : நீங்கள் நேரடியாகவே கட்சிக்கு உழைக்கின்றீர்களா ?

டேவிட் நார்த் : நாங்கள்ஒரு வாரப்பத்திரிகை பிரசுரிக்கின்றோம். அதற்கு புல்லட்டின் என்று பெயர். அதை நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன் நான் கிளம்புவதற்கு முன்னால் இதுதான் கடைசி இதழ்,.........

கேள்வி : இது போன்ற நல்ல தரமுள்ள செய்தித்தாளை நாமும் போடவேண்டும்என்று விரும்புகிறேன்.

டேவிட் நார்த் : இதை நாங்கள் எவ்வாறு செய்கிறோம் என்று கூறுகிறேன். நாங்கள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து நிதி திரட்டுகிறோம். ஒவ்வொரு மாதமும் நாங்கள்15,000டாலர் நிதியை வைத்திருக்கின்றோம். அதை திரட்டுவதற்கு நாங்கள்தொழிலாளர் வசிக்கும் இடங்களுக்கு செல்கின்றோம். எங்களுக்கு விளம்பரம் கிடையாது. இந்தப் பத்திரிகை முழுமையாகதொழிலாள வர்க்கத்தினராலேயே ஆதரிக்கப்படுகிறது.

கேள்வி : ஐக்கிய அமெரிக்காவில் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றி விட்டால் சிறப்பான வாழ்க்கை அங்கே ஏற்படும் என்று இதய சுத்தியாக நீங்கள் நம்புகின்றீர்களா ?

டேவிட் நார்த் : சந்தேகத்திற்கு இடமின்றி நம்புகின்றேன். ஐக்கிய அமெரிக்காவின் பிரமாண்டமான இயற்கை வளங்கள் நம்முடைய சமுதாயத்தை கட்டுப்படுத்தும் சிறு எண்ணிக்கை உள்ள கோடீஸ்வரர்களின் நலன்களுக்காக அல்லாமல் மக்களின் நலன்களுக்காக பயன் படுத்தப்பட்டால் மக்கள் நிலையில் கற்பனை செய்ய முடியாதபடி முன்னேற்றம் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

## தொழிலாளர் பாதை புதிய சந்தா விபரம்

| | நேரடி | தபால் |
|---|---|---|
| ஆறுமாத சந்தா (6 இதழ்கள்) | ரூ. 8-00 | ரூ. 9-00 |
| ஒருவருட சந்தா (12 இதழ்கள்) | ரூ. 16-00 | ரூ. 18-00 |

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

நீர்ப்பி அனுப்ப வேண்டிய முகவரி: தபால்பெட்டி எண் [illegible] பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-600 [illegible]

படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கு ஐரோப்பாவும்.

★4ம் பக்கத்திலிருந்து

யது பற்றி லெனின் பின்வருமாறு கூறுகிருர்: ''அறிவியல் தொழில்நுட்பம் அனுபவம் ஆகியவற்றின் பல்வேறுதுறைகளையும் சேர்ந்த நிபுணர்களது வழிகாட்டலின்றி சோஷலிசத்திற்கு மாறிச் செல்லுதல் சாத்தியமன்று. ஏனென்ருல் உழைப்பின் உற்பத்தித்திறனை உயர்த்துவதில் (முதலாளித்துவத்தால் சாதிக்கப் பெற்று உள்ளதுடன் அடிப்படையில்) முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் இன்னும் மேலான நிலைக்கு உணர்வு பூர்வமாய் வெகுஜன அளவில் முன்னேற்றம் வேண்டுமென சோசலிசம் கோருகிறது'' ...... .....

(லெனின் நூல் திரட்டு தொகுதி 3, பக்கம் 128).

'' சோவியத் ஆட்சியதிகாரததையும் சோவியத் நிர்வாக ஒழுங்கமைப்பையும் முதலாளித்துவத்தின் மிக நவீன சாதனைகளுடன் சேர்த்து இணைத்துககொள்வதில் நாம் காணும் வெற்றியையே பொறுத்திருக்கிறது சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு''

(அதே நூல் திரட்டு, பக்கம் 147).

சோவியத்யூனியனில் சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்காக சாத்தியப்பாட்டை ஏற்படுத்த வளர்ச்சி அடைந்த நாடுகளில் சோசலிசப்புரட்சி ஏற்படுவது அவசியமென்று லெனினும், டிராட்ஸ்கியும் வலியுறுத்தினர். லெனின் ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் விசேஷ ஏழாவது மாநாட்டில் கூறியதாவது :

''உலக வரலாற்றின் கண்ணேட்டத்தில் பார்க்கும்போது நமது புரட்சி தன்னந்தனியாக இருக்குமாஞல், வேறு நாடுகளில் புரட்சி இயக்கங்கள் இல்லாவிடில் அதன் இறுதி வெற்றியில் எவ்விதநம்பிக்கையும் நிச்சயமாக இராது. போல்ஷேவிக்கட்சி இந்தப் பணியினை தனியாக மேற்கொண்டபோது புரட்சி எல்லா நாடுகளிலும் முதிர்ச்சி அடைந்துவருகிறது. நாம் எத்தகைய இடர்ப்பாடுகளை அனுபவிக்க நேரினும் சரி எதிர்காலத்தில் என்னதோல்விகள் வந்தபோதிலும் சரிஇறுதியில் துவக்கத்தில் அல்ல,உலக சோசலிஸ்டு புரட்சி வரும் ஏனெனில் அது அணுகிக் கொண்டிருக்கிறது. அது முதிர்ச்சியடையும், ஏனெனில் அது முதிர்ச்சியுற்று வருகிறது, முழுமையாக முதிர்ச்சியுறும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் தான் இப்பணியினை மேற்கொண்டோம், இந்த இடர்கள் எல்லாவற்றிலிருந்தும் நமக்கு விமோசனம் தருவது ஐரோப்பா புரட்சியே என்று திரும்பவும் கூறுகிறேன் இந்த உண்மையினை முற்றிலும் கருத்தியலான இந்த உண்மையினை அடிப்படையாயும்வழிகாட்டியாயும்கொண்டு நாளடைவில் வெற்றுச்சொல்லாகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்''.

(லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 7, பக்கம் 224).

லெனின் கூறிய இந்த 'உண்மையினை அடிப்படையாயும் வழிகாட்டியாயும்கொண்டு செயல்பட மூன்றும் அகிலம் அமைக்கப்பட்டது ஆனல் லெனினுக்கு பின்னர் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின்''வழிகாட்டலின் கீழ்' மூனரும் அகிலம் சீரழிக்கப்பட்டு உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் காட்டிக் கொடுக்கப்பட்டன. 1943ல் மூன்றும் அகிலம் உத்தியோக பூர்வமாக ஸ்டாலினுல் கலைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைஏகாதிபத்தியததுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், தான் அக்டோபர் புரட்சியின் முன்நோக்கை (உலக சோசலிஸ்ட் புரட்சியை)முன்னெடுப்பவன் அல்ல என்பதை மேலும் ஏகாதிபத்தியத்திடம் நிரூபிப்பதற்காக ஸ்டாலினுல்செய்யப்பட்டது ஸ்டாலினுடைய இந் நிலைப்பாட்டைஅவரின்அடுதத வாரிசுகளான குருஷ்சேவ் பிரஷ்னேவ்...... கோர்பச்சேவ் ஏகாதிபத்தியத்துடன் 'சமாதான சுக வாழ்வு' என்று முன் எடுத்தனர். இப்படியாக ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் உலக சோசலிச புரட்சி மூல உபாயத்தை நிராகரித்து ஏகாதிபத்தியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட 'சமாதான சகவாழ்வு' என்பது லெனினுடைய உபாயம் என்று அபாண்டமான பொய்யையும் கூறினர்.

## உலகப் புரட்சி பற்றி லெனின்

இந்தப் பொய்யை நிர்மூலமாக்கும் லெனினு ய கூற்று பின்வருமாறு: ''தனது மூலதனத்தின் முழுவலிமையும், மிக உயர்ந்த முறையில் ஒழுங்கமைக்கப் பெற்றுள்ள தனது ராணுவத் தந்திரமும்—இதில் சர்வதேச முதலாளிதுவத்தின் அசல் பலமும அசல்உறுதியும் அடங்கியிருக்கின்றன— இவற்றுடன் கூடிய சர்வதேச ஏகாதிபத்திய எந்தசந்தர்ப்பங்களிலும் எந்த நிலையிலும் சோவியத் குடியரசுடன் அக்கம் பக்கமாக வாழமுடிந்திராது. அதன் யதார்த்த நிலையும் அதனுடன் பிணைந்துள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் பொருளாதார நலன்களும்அதற்குக்காரணமாகும் வர்த்தகத்தொடர்புகள் சர்வதேச நிதி உறவுகளின் விளைவாக அது சோவியத்குடியரசுடன் அக்கம் பக்கமாக வாழ முடிந்திராது. இந்தத்துறையில் மோதல் தவிர்க்கமுடியாதது. இதுதான்ருஷ்யப் புரட்சிக்கு ஏற்பட்ட மிகப் பெரும் இடர்ப்பாடு, அதன் முன் எழுந்த மிகப்பெரிய வரலாற்றுப்பிரச்சினை. சர்வதேசப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வேண்டிய அவசியம், ஒரு சர்வதேசப் புரட்சியை எழுப்பவும் நமது குறுகிய தேசியப் புரட்சியிலிருந்து உலகப்புரட்சிக்கான மாற்றத்தைக் கொண்டு வரவும் வேண்டிய அவசியம்''.( லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 7, பக்கம் 219-220).

இந்த சர்வதேசியமுன்நோக்கையும் கண்ணேட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டே டிராட்ஸ்கியும் இடது எதிர்ப்பு இயக்கமும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் காட்டிக் கொடுப்புகளுக்கு எதிராகபோராடினர். இந்தப்போராட்டத்தின் முக்கிய அம்சமாக நான்காம் அகிலம்1938ல் டிராட்ஸ்கியின் அரசியல் தலைமையில் அமைக்கப்பட்டது.

டிராட்ஸ்கியும், 1923ல் உருவாக்கப்பட்ட இடது எதிர்ப்பு அணியும் சோவியத்யூனியனுள் கனரக தொழிற்துறை (heavy industry) வளர்ச்சிஅடைவதற்கான ஒரு பரந்த வேலைத்திட்டத்தை முன்வைத்தனர். அதில் ஏனைய விஷயங்களுக்கு மத்தியில் உலகப் பொருளாதாரத்தில் சோவியத்யூனியனின் நிலையைபலப்படுத்துவதற்கானதிட்டமும் உள்ளடங்கி இருந்தது. உலகப்பொருளாதாரம்பற்றிய எவ்வித அறிவு அவசியமில்லை அல்லது சர்வதேச சந்தையில் சோவியத் தொழிற்துறையின் உற்பத்திப்பொருட்களின் தரத்தையும், விலையையும் புறக்கணிக்கலாம் என்பது போன்ற கருத்துக்களை டிராட்ஸ்கி நிராகரித்தார்.

## டிராட்ஸ்கியின் விஞ்ஞான சோசலிச வேலைத்திட்டம்

வெளிநாட்டு வர்த்தகத்தில் பாட்டாளி வர்க்க அரசின் ஏகபோகம் என்ற கட்டுக்கோப்புக்குள் சோவியத்பொருளாதாரத்திற்கும், உலக முதலாளித்துவ சந்தைக்கும் இடையிலான பிணைப்பை பலப்படுத்தும்படி டிராட்ஸ்கி ஊக்குவித்தார். எவ்வாருயினும் உலகப்பொருளாதாரத்தின் முக்கியத்துவம் மற்றும் வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளின் தொழில் நுட்பத்தையும் சடரீதியான மூலவள வளங்களையும் பெற்றுக்கொள்வதன்அவசியம் ஆகியவைபற்றிடிராட்ஸ்கியிற்கு இருந்தகண்ணேட்டம் அவருடைய பூரணமான சர்வதேசிய முன்னேக்கின் ஒரு அம்சமாகும். ஏகாதிபத்தியத்துடனை சோவியத் வர்க்கத்தின் நீடிப்பை அவர் புரட்சிகர சர்வதேசிய முன்நோக்கிற்கு பதிலாக முன் வைககவில்லை அதற்கு நேர்மாறாக 1927ல் இடது எதிர்ப்பு அணியின் வேலைத்திட்டம் பின்வருமாறு அறிவித்தது. 'பொருளாதார அரசியல் மற்றும் ராணுவ ஆதாரத்தைக்கொண்ட முதலாளித்துவ சுற்றி வளைப்பில் இருந்து எந்த ஒரு உள்நாட்டுக் கொள்கையும் மீட்சியை தராது உள்நாட்டுப்பணி என்பது எம்மை நாமே ஒரு பொருத்தமான வர்க்கக் கொள்கையினுலும் தொழிலாள வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையேயான பொருத்தமான உறவுகளினுலும்பலப்படுத்துவதுடன் சோசலிச கட்டுமாணத்திற்கான பாதையில் எவ்வளவு வேகமாக சாத்தியமோ அந்த அளவிற்கு முன்னேறவேண்டும். சோவியத் யூனியனின் பிரமாண்டமான உள்நாட்டு வளங்கள் முழுமையாக இதை சாத்தியமாககின்றன. அதே நேரத்தில் உலக முதலாளித்துவசந்தையை இதேதேவைக்காக உபயோகிக்கும்போது நாம் எமது அடிப்படை வரலாற்று கணிப்பீடுகளை உலக சோசலிசப் புரட்சியின் மேற்கொண்ட வளர்ச்சியுடன் சேர்த்து இணைக்கிருேம். குறிப்பிட்ட முன்னேறிய நாடுகளில் இதன் வெற்றி முதலாளித்துவ சுற்று வளைப்பு வளையத்தை உடைக்கச்செய்வதுடன் கனமான ராணுவ சுமையிலிருந்தும் எம்மை விடுவிக்கும். இது தொழில் நுட்பத்துறையில் எம்மை பிரமாண்டமானஅளவு பலப்படுததுவதுடன் நகரிலும் நாட்டிலும மற்றும் ஆலையிலும் பாடசாலையிலும் நமது முழுமையான வளர்ச்சியை முடுக்கி விடும்.''

டிராட்ஸ்கியும், இடதுசாரி எதிர்ப்பு அணியினரும் மேற்கூறிய திட்டங்களின்படிசோவியத்யூனியன் பொருளாதார பின்னடைவிலிருந்து மீள்வதற்கான சரியான பாதையைகாட்டினர். ஆனல் இவை அனைத்தும் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவத்தினுல் நிராகரிக்கப்பட்டது அன்று டிராட்ஸ்கிச் இயக்கம் முன்வைத்த புரட்சிகர வேலைத்திட்டங்கள் சோவியத் யூனியனுக்கு மட்டும் அல்ல இரண்டாம் உலகப்போரின் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனவிலும் ஊனமுற்று தோன்றியதொழிலாளர்அரசுக்கும் பொருத்தமானவையே.

## விஞ்ஞான தொழில் நுட்பப்புரட்சி

சி.பி.எம் தலைமை கூறுவதாவது : ''விஞ்ஞான தொழில் நுட்பப்புரட்சியின் பயன்களை பொருளாதார உற்பத்தியுடன் ஒருங்கிணைக்க விடாதவாறு அரசு அதிகாரவர்க்கப்போக்கு தடுப்பது பொருளாதாரவளர்ச்சி மட்டத்தில் உள்ள பின தங்கிய நிலைமையை அதிகரித்தது இதன் விளைவாக மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டு அரசு அன்னியப்படும்போக்கைபலப்படுத்தியது''

விஞ்ஞான, தொழில் நுட்பப் புரட்சியின் பயன்களைபெற்றுக் கொள்ளாமல் தடுத்தது அந்த நாடுகளில் உள்ள ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் பல பத்தாண்டுகளாக கடைப் பிடித்து வந்த மார்க்சிச விரோத 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்' கட்டும் கொள்கையே என்பதை தொழிலாளர்களுக்கு சொல்லாது மூடி மறைப்பதன் மூலம் இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைகள் தமது மார்க்சிச விரோத தன்மையை மேலும் வெளிக்காட்டி உள்ளனர்'

கிழக்கு ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த மக்கள், கம்யூனிசவிரோத சக்திகளின் சூழ்ச்சிகளுக்குபலியாகிலட்சக்கணக்கில் தெருக்களில் வந்து ஆர்ப்பாட்டம் செய்வதாகசி,பி.எம். தலைமைகுழு அறிக்கை பின்வருமாறு கூறுகிறது....... ''மக்கள் மத்தியில் தத்துவார்த்த போதனை அளிப்பது புறககணிக்கப் பட்டது. மக்கள் மத்தியில் சோசலிஸ்ட் உணர்வைவளர்க்கும் கடமையும் மனித சமுதாயத்தின் உயர்ந்த வடிவத்தை உருவாக்குவதில் பெரும் எண்ணிக்கையில் மக்களைபங்கெடுத்துக்கொள்ள அவர்களை தட்டியெழுப்பும கடமையும் புறக்கணிக்கப்பட்டது. இது கம்யூனிஸ்ட் எதிர்ப்பு சக்திகள் வளர்வதற்கு வாய்ப்பு அளித்தது'' அதேஅறிக்கையின்பின் பகுதியில் ''...கடந்த நாற்பது ஆண்டு காலமாக சோசலிசத்தின் கீழ் இருந்த கிழக்கு ஐரோப்பிய மக்கள்..... என்று சொல்லப்படுகிறது.

கடந்த நாற்பதாண்டுகாலம் அங்கே சோசலிசம் இருந்து இருந்தால் மக்கள் மத்தியில் சோசலிஸ்ட் உணர்வு வளர்க்கபடாமல் அந்த 'சோசலிசம்' எவ்வாறு 40 ஆண்டுகள் நீடித்தது என்பதையோ 40ஆண்டு கால'சோசலிசத்தின்' பின்ஏன் லட்சக்கணக்கில் மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக வீதியில் வந்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர் என்பதை விளக்க சி.பி.எம் தலைமை முயற்சிக்கவில்லை சிடுமுஞ்சித்தனத்துடன் முன்னுககுப்பின் முரணை ஸ்டாலினிஸ்டுகளின் வழக்கமான பாணியில் பூசி மெழுக முயற்சிக்கிறது.

விஞ்ஞான சோசலிசத்தை பற்றி வாய் சவடால் அடிக்கும் சி.பி எம். தலைமை உண்மையில் அதற்கு மாசு கற்பிக்கும் வேலையிலேயே ஈடுபட்டு உள்ளது. காங்கிரஸ் ஆட்சியின்போது அதன் உள்நாட்டுக் கொள்கை பிற்போக்கானது ஆனல் வெளிநாட்டுக் கொள்கை முற்போக்கானது என்று பித்தலாட்டம் செய்தனர். இப்போது டாட்டா பிர்லாக்களின் மற்றொரு பிரதிநிதிகளான தேசிய முன்னணி ஆட்சிஉள்நாட்டு,வெளிநாட்டு அனைத்துக் கொள்கைகளிலும் முற்போக்கு என்றும், அது 51 வருடம் தொடர்ந்து ஆட்சி செய்ய நிபந்தனைஅற்ற ஆதரவு அளிப்பதாக சி.பி.எம். தலைமைகூறியுள்ளதுதாம்மார்க்சிசம் லெனினிசத்தையும்,பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தையும்உறுதியாகஉயர்த்திப் பிடிக்கிறதாகவும்'' உலக முழுவது முள்ளபிற்போக்கு சக்திகளுக்கு (இந்தியாவைத் தவிர?) எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் சோசலிசத்திற்கான போராட்டத்தை வலுப்படுத்துவது என்ற தனது லட்சியத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அறிக்கையில் கூறி உள்ளது. இதுதான் 'ஸ்டாலின் சோசலிசத்தின்' வழி வந்த நம்பூதிரிபாட், ரணதிவேக்களின் சோசலிசம்!

## டிராட்ஸ்கிசம் தான் மார்க்சிசம்

மார்க்சிசத்தின், விஞ்ஞான சோசலிசத்தின் அரிச்சுவடிகளை திரித்துபுரட்டும்இவர்கள் உண்மையிலமார்க்சிசத்திற்காகடிராட்ஸ்கிசத்திற்காகபோராடுபவர்கள்மீதுஅபாண்டமானகரிபூசல்கள்செய்துவருகின்றனர்இப்படியான ஸ்டாலினிச 'சோசலிச' தலைமைகளுக்கு எதிராக சி.பி.எம் கட்சி ஊழியர்கள் கிளர்ச்சி செய்து விஞ்ஞான சோசலிசத்திற்காக போராடவேண்டும். இப்போராட்டத்தை முன்னெடுக்க கட்சியினுள் முழுமையான உட்கட்சி ஜனநாயகத்திற்காக போராடவேண்டும். இதற்கு தடையாக இருக்கும் தலைமைகளை தூக்கி வீச வேண்டும்.

அனைத்துக்கும் மேலாக 1923ல் இருந்து சோவியத் யூனியனுக்குள் அதிகாரத்துவத்தின் வளர்ச்சி பற்றிஎச்சரிக்கை செய்தும் பின்னர் ஸ்டாலின் தலைமையிலான அந்த அதிகாரத்துவத்தின் மார்க்சிச விரோத போக்குகளை எதிர்த்து சமரசமின்றி டிராட்ஸ்கி நடத்திய அரசியல், தத்துவார்த்த போராட்டங்களை அறிய டிராட்ஸ்கியினதும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினதும் நூல்வெளியீடுகளை படிக்குமாறும், அது பற்றி விவாதிக்க முன் வருமாறும் சோசலிசப் புரட்சியின் உலகக்கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டசோசலிசத் தொழிலாளர் கழகம் அழைக்கிறது.


## சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேருங்கள்!

தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர டிராட்ஸ்கிசத் தலைமையைக் கட்டுங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட இந்தியாவில் உள்ள டிராட்ஸ்கிச இயக்கமாகிய சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் உறுப்பினர் ஆகுங்கள் !

பெயர்..............................................

முகவரி..............................................

..............................................

நிரப்பியபின் அனுப்ப வேண்டிய முகவரி :
தபாற் பெட்டி எண் 968,
பெரம்பூர் பாராக்ஸ் சென்னை-600 012.


படிப்பகம்

www.padippakam.com



# கிழக்கு ஜெர்மனி தேர்தலில் டிராட்ஸ்கிஸ்டுகள் போட்டி !

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் ஜெர்மன் பகுதியான சோசலிசத் தொழிலாளர்களின் கழகம் (BSA), மார்ச் 18, 1990ல் கிழக்கு ஜெர்மனியில் நடைபெற இருக்கும் மக்களவைத் தேர்தல்களில் போட்டியிடுவது என்று தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானம் ஜனவரி, 28, 1990ல் சோசலிசத் தொழிலாளர்களின் கழகம் (பி.எஸ்.ஏ) நடத்திய சிறப்பு மாநாட்டில் எடுக்கப்பட்டது.

இந்தத் தேர்தல்களில் பி.எஸ்.ஏ போட்டியிடும் நோக்கம், ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிராகவும், முதலாளித்துவ மீட்சி அபாயத்திற்கு எதிராகவும் புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கிழக்கு ஜெர்மனி தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டவும், அதனை மேற்கு ஜெர்மனி மேற்கு ஐரோப்பிய தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியப்படுத்தவும் ஆகும். பி.எஸ்.ஏ நடத்திய சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்ட தீர்மானத்தின் முக்கிய அச்சாணி சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியமாகும்.

45 வருடங்களாகசர்வதேச தொழிலாள வர்க்கத்திடம் இருந்து கிழக்கு ஜெர்மனி தொழிலாளவர்க்கத்தை தனிமைப்படுத்தி சுவர்கள் மூலமும், மின்வேலியிடப்பட்ட கம்பி வளையங்களின் மூலமும் தடைசெய்து ஒரு சுதந்திரமான சோசலிச சமூகத்தை கட்டவிடாது உல்ப்ரிக்ட், ஹொனேகர், கிரென்ஸ் ஆகியோரின் தலைமையின் கீழ் ஒடுக்குதல் செய்து வந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் இன்று மேற்கு ஜெர்மனி ஏகாதி பத்தியங்களுடன் நெருக்கமாக இணைந்து, மத்திரோ, கைசி தலைமைகளின் கீழ் அதனை தொடரவிடாது தடுக்கவேண்டுமென்று நேரடியாக பி.எஸ.ஏ.தொழிலாளவர்க்கத்திற்கு அழைப்பு விட்டுள்ளது: பி.எஸ்.ஏ அறிக்கை கூறியதாவது.

''இந்த நூற்றாண்டில் இரு உலகப்போர்களையும் ஹிட்லரின் பாசிசத்தையும் உண்டு பண்ணிய முதலாளித்துவ திருவனங்கள் கிழக்கு ஜெர்மனிதொழிலாளர்களின் நல்ல வாழ்க்கைக்காகவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் இங்கே வரவில்லை அவர்கள் இங்கே வருவது போலந்து, ஹங்கேரி சீனு ஆகிய நாடுகளில் அறிமுகப்படுத்தியகுரூரமான வறுமைநிலைமையைக்கொண்டு வரவும், உலக சந்தையிலும் ஒரு தனி ஐரோப்பிய சந்தையிலும அவர்கள் நடத்தும் வர்த்தகப்போருக்கான மலிந்த கூலிகளை சேமிப்பதற்காகவும் ஆகும் அப்படியான முதலாளித்துவ மீட்சிக்கு எதிராக தொழிலாளர்களின் அனைத்து முன்னைய சமூக வெற்றிகளையும காக்குமாறு பி.எஸ்.ஏ அழைப்புவிடுகிறது.

''வேலைகளுக்கு உள்ள அனைத்து அபாயத்தையும், விலை உயர்வுகளையும், மானியங்களை நிறுத்துவதையும் எதிர்த்தும், வேலைப்பளுவுக்கு எதிராகவும் மற்றும் தொழிலாளர்களின் சேமிப்புகளை 




அக்டோபர் புரட்சிக்கு தலைமை தாங்கிய போல்ஷேவிக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவத்தினுல் படுகொலை செய்யப்பட்டனர்.

செல்லாததிப்பிழக்கச் செய்யும நாணய ஒருங்கிணைப்பையும் எதிர்த்துப் போராட அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் பி. எஸ். ஏ முன்னெடுக்கும்.

''திட்டமிட்ட பொருளாதாரத்தை அழிப்பதைதொழிலாள வர்க்கம் தடுத்துநிறுத்த வேணடும் அது அதிகாரத்துவத்தின் கரங்களில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட வேணடும். அனைத்து ஒட்டுண்ணிகளையும் அதிகாரிகளையும்சுத்திகரித்து எடுக்க வேண்டும். அனைத்து மட்டங்களிலும் அது தொழிலாள வர்க்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட வேண்டும்.

''வட்டமேசை'' நாடுகளில் பங்கு கொண்ட கட்சிகள் பற்றி பி.எஸ்.ஏ எச்சரித்தது: ''இப்படியான கட்சிகளின் வேலைத்திட்டம் குட்டிமுதலாளித்துவ, முதலாளித்துவ பிரிவினரை பிரதிநிதித்துவம் செய்கின்றது. தொழிலாள வர்க்கத்தை அல்ல. அவர்கள் ஸ்டாலினிஸ்டுகளின் அரசி அடக்குமுறையின் அனைத்து சாதனங்களையும்ஒழிக்கவேண்டும் என்று கோரவில்லை, ஆனால் அதன் தலைமையிலும் நிர்வாகத்திலும் தமக்கொரு இடம் கேட்கின்றனர். அவர்களின் இலட்சியம் தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றம் அல்ல ஆனல் ஸ்டாலினிசத்தின் சர்வாதிகாரத்தை முதலாளித்துவத்தால் பிரதியீடு செய்வதாகும்''.

''இப்படியான சூழ்ச்சிகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கம் தன்னை பாதுகாக்க அதன் சொந்த ஆட்சிஅமைப்புகளை தொழிலாளர் சபைகளை உருவாக்க வேண்டும் என்று பி.எஸ்.ஏ அழைக்கிறது. அவை ஆலைகளிலும் தொழிலாளர் மாவட்டங்களிலும் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவையாக இருக்கவேண்டும்''.

கிழக்கு ஜெர்மனியில்வெற்றிகரமான முதலாளித்துவ மீட்சி ஏற்படுமாயின் அது மேற்கு ஜெர்மனி தொழிலாளர்களுக்கும் ஒரு பெரும் அடியாக இருக்கும் என்று பி.எஸ் ஏ எச்சரித்தது மேற்கில் சமூக வெற்றிகளையும், சம்பளங்களையும் அழிப்பதற்கு இதுமுதலாளிகளால்உடனடியாக பயன்படுத்தப்படும்.

'' ஒரு பொது புரட்சிகர வேலைத்திட்டத்திற்கான ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலமே ஸ்டாலினிஸ்டுகளையும், முதலாளிகளையும் தோற்கடித்து தொழிலாளிவர்க்கம ஆட்சியை கைப்பற்ற முடியும் பொருளாதார, அரசியல் ரீதியாக நெருக்கமாக பிணைக்கப்பட்ட ஐரோப்பாவில் ஐக்கிய ஐரோப்பிய சோசலிச குடியரசுகள் என்ற அமைப்பின் மூலமாக மட்டுமே சாத்தியமாக தொழிலாளர்கள்தமது ஆட்சியை ஏற்படுத்தி அதனை பிரயோகிக்க முடியும். இதுவே இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழியாகும்.

தீவிர தொழில் நுட்பபுரட்சியிலும், பூகோளமயப்படுத்தப்பட்ட உற்பத்தியிலும் உலகப்பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும், பிரதேசங்களுக்கும் இடையே நெருக்கமான பிணைப்பு ஏற்பட்டுள்ளது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த அடிப்படையான மாற்றங்களே கிழக்கு ஜெர்மனி நெருக்கடியின் தோற்றுவாயாகும். உலகப் பொருளாதாரத்தின் இந்த வளர்ச்சி போக்கானது முதலாளிகளும், ஸ்டலினிஸ்டுகளும் தமது ஆட்சியின் தளமாக கொண்டுள்ள தேசிய அரசு அமைப்புவடிவத்துடன் இணக்கம் காண முடியாததாக இருக்கின்றது.

''தனி ஒரு நாட்டில் சோசலிசம்''என்றஸ்டாலினிசத்தின் முழு பிற்போக்குத்தன்மையும் இதனால் நிலையும் அம்பலமாகி உள்ளது. 40 வருடங்களின் பின்னர் கிழக்கு ஐரோப்பாவிற்குபி.எஸ்.ஏ டிராட்ஸ்கிச வேலைத்திட்டத்தை எடுத்துச் செல்கிறது. பல பத்தாண்டுகளாக டிராட்ஸ்கிஸ்டுகள் ஏகாதிபத்திய வாதிகளால் பாசிஸ்டுகளால் மட்டுமல்ல ஸ்டாலினிஸ்டுகளாலும் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம் அகிலத்தின் ஜெர்மன் பகுதியின் தலைவராக இருந்த ஒஸ்கர் ஹிப்ப முதலில்சிறைப்படுத்தப்பட்டுதுன் புறுத்தப்பட்டார், 1948ல் அவர் சோவியத் ரகசிய போலிசினுல் கைது செய்யப்பட்டு 8 வருடம் சிறைத்தண்டனை அனுபவித்தார், அத்தண்டனை உல்ப்ரிக்ட்டின் ஸ்டாலினிச சர்வாதிகாரத்திற்கு எதிராக தொழிலாளர் ஜனநாயகத்துக்கும்,சோசலிச வேலைத்திட்டத்திற்கும் போராடியதற்காக அவருக்கு வழங்கப்பட்டது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிராக டிராட்ஸ்கிசம் வரலாற்று ரீதியாக வெற்றி கண்டது, இது இன்று ஸ்டாலினிச அதிகாரத்துவங்களுக்கு.எதிராக பல லட்சக்கணக்கில் கிளர்ந்து எழுந்துள்ள தொழிலாளர்களின் எழுச்சியில் பிரதிபலிக்கிறது. தோல்வி கண்டது ஸ்டாலினிசமே தவிர சோசலிசம் அல்ல ஒரு உலக சோசலிசக் குடியரசின் பகுதியாக ஐக்கிய ஐரோப்பிய சோசலிசக்குடியரசுகளை அமைப்பதற்காக சர்வதேச தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியம் பூண்டு ஸ்டாலினிச் அதிகாரத்துவத்தையும, முதலாளித்துவத்தை தூக்கி வீசாவிட்டால் முதலாளித்துவத்தின் மிருகத்தனமான சுரண்டலுக்கு கிழக்கு ஐரோப்பா தொழிலாளர் வர்க்கம் தன்னைஉட்படுத்துவதாக இருக்கும் என்று பி.எஸ். ஏ எச்சரித்துள்ளது.

பி.எஸ்.ஏ தனது அறிக்கையை வேலைத் திட்டத்தை படித்து, விவாதித்து பி.எஸ். ஏ.இல் இணைய முன்வருமாறு தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளது.

★2ம் பக்கத்திலிருந்து

று ஐக்கியம் செய்யும் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். இந்திய உபகண்டத்தில் உருவாக்கப்பட்ட மத, இனவாத அரசுகளை தகர்த்தெறிந்து உலக சோசலிசக் குடியரசின் பகுதியாக உபகண்டத்தில் ஒரு ஐக்கிய சோசலிசக் குடியரசுகளை அமைக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஒடுக்கப்படும் தேசிய இனங்களின்சுய நிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்யவேண்டும்.

காஷ்மீரிலுள்ள தொழிலாளர்களும், வறிய மக்களும் பாகிஸ்தான் மதவாத ஆட்சியாளர்களின் உதவியுடன் காஷ்மீரில் ஒரு மதவாத அரசை ஏற்படுத்தும் நோக்கத்துடன் செயற்படும் அனைத்து முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ இயக்கங்களையும் நிராகரிக்க வேண்டும். இந்தியா, பாகிஸ்தான் தொழிலாளர்களுடன் புரட்சிகர ஐக்கியம் பூண்டு இந்திய, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அடிப்பதுடன் இந்திய உபகண்டத்தின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்கும் போராட்டத்துகு ஆதரவாக அணிதிரளவேண்டும்.

இந்த புரட்சிகர முன்னேக்கில் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத்தொழிலாளர் கழகத்தை ஜம்மு-காஷ்மீரிலும் இந்திய உபகண்டத்தின் ஏனைய பகுதிகளிலும் கட்டி எழுப்ப முன்வருமாறு வர்க்க நனவுடைய தொழிலாளர்களையும், புரட்சிகர இளைஞர்களையும் அழைக்கிறோம்.

**ஸ்டாலினிச சி.பி.எம். சி.பி.ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனை அவற்றின் உறவுகளை துண்டித்து, தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி !**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக S. சக்தி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு M. செல்வராஜ் அவர்களால் பாணி அச்சகம், 77 வெங்கடாத்திரி தெரு சென்னை-12ல் அச்சிடப்பட்டது.

படிப்பகம்